Koviloor Digital Library

ஸ்ரீ பஞ்சதசி

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 6155

உரை :-

பிரம்மானந்தர்

T. Tholasilinga Chetty & Co

The Gnana Sagara press,

Mint Street

1903.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Acc No. 6155

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌶𑍍𑌰𑍀𑌗𑌣𑍇𑌶𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌹𑌂𑌸𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌧𑍁𑌰𑍀𑌣 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌣𑍍𑌯𑌯𑍋𑌗𑌿𑌵𑌰𑍍𑌯𑌕𑍃𑌤

𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍀

𑌤𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑌵𑌰𑍍𑌯 𑌰𑌾𑌮𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌖𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌰𑌚𑌿𑌤
𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾
𑌶𑍍𑌰𑍀𑌮𑌧𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌪𑍁𑌰𑌨𑌿𑌵𑌾𑌸𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌭𑌾𑌸𑍍𑌕𑌰
𑌸𑌕𑌲𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌜𑌨𑍋𑌪𑌕𑌾𑌰𑌕
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑍍𑌰𑍀 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌵𑌿𑌰𑌚𑌿𑌤
𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾
𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍀 𑌪𑌦𑌯𑍋𑌜𑌨𑍀 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌭𑌾𑌷𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾.

[illegible]
[illegible]
[illegible] 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾. [illegible]
[illegible]
[illegible]

𑌵𑌿𑌚𑌾𑌰𑌪𑍍𑌰𑌵𑍀𑌣 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌘𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍇𑌣
𑌮𑌧𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌪𑍁𑌰𑌨𑌿𑌵𑌾𑌸𑌿 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑍍𑌯𑌾𑌂
𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂 𑌪𑌰𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌃.

[illegible] 𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌶𑌾𑌲𑌾𑌯𑌾𑌂
[illegible]

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌵𑌸𑍁𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰 𑌵𑍈𑌶𑌾𑌖 [illegible]
𑌵𑌿𑌜𑌯𑌨𑍍𑌤𑍇𑌤𑌰𑌾

PRINTED BY
T. THOLASILINGA CHETTY & CO.,
THE GYANA SAGARA PRESS, 187. MINT STREET,
Madras.
1905.

KOVILOOR MADALAYAM

Copy-Right and Right of Translation are Reserved.

Price Rs. 3-8-0—Postage Extra.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிரம்மஸ்ரீ, ஸ்ரீராமலிங்க
பிரம்மானந்தயதீசுவரஸ்வாமிகள்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

முகவுரை.

ஸ்ரீ ராமலிங்க பிர்மானந்த குருவே நம:.

நேரிசை வெண்பா.

சீர்பூத்த செல்வத் திருவாலவாயதனில்
தார்பூத்த ராமலிங்கத் தற்பரனும்—ஏர்பூத்த
ஞான வடிவாகி நன்மையுறு நற்குருவா
மானவன் றன்னருளினால்.

சகலமான ஜகத்திற்கதிட்டானமாயும் நித்திய நிரஞ்சன நின்மல வடிவமாயும் சர்வ வியாபகமாயும் ஸ்வகதஸஜாதீய விஜாதீய பேதமற்றதான ஏகமேவாத் துவிதீய சத்வஸ்துமாத்திரமாயுமிருக்கிற பிர்மம் சிருட்டிக்குமுன் பிரகாசித்தது. அனாதிகாலமாயிருக்கிற அவித்தியாவாசனையாற் கட்டுண்ட ஜீவர்கள் கற்பாந்தத்தில் சகல வாசனைகளுடன் மெழுகுருண்டையில் சொர்ன இரேணுக்கள் அடங்குவனபோல் லயமாயிருந்தார்கள். முற்பிறப்பிற்செய்த புண்ணியகன்ம விசேடத்தாலும், மாயாசக்தியின் விசித்திரத்தாலும், பழுதையிற் பாம்புபோல் சமாய பிர்மத்தில் இச்சகம் முதலான சகல கற்பனைகள் உண்டாயின. முன்னுரைத்த சக்தியின் மகிமையால் அட்சர உருவனான ஈசனிடத்திருந்து மூச்சுக்காற்றுக்கால்போல் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்கிற நான்மறைகளுண்டாயின. இருக்கு ௨௧ (21) சாகையுடனும், எசுர் ௱௯ (109) சாகையுடனும், சாமம் ௲ (1000) சாகையுட்னும், அதர்வணம் ௫௰ (50) சாகையுடனும் விரிவாகி யொவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு உபநிடதமேற்பட்டது, அவைகளிலிருந்து சக்கரவர்த்தித் திருமகனான ஸ்ரீ ராமபிரான் மகா புத்திமானும் சர்வசாந்திர சம்பன்னனும் நவவியாகரணியாயும் இராமகாரிய துரந்தரனுமிருந்த அஞ்சனைகுமரனனுமானுக்கு அவ்வுபநிடதசாரார்த்தங்களை "ஈசாவாசியம்" முதல் "முக்திகோ" உபநிடதமீறாய் ௱௮ (108) உபநிடதங்களாய் முன் விரித்துரைத்தனர். அதின் சாரமறிய சக்தியற்றவர்களாயும், சமுசார சாகரத்தில் மூழ்கிக்கரையேற வல்லமையற்றவர்களாயுமிருக்கிற சகல மாணாக்கர்களும் பவக்கடனீங்கிப் பாக்கியராக, ௰௫ (15) பிரகரணங்களடங்கிய பஞ்சதசி யென்கிற நன்னூலை வடமொழியில் மகாதயாளுவாயும், சர்வலோக பூஜ்யராயும், பழமறை பாஷ்யருமான ஸ்ரீ வித்தியாரண்ணியமாமுனிவரா லியற்றப்பட்டது. அன்னோர் சீடகோடிகளிலொருவரான ஸ்ரீ இராமகிருஷ்ண வித்வானால் வடமொழியிலேயே வியாக்கியானம் செய்யப்பட்டுளது. அதைக்கற்றோரன்றி மற்றோர் தெற்றெனவறிதல் சிரமசாத்தியமானதால், கல்வி, யறிவு, ஒழுக்கம் மூன்றுமொருங்கே பெற்றவரான ஸ்ரீ ராமலிங்க சாஸ்திரிகளென்ற பிரமானந்த எதிகளால் பூர்வ ஆச்சி

Koviloor Digital Library

ராபத்திலேயே மேற்கூறிய நூலிற்குத் தெளிவான பதவுரையும், அன்வயரூப
மான பொருளும், அவ்விடங்களுக்கேற்ப புத்திக்கெட்டாத சமயோசித யுக்
திகளும், மற்றையமேற்கோள்களும் வேண்டியமட்டில்சேர்த்துஎழுதிவைத்த
பிரதியைக்கொண்டு அன்னோர் ஜேஷ்ட புத்திரனை யான் நன்கு சோதித்து
ம், அத்துடன் என்னால் இயற்றப்பட்டிருக்கிற ஒவ்வொரு பிரகரணத்திற்கு மு
ன் அப்பிரகரணசாராம்சத்தை சங்கிரமாக தொகுத்து நல்ல செந்தமிழ்நடை
யிலெழுதிச்சேர்த்தும்.நம்குருவைபவமான ஸ்ரீ ராமலிங்க விஜயமென்ற சம்
ஸ்கிருத சுலோகங்களும், அதினர்த்தம் தமிழ்நடையில் என்னுலெழுதிச்சேர்
க்கப்பட்ட புத்தகத்தையும் சம்ஸ்கிருத வித்துவானுன ஸ்ரீநிவாசாரியாளாலு
ம் தமிழ் புலவருன மதுரை தெற்கு ஆவணி மூலவீதி ஸ்கூல்மாஸ்டர்.. எம்.
கோவிந்தசாமி ஐயராலும் நன்கு பரிசோதிக்கச்செய்து சுலோகங்களை தேவ
நாகர எழுத்துகளிலும், கிரந்த எழுத்துகளிலும், மேற்கூறியவைகளை ஓரே பு
த்தகமாக சுத்தப்பதிப்பிலும் அச்சிட்டு நல்ல காலிகோபயின்டிலும் பயண்டு
செய்து விலைக்கு தயாராய் வைத்திருக்கிறேன். இப்புத்தகம் ரிஜிஸ்டர் கா
பிரைட்டுடன் கூடியிருப்பதால் தபால் சார்ஜ் நீங்களாக இதின் விலை ரூபா.
3-8-0. இப்புத்தகத்திற்கு முன் பணம் வெகு பேர்கள் கொடுத்திருப்பதாலு
ம் காபிகள் சொல்பமாய் போயிருப்பதாலும் ஜாக்கிரதையாய்அடியிற்கண்
டவிலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். புத்தகம் துரிதமாக அச்சு
போட்டமையால் அதில் என்னை யறியாமல் சில பிழைகள் ஏற்படகூடும். அ
தை பெரியோர்கள் மன்னித்து குற்றம் நீக்கிக்குணத்தைக்கைக்கொள்வீர்க
ளாக.இப்புத்தகம் நம்பிதாவால் சுமார் (26)வருடத்திற்கு முன் எழுதியிருந்த
து. மதுரை. ம-ள-ள-ஸ்ரீ. நா. கி. நா. குப்பய்யரவர்கள்.சோமலிங்கா. வெங்கி
டகிருஷ்ணய்யவவர்கள் முதலான பக்த சிகாமணிகள் சிரமமெடுத்துகொண்டு
தங்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களுக்கு முன்பணம் கொடுத்தும் ஷை
குப்பய்யரவர்கள் மற்றவர்களைக்காட்டிலும் ஜாஸ்தி புத்தகங்களுக்குப்பணம்
கொடுத்ததுமன்றி. புத்தகம் முடிவு பெறமார்க்கமில்லாதிருந்ததைக்குறித்து
என் வேண்டுகோளுக்கிணங்கி பைண்டுமுதலான சகல சிலவுக்கு வேண்டிய
ரூபாயை தடையன்றியில் கொடுத்து முடிக்கச்செய்து அழியாத தர்மத்தை
க்கைக் கொண்ட அவர்களின் வம்சபாரம்பரியமா யிப்போதிருக்கும் செல்வ
த்திருக்கதிகமாய் நீடூழி காலம் வரை சுகமாய் வாழக்கடவர்களென நம்தேவ
னை வணங்கிக்கொண்டிருக்கிறேன், ஞானசாகர முத்திராக்ஷசாலாதிபரா
ன, தி. துளசிலிங்கஞ்செட்டி யவர்கள் விரைவில் ரெம்பசிரமமெடுத்து முடி
த்து கொடுத்ததைப்பற்றி மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

தங்களன்புள்ள நேசன்,
எம். ஆர். சுந்தரராம சாஸ்திரிகள்,
நெம்பர் 4, கணபதி அக்கிரகாரம், மதுரை.

Koviloor Digital Library

श्रीरस्तु ।

श्रीगणेशाय नमः ।

श्रीरामानुजब्रह्मानन्दगुरवे नमः ।

श्रीरामानुजविजयः ।

[illegible]

[illegible] ॥ ௧௧ ॥ [illegible]
[illegible] ॥ ௧௨ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௧௩ ॥ [illegible]
[illegible] ॥ ௧௪ ॥
[illegible]
[illegible] ॥ ௧௫ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௧௬ ॥ [illegible]
[illegible] ॥ ௧௭ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௧௮ ॥ [illegible]
[illegible] ॥ ௧௯ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௨௦ ॥ [illegible]
[illegible] ॥ ௨௧ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௨௨ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௨௩ ॥ [illegible]
[illegible] ॥ ௨௪ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௨௫ ॥ [illegible]
[illegible] ॥ ௨௬ ॥
[illegible]
[illegible] ॥ ௨௭ ॥ [illegible]
[illegible] ॥ ௨௮ ॥
[illegible]
[illegible] ॥ ௨௯ ॥ [illegible]
[illegible]
[illegible] ॥ ௩௦ ॥ [illegible]
[illegible] ॥ ௩௧ ॥ [illegible]

Koviloor Digital Library

[illegible — 31 lines of Grantha-script text]

Koviloor Digital Library

𑌶𑌮𑌾𑌦𑌿 𑌮𑌨𑍍𑌦𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌤𑍀𑌵𑍍𑌰𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌂 𑌤𑌥𑌾 ॥ ௫௨ ॥ 𑌅𑌹𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾
𑌸𑍍𑌮𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾𑌦𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾
𑌰𑍍𑌥𑌂 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌗𑌤𑌮𑍍 ॥ ௫௩ ॥ 𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌿 𑌹𑍍𑌯𑌥
𑌰𑍍𑌵𑌣𑌵𑍇𑌦𑌸𑍍𑌥𑌮𑍍 । 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌞𑍍𑌚 𑌮𑌹𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌜𑌹𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍇𑌵 𑌚 ॥
௫௪ ॥ 𑌅𑌜𑌹𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌜𑌹𑌦𑌜𑌹𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 । 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿
𑌕𑌰𑌣𑍍𑌯𑌞𑍍𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌕𑌮𑍍 ॥ ௫௫ ॥ 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌬
𑌨𑍍𑌧𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌸𑌂𑌭𑌵𑌕𑌮𑍍 । 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍁
𑌵𑌿𑌦𑍍𑌧𑌕𑌮𑍍 ॥ ௫௬ ॥ 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌨𑍁𑌵𑌿𑌦𑍍𑌧𑌞𑍍𑌚 𑌬𑌹𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍁𑌵𑌿𑌦𑍍𑌧𑌕𑌮𑍍 ।
𑌸𑌮𑌾𑌧𑌿𑌂 𑌷𑌡𑍍𑌵𑌿𑌧𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥ ௫௭ ॥ 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯
𑌶𑌕𑍍𑌤𑌿𑌦𑍍𑌵𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑌪𑍍𑌤𑌧𑌾 । 𑌘𑌟𑌾𑌕𑌾𑌶𑌮𑌹𑌾𑌕𑌾𑌶 𑌜𑌲𑌾𑌕𑌾𑌶𑌾
𑌭𑍍𑌰𑌕𑌂 𑌤𑌥𑌾 ॥ ௫௮ ॥ 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌰𑍍𑌭𑍇𑌦𑌂 𑌤𑌥𑌾 𑌜𑍀𑌵𑍇𑌶𑌯𑍋
𑌰𑌪𑌿 । 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌾𑌦𑌿 𑌭𑍇𑌦𑌞𑍍𑌚 𑌦𑍇𑌹𑌤𑍍𑌰𑌯𑌨𑌾𑌮𑌕𑌮𑍍 ॥ ௫௯ ॥
𑌅𑌹𑌙𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌹𑌨𑍍𑌤𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌕𑌮𑍍 । 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌵
𑌰𑍂𑌪𑌞𑍍𑌚 𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍁 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌕𑌮𑍍 ॥ ௬௰ ॥ 𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌞𑍍𑌚
𑌰𑍂𑌪𑌨𑌾𑌶𑌨𑌮𑍇𑌵 𑌚 । 𑌵𑌿𑌦𑍇𑌹𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌰𑍂𑌪𑌨𑌾𑌶𑌂 𑌪𑌰𑌂
𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௬௧ ॥ 𑌬𑌾𑌹𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑌦𑍃𑌷𑍍𑌟𑌿
𑌕𑌮𑍍 । 𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌪𑌰𑌮𑌾𑌣𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌸𑌾𑌧𑌨𑌮𑍇𑌵 𑌚 ॥ ௬௨ ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌷𑍍𑌯𑌵𑌾𑌕𑍍𑌯𑌞𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌂 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 । 𑌗𑍁𑌰𑍂𑌪𑌦𑍇𑌶𑌵𑌾
𑌕𑍍𑌯𑌞𑍍𑌚 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑌕𑌮𑍍 ॥ ௬௩ ॥ 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍀𑌨𑌾𑌞𑍍𑌚
𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌗𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍂𑌪𑌕𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌦𑌿𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌷𑌟𑍍𑌕𑌂 𑌵𑍇𑌦
𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥ ௬௪ ॥ 𑌕𑍁𑌟𑍀𑌚𑌕𑌾𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌜𑌾𑌬𑌾𑌲𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍌
𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 । 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌹𑌂𑌸𑌾𑌨𑌾𑌂 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑌂 𑌤𑌥𑌾 ॥ ௬௫ ॥ 𑌲𑍋
𑌕𑌾𑌯𑌤𑌾𑌦𑌿 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌜𑍀𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 । 𑌤𑍃𑌣𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌕𑌾𑌦𑌿
𑌯𑍋𑌗𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌞𑍍𑌚 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥ ௬௬ ॥ 𑌸𑌂𑌸𑌾𑌰𑌚𑌕𑍍𑌰𑌭𑍍𑌰𑌮𑌣𑌂
𑌕𑌾𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌸𑌂𑌸𑌾𑌰𑌤𑌾𑌰𑌣𑍋𑌪𑌾𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌚
𑌰𑌾𑌮𑌤𑌮𑍍 ॥ ௬௭ ॥ 𑌶𑌮𑌾𑌦𑍀𑌨𑍍 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑍍𑌯𑌾𑌨𑍍 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌃 । 𑌸𑌰𑍍
𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑍋𑌧𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑌨𑍍𑌮𑍁𑌨𑌿𑌃 ॥ ௬௮ ॥ 𑌶𑌙𑍍𑌕𑌾𑌪𑍁
𑌨𑌶𑌮𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌯𑌥𑌾 । 𑌅𑌰𑍍𑌹𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌜𑌲𑌹𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌨𑍍𑌦𑍃
𑌷𑍍𑌟𑌾𑌞𑍍𑌚𑍈𑌵 𑌚 ॥ ௬௯ ॥ 𑌶𑍁𑌕𑌾𑌦𑍇𑌤𑌾𑌦𑍍𑌯𑌾𑌯𑌵𑌿𑌶𑌰𑍍𑌜𑌨𑌵𑌟𑌹𑍍𑌰𑌦𑌯
𑌯𑌾 । 𑌪𑌨𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍍𑌤𑍍𑌰𑍈𑌯𑌾𑌹𑍍𑌰𑌾𑌸𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌪𑌾𑌰𑌷𑍍𑌵𑌦𑍍𑌯𑌯𑌃 ॥ ௭௰ ॥
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌗𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑌸𑌾𑌂𑌗𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌹𑌿 । 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌬𑌹𑌹𑌰𑍍𑌦𑍃
𑌷𑍍𑌟𑌾𑌦𑍍𑌯𑌂 𑌬𑍋𑌧𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌃 ॥ ௭௧ ॥ 𑌸𑍍𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑌂𑌸𑌦𑌂

Koviloor Digital Library

समजनि शिष्याणां हन्त्विप्रसये । मोक्षकाय प्रायः सदाशिवस्याकृत
वान्तिस्वयं भवतु ॥ ७२ ॥ त्वयि तेजसा स्फुरितानि तत्त्वानि ब्रह्म
निष्ठया । वेदान्तेषु रसहस्राणि यः सर्वज्ञः सत्यः सत्त्वस्थितः ॥
तदेवमेतत्काण्डे शिवाबोधशिवासमाहितः । स्वयं प्रसिद्धं सर्व
नाहं तद्भवान्नामानीरयत् ॥ ७४ ॥ शरीरस्थानविहारं तस्य
दशरीरे स्थितेन शम् । विकारस्यापि सर्वोक्षेत्रे निविष्टकारेण
शिवेनोक्तः ॥ ७५ ॥ स्वयं सर्वात्मस्थितः शिवेन निखिलैकत
कर्मषु । शंकरेति स्तुवन्नित्यं ज्ञानसंबोध्यशांकरम् ॥
सर्वेषां शंकरो हान्यो भवः शंकरवाकरः । ब्रह्मान
तेषु निजज्ञानसंस्थिष्यास्वप्रशिष्यकाः ॥ ७७ ॥ ये ब्रह्मानन्दशिष्य
स्तु ते देवा मुक्ता नसंशयः । इति लोकेषु विख्यातिः शंकरदे
शिकः ॥ ७८ ॥ सर्वदेवसमाराध्यं वीक्ष्य ज्ञानदृष्ट्या स्वया ।
समलोकं सदा प्रदेवः ब्रह्मसम्भवादिभिः ॥ ७९ ॥
नारदस्सर्वदेवाद्यं शंकरं प्रणम्य सर्वस्वयम् । स्तोत्रं तत्रासहित
शीघ्रं सत्त्वदायादिभिः ॥ ८० ॥ नमस्ते देवदेवेश नमस्ते करु
णाकर । नमस्ते सच्चिदानन्द नमस्ते जगतां पते ॥ ८१ ॥ नमस्ते
करुणाधीश नमस्ते भक्तिदायक । नमस्ते परमाकाश नमस्ते ब्रह्म
भावन ॥ ८२ ॥ नमस्ते सर्वरूपाय नमस्ते भक्तवत्सल । नमस्ते
पार्वतीश नमस्ते ज्ञानवारिद ॥ ८३ ॥ नमस्ते ज्ञानिनां श्रे
ष्ठ नमस्ते योगविग्रह । सर्वदा त्वं प्रकाशस्ते त्राणी सन्त्री
रयतु ॥ ८४ ॥ सकलं सर्वदेवं समवाप्तं तथोद्यतः ।
यत्नतस्तत्प्रभावं तत्कायं समस्तं सर्वदम् ॥ ८५ ॥ श्रीदेव
शिवस्याराध्यता स्वस्थानसंशयः । सर्वाश्रयं प्रकृतं सर्वं
सर्वस्वरूपविशेषतः ॥ ८६ ॥ स्वस्थानं प्राप्य हीनसर्वज्ञ
रजतागिरिम् । शिवेव प्रागत्य सन्निधानं भवसन्नद्धः ॥ ८७ ॥
समस्तं स्वप्रायं नानात्वं कारायज्यविग्रहम् । प्रसा
रीकृत्य सर्वदा सर्वसंप्रदायान् ॥ ८८ ॥ कृपावशे
तस्थानं सज्जनं यथावत्तथा । तथा स्वप्रायं त्सविकृत
विधिसर्वम् ॥ ८९ ॥ परंशिवाख्यं सर्वसारं त्यक्त्वा स्वस्थानं
प्राप्य वाग्भिः । ब्रह्मानन्दस्वयं देवः शिवस्वरूपः सन्त्यक्त
रतु ॥ ९० ॥ जीवन्मुक्तिं दृष्ट्वा निस्पृहो भवेन्नायथा । विदेह
सत्कारे स्वकर्तव्यानीश्वरः ॥ ९१ ॥ भक्तानुग्रहजनशीतारतु
सच्चिदानन्दलक्षणः । ब्रह्मरूपेणोपरादेवो लोकानुग्र

Koviloor Digital Library

[illegible]

Koviloor Digital Library

ஸதா । ஶாந்தோ விஷ்ணுரூபாய ஸர்வஶ்ரேஷ்டாய ஶாந்தயே ॥ ௧௧௦ ॥
ஶ்ரீமச்சிதம்பரக்ஷேத்ரே ராமலிங்கஸ்வரூபிணே । ப்ரஹ்மானந்தாய
தேஶிகாய ஸ்வாஹா ॥ ௧௧௧ ॥

ராமலிங்கவிஜயம் ஸம்பூர்ணம்.

சுயம்பிரகாசரான கணேசனையும், ஸ்ரீ மீனாக்ஷியையும், சுந்தரேசுவரரையும், சுந்தரதாண்டவமூர்த்தியான சபாநாயகரையும் நமஸ்கரிக்கிறேன். சகல சம்பத்தும் பொருந்தின மதுவனக்ஷேத்திரமென்னும் கோவிலூரில் வசித்துக்கொண்டிருந்தவராயும், சாதனசதுஷ்டயத்துடன் கூடின மாணாக்கர்களுக்கு எதார்த்தமான பரமாத்தும ஞானத்தை ஈன்றருளுகின்றவராயும், அசுவத்த நாதர் முதலான சீடகோடிகளா லெப்பொழுதும் பூஜிக்கப்பட்டவராயு மிருக்கிற ஸ்ரீ முத்துராமலிங்க குருசிரேஷ்டரை நான் நமஸ்கரிக்கின்றேன். பரமசிவனுக் கதிகப் பிரியராயும், லக்ஷ்மி சரஸ்வதி முதலானவர்களினால் பூஜிக்கப்படுகிறவராயும், சாந்தமான மனதுடன் கூடினவராயும், எப்பொழுது மானந்த நடனம் புரியு மன்பனிடத்தில் மனதைச் செலுத்தி பிர்மானந்தத் திருப்தி யுடையவராயும், ஞானக்கடலாயும், சர்வவியாபகராயுமிருக்கிற அசுவத்தேச யதீந்திரருக்கு வந்தனம் புரிகின்றேன். அழியாதவராயும், மும்மலங்களற்றவராயும், இரண்டற்றவராயும், மூப்பற்றவராயும், அறிவுரூபராயும், மாயாகாரியமற்றவராயும், சிவனுயும், நாசமற்ற பதத்தி லிருப்பவராயும், கோபமற்றவராயும், மூன்றுகாலங்களிலுமிருப்பவராயும், அறிவுக்கட்டியாயும், இம்மாம்சக் கண்ணா லறியத்தகாதவராயும், மாயைக் கப்புறப்பட்டவராயும், ஸ்ரீ ராமலிங்கமென்ற பெயரையுடையவராயும், சரணாகதியடைய யோக்கியராயுமிருக்கிற பிர்மானந்தகுருவை அடிக்கடி நான் எப்பொழுதும்பூஜிக்கின்றேன். உலகத்திலுள்ள குருக்களுக்குக் குருவாயும், சுரர்களால் துதிக்கப்படுகிறவராயும், மாலால் பூஜிக்கப்பட்டவராயும், தன்னையடைந்த நண்பர்களுக்கிருப்பிடராயும், வேண்டும் வரத்தை அளிக்கிறவராயும், சிரேஷ்டராயும், அழிவில்லாதவராயும், சகலகலைகளையும், சாஸ்திரங்களையு மறியும் புத்தியைக் கொடுப்பவராயும், ரகசியார்த்தங்களைத் தெரிவிக்கிறவராயும், பாபத்தைப் போக்க வல்லமை யுடையவராயும், தேவகுருவாயும், விசாலமான நேத்திர வீக்ஷண்ணியமுடையவராயுமிருக்கிற குருவை அடிக்கடி வணங்குகின்றேன். சச்சிதானந்தரூபராயும், உலகத்திலுள்ள சூரியாதி அஷ்டப்பிரகாசங்களுக் கப்புறப்பட்ட சுவயம்பிரகாசராயும், அநேகவிதலக்ஷியராயுமிருக்கிற பிர்மானந்த குருவின் பொருட்டு ஸ்துதி செய்கின்றேன். சகல நீர்வளமும், நிலவளமும், அஷ்டைசுவரியங்களும் பொருந்திய கைலையங்கிரியின்கண் வேதாந்தமாகிற நவரத்தின

பீடத்தில் எழுந்தருளியிருக்கின்றவராயும், விஷ்ணுமுதலான தேவக்கூட்டங்கள் வணங்கும் பாதகமலங்களை யுடையவராயும், சுவப்பிரகாசராயு மிருக்கிற பரமசிவனை வணங்கியும், பரமகுருவான அசுவத்தேச யதீந்திரனையும் நமஸ்கரித்து சர்வவியாபியான ஈசனனுக்கிரகத்தினால் பிர்மானந்த சரித்திரத்தை பாலனாகிய நான் தெரிந்தமட்டி லுரைக்கின்றேன். பூர்வத்திலொருக்கால் நாரதமகா முனிவர் சகல லோகங்களிலும் தெய்வானுக்கிரகத்தால் சஞ்சரித்துக்கொண்டு, இக்கலியுகத்தில் பூலோகமடைந்து, இப்புவியில் சம்சார துன்பத்தால் வருந்துகின்ற தன் சகோதரர்களான பிராணிகளின் துக்கத்தைக்கண்டு சகிக்கமாட்டாதவராய் வெள்ளியங்கிரியில் விளங்குகிற பரமசிவனை யடைந்து தன்னுறவினர்கள் படுந் துயரத்தை வெளிப்படுத்தினார். ஏ தேவா எவ்வித உபாயத்தால் என்னுடன் பிறந்தோர் சம்சாரபந்தத்திலிருந்து விடுபடுவார்களோ, அவ்வித உபாயத்தை அனுக்கிரகிக்கவேண்டுமென்றுகேட்ட பிர்மகுமாரனுக்கு விடை அளிக்கின்றார். ஏ நாரதா அச்சீவர்கள் உய்யும்வண்ணம் யானவதரித்து இரக்ஷிக்கின்றேன், இதில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லையென்று சொன்ன ஈசன் வார்த்தையைச் செவியுற்ற நாரதர் தாமவதரிக்கின்ற ஸ்தானத்தை வினவ, பரமசிவன் யான் ஜீவன்முக்திபுரமென்கிற மதுரைமாநகரின்கண் மறையவர்குலத்தில் ஆத்திரேய கோத்திரமாகிற சமுத்திரத்திற்கு கவுஸ்துபரத்தினமாய் நல்லோர்களுக்கு முக்தி சித்திக்கும்பொருட்டு இந்த சுவயம்புவான ஜோதிர்லிங்கத்திலிருந்து ஆவிர்பாவமாய் திரும்பவும் ஜடிதியில் இதில் லீனத்தையடைகிறேனென்ற சிவவாக்கியத்தை செவியுறக்கேட்ட அம்முனியானவர் அனேகவிதமான வேதஸ்தோத்திரங்களினால், பக்திபரவசத்தால் அரனைத் துதித்து மகரிஷிகளால் வணங்கப்பெற்ற நாரதரானவர் நாம் வந்த காரியம் முடிவுபெற்றதென்ற சந்தோஷத்தினால் அத்தருணமே சத்தியலோகம் சார்ந்தனர். பிறகு சிலநாட்சென்று தயாளுவானதேவன் தன்னன்பனான நாரதவாக்கியத்தை யுணர்ந்து, விகாரிவருஷம் தைமாதம் குருசந்திரர்கள் நல்லராசியில் சஞ்சாரகாலமான சுவாதிநக்ஷத்திரமும்கூடின சோமவாரத்தில் சுபலக்கினத்தில் பிராமணகுலத்தில் பிர்மசாக்ஷாத்காரத்தை யடைந்த ராமசுவாமிசாஸ்திரிகளின்மனைவி மீனாக்ஷியினுடைய கருப்பகோளத்தில் ஜகன்னாதராயும், மனிதர்களா லெளிதிலறியக்கூடாதவராயும், சந்திரகலையை தரித்தவராயு மிருக்கிற பகவான் மாயாமானுஷ விக்கிரகத்துட னாவிர்ப்பாவமானார். அது எதுபோலவென்றால், நீரே ஆலங்கட்டியாய் தரித்ததுபோலும், உருக்கின நெய்யே கடின நெய்யானதுபோலவும், சமஸ்தமான ஐசுவரியங்களுக்கும், பராக்கிரமங்களுக்கும், கீர்த்திகளுக்கும், அஷ்டலக்ஷ்மிகளுக்கும், ஞானத்திற்கும், வைராக்கியத்திற்கும் காரணராய் விளங்குகிற யாதொருபகவானுண்டோ அவரே மூடஜனங்களெளிதில் ஞானத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல், மானிடதேகத்தை விளை

Koviloor Digital Library

யாட்டினுலந்த பரமசிவனடைந்தார். அப்பரமசிவன் பாலபாவந்தையடைந்து பாலகிரீடையுடன் கூடினவராயிருந்து ஐந்துவயதுசென்றபின்னர் வித்தியாப்பியாசம் செய்து, பிறகு பிர்மசாரியாச்சிரமமான முதலாவதாச்சிரமம் வகித்து அதின்பின்னர் வேதாத்தியயனங்களின் கரையை யடைந்தவராயும், சகலமான சாஸ்திரங்களையு மதினுண்மையையும் கற்றவராயும், உலகவிவகார ஞானங்களுணர்ந்தவராயும், வைதீக ஆசாரத்தையுடையவராயும், எப்பொழுதும் சந்தோஷமான மனதுடையவராயும், பிறருக்குப் போதிக்கிறதில் சமர்த்தராயும், ஆத்துமாராமராயும், அனவரதம் மௌனியாயும், குருவிசுவாசத்துடன்கூடிக்கொண்டிருக்கிற அந்த சிவனுனவர் இரண்டாவதான கிரகஸ்தாசிரமபாவத்தையடைந்து மூடர்கள்போல் இல்வாழ்க்கையிலிருந்து ராமலிங்கசாஸ்திரியென்னும் நாமகரணம்பூண்டு புத்திரர்களையுண்டுபண்ணியும், வேதத்தினர்த்தத்தை யுணர்ந்தவர்களாயும், லோககுருவாயுமிருக்கிற பகவத்பூச்சிய பாதாளான சங்கரதேசிகர்களால் செய்யப்பட்டிருக்கிற விவேகசூடாமணியென்கிற கிரந்தத்திற்கு தமிழ் மொழிபெயர்ப்பும், ஷை குருவா லியற்றப்பட்டிருக்கிற சர்வ வேதாந்த சித்தாந்த சாரசங்கிரகமென்கிற கிரந்தத்திற்குத் தமிழ் மொழிபெயர்ப்பும், வாஸுதேவயதியினுற்செய்யப்பட்டிருக்கிற தக்ஷிணமூர்த்தி வீக்ஷா விலாசமென்கிற கிரந்தத்திற்கு தமிழ் மொழிபெயர்ப்பும், வித்தியாரண்ணிய மாமுனியினுற் செய்யப்பட்ட பஞ்சதசியென்கிற கிரந்தத்திற்குப் பதயோஜனி யென்கிற தமிழர்த்தமொழிபெயர்ப்பும், ஸ்ரீராமலிங்கசாஸ்திரியளென்கிற குருவானவருண்டுபண்ணி சுந்தரமுமனுன தன்மூத்தமைந்தனுக்கு தன்பிர்மகுலம் விருத்தி யடையவேண்டி மேற்கூறிய புஸ்தகங்களைக் கொடுத்து, சுந்தரம் முதலான அனேகசிஷியகோடிகளுடன் தன்குடும்பத்திலெப்பொழுதும் பிர்மவிசாரம் செய்து அச்சிவனுன நம்மாசான் காலம்கழித்து நாடகத்தில் வேஷதாரிபோல் குடும்ப பாரத்தைவகித்து யெதார்த்தத்தில் சம்பந்தமற்றவராய் விளங்கினுர். மற்றிதர மாணுக்கர்களுய்யும்வண்ணம் தான்தானே வைராக்கியம் நிறைந்தவராயும், சாஸ்திரத்திற் சொன்ன சற்குணங்களுள்ளவராயுமிருக்கிற அசுவத்த யதீந்திர குருவை இத்துவாதசாந்த க்ஷேத்திரத்தில் குருவாய் தானே பாவனைசெய்தனர். அனேகசீடவர்க்கத்துடன் பிர்மநிஷ்டசிரேஷ்டரான அம்மகான் சிறிதுகாலம் சென்றபின்னர், (3) வதான வானப்பிரஸ்தாசிரமத்தை யடைந்து அனேகதேசங்களில் சஞ்சரித்து அங்கங்கிருக்கும் பக்தஜனங்களுக்கு தன்னுத்துமஞானத்தையருளி, அக்குருவானவர் நடேசன் விசுவனுதனென்ற பதஞ்சலி வியாக்கிரபாதமகரிஷிகளுக்குச் சமானமான யிந்த (2) சிஷியர்களுடனும் வேலைக்காரனுன சங்கரன் முதலானவர்களையும் கூட்டிக்கொண்டு மோக்ஷபூமியான வாரணசியை யடைந்து விசுவனுதனையும், விசாலாக்ஷியையும், விஷ்ணுவையும், டுண்டிவினுயகனையும், தெண்டபாணியையும், பைரவனையும், பாபநாசம்செய்கிற மகேசுவரனையும், காசிமை

Koviloor Digital Library

யும், சுத்தகங்கையையும், குகையையும், மணிகர்ணிகையும் விதிப்படி பூஜை செய்து, மறுபடியும் பிரயாகையை யடைந்து பிதிர்க்கள் முதலானவர்களுக்கு தர்ப்பணம் செய்து சந்தோஷ சித்தராய் சிறிதுகாலம் அவ்விடத்தில் வாசம் செய்தனர். மத்தியிலிருக்கிற அனேகக்ஷேத்திரங்களைத் தெரிசித்தும், தீர்த்தங்களாடியும், அங்கங்குள்ள மாணுக்கர்களுக் கனுக்கிரகம்செய்து அத்துவைதமார்க்கத்தையும் நிலை நிறுத்தி ஹாலாசிய க்ஷேத்திரம் வந்தடைந்தார். வைராக்கியத்துடன் நிறைந்தவராகி (4) நான்காவதான பரமஹம்சாசிரமம் பூண்டு பிர்மானந்தாசிரமி யென்னும் மகிமையான கீர்த்தியைப் பெற்று மதுராதேசத்திலிருக்கிற சிஷியவர்க்கங்களுடன்கூடி யம்முனிசிரேஷ்டர் நித்தியானித்தியவிவேகம் முதலான நான்குசாதனங்களின் சுவரூபத்தையும், சம்பந்தம், விஷயம், பிரயோசனம், அதிகாரிகளுடைய விவரணங்களையும், பழுதையிற் பாம்புபோல் ஜீவேசுவர ஜகத்து கற்பனையாய்த் தோன்றியிருக்கிற வத்தியாரோபக் கிரமத்தையும், அதினபவாதத்தையும், ஜாக்கிர சொப்பன சுழுப்திகளின் சுவரூபத்தையும், அவைகளில் ஆத்துமசாக்ஷியாய் விளங்குந்தன்மையையும், மாயிகமலம், ஆணவமலம், காயிகமலங்களின் லக்ஷணங்களையும், அவைகளின்நாசத்தையும், ஈச ஜீவ ஜகத்பேதங்களின்சம்சாரத்தையும், காண்பான் காக்ஷி பொருளிவைகளின் லக்ஷணங்களையும், சஞ்சித, ஆகாமி, பிராரப்த கர்மங்களின் விசாரத்தையும், முக்தியடையு முபாயத்தையும், சுவர்க்கம், அந்தரிக்ஷம், பாதாளமென்கிற லோகங்களி லுண்டாகிற துக்கங்களையும், ரேசக பூரக கும்பகங்களி னப்பியாசத்தையும், ஜீவன் சம்சாரத்திற்கட்டுண்டு பெண், பணம், மைந்தன் முதலான விஷயங்களில் திரியும் விசேஷத்தையும், பூதப்பிரதிபந்தம், பவிஷியத்பிரதிபந்தம், வர்த்தமானப்பிரதிபந்தங்களின் குணங்களையும், சமஷ்டி வியஷ்டி பாவங்களையும், காரியகாரணங்களின் சுவரூபத்தையும், சென்றகாலம் நிகழ்காலம் வருங்காலங்களின் தன்மையும், மன்மதன் வல்லமையும், காலங்களுக் கப்புறம்பட்ட வஸ்துவின் லக்ஷணத்தையும், காமிகம் முதலிய ஆகமபேதங்களையும், ஸச்சிதானந்தலக்ஷணத்தையும், அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷம், அபரோக்ஷம், துக்கநிவர்த்தி, ஆனந்தாவாப்திகளின் விசேஷத்தையும், ஜீவத்தோற்றத்தையும், ஸ்தூல சூக்ஷம காரணசரீர லக்ஷணங்களையும், ஆப்தம், அங்கம், ஸ்தானம், சத்பாவங்களென்ற நான்குவிதபணிவிடையின் விசேஷத்தையும், அன்பனுசான் சுவரூபங்களையும், அன்னமயப் பிராணமய மனோமய விஞ்ஞானமய ஆனந்தமய கோசங்களின் லக்ஷணத்தையும், அவைகளிலாத்துமா சாக்ஷியாய்ப் பிரகாசிக்குந்தன்மையையும், அறியாமை நான் எனது காமம் குரோதம் இவைகளான பஞ்சக்கிலேச சுவரூபங்களையும், தேகவாசனை, லோகவாசனை, சாஸ்திரவாசனைகளின் குணங்களையும், அவைகளின் நிவர்த்திரூபமான தத்துவஞான வாசனாக்ஷய மனோநாசங்களின் சுவரூபத்தையும், உபக்கிரம உபசம்மாரம் அப்பியா

Koviloor Digital Library

சம் அபூர்வதை பலம் அர்த்தவாதம் திருஷ்டாந்தம் சொல்வது முதலான ஆறுவித்துடன் குருமுகமாய் விசாரஞ்செய்கிறதே சிரவணமென்றும், அதின் பின்னர் அச்சிரவணத்தையே தனித்திருந்துச் சிந்திப்பதே மனனமென்றும், அச்சிரவண மனனங்களினால் நிராக்ஷேபணமா யிருக்கிற பிர்மவஸ்துவில் தடையில்லாத சுவானுபவ பிரவாஹரூபமே நிதித்தியாசனமென்றும், தியானம் செய்தவன் தியானம் செய்த விருத்தி இந்த இரண்டுமற்று தியேயமாத்திரமான வஸ்துவில், காற்றில்லாதவிடத்தில் வைத்திருக்கிற தீபம்போல் சித்தமசைவற்றிருப்பதே சமாதியென்றும், பரோக்ஷ ஞானலக்ஷணமும், அபரோக்ஷ ஞானலக்ஷணமும், ருக்குவேதசம்பந்தமான ஐதரேயோபநிஷத்தின் முடிவான பிரஞ்ஞானம் பிர்மமென்றப்பியாசமகாவாக்கியார்த்தத்தையும், எஜுர்வேத சம்பந்தமான பிரஹதாரண்ணியோபநிஷத்தின முடிவான அஹம் பிர்மாஸ்மி என்றநுபவ மகாவாக்கியார்த்தத்தையும், சாமவேத சம்பந்தமான சாந்தோக்கியோபநிஷத்தின் முடிவான தத்துவமஸி யென்ற உபதேச மகாவாக்கியார்த்தத்தையும், அதர்வணவேதசம்பந்தமான நிருசிம்ம உத்தரதாபனீய உபநிஷத்தின் முடிவான அயமாத்துமா பிர்ம என்கிற சாக்ஷாத்கார மகாவாக்கியத்தி னர்த்தத்தையும், விட்ட லக்ஷணையும், விடாத லக்ஷணையும், விட்டுவிடாதலக்ஷணையினால் மாயாவித்தியாஜீவேசுவர வாச்சியங்களைத்தள்ளி லக்ஷியார்த்தமான பிர்மகூடஸ்தர்களுக்கு யேகபாவத்தையும், மகான்களால் சொல்லப்பட்டிருக்கிற அந்தர் திருசியானுவித்தம், அந்தர் சப்தானுவித்தம், பகிர் திருசியானுவித்தம், பகிர் சப்தானுவித்தம், சவிகற்பம், நிர்விகற்பம், இவ்வித ஆறுவித சமாதிகளின் லக்ஷணத்தையும், அவைகளின் சுவானுபவத்தையும், பிந்து, பிந்துஜாக்கிரம், மகாஜாக்கிரம், ஜாக்கிரசொப்பனம், சொப்பனம், சொப்பனஜாக்கிரம், சுஷுப்தியென்றஞ்ஞானபூமிகளின் லக்ஷணத்தையும், சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரீயமென்ற ஞானபூமிகளின் மகிமையும், அவைகளின் விசேஷணங்களையும், கடாகாச மகாகாச ஜலாகாச மேகாகாச சுவரூபங்களையும், அவைகளின் தன்மையான கூடஸ்த பிர்ம ஜீவ ஈசுவரபாவங்களையும், துவைத விருத்தி, சாக்ஷிவிருத்தி, அகண்டாகாரவிருத்தி, அகண்டைகரசவிருத்தி, இவைகளின் தர்மங்களையும், அஞ்ஞான சந்தேக விபரீதப்பாவங்களின் லக்ஷணத்தையும், அவைகளின் நிவர்த்திக் குபாயத்தையும், மகாகர்த்தா, மகாபோக்தா, மகாத்தியாகியான ஜீவன்முக்தர்களின் விசேஷணங்களையும், மாயாவித்தியாசுவரூபத்தையும், ஆகாசாதி பஞ்சபூதசுவரூபத்தையும், ஜீவன்முக்தி லக்ஷணத்தையும், விதேகமுக்தி லக்ஷணத்தையும், ரூபநாசத்தையும், அரூபநாசத்தையும், பாதாதிருஷ்டியும், சொப்பன திருஷ்டியும், மித்தியாதிருஷ்டியும், தன்மயதிருஷ்டியும், லக்ஷணவாக்கியத்தையும், சுவானுபூதிவாக்கியத்தையும், குருவால் சொல்லப்படுகிற உபதேசவாக்கியத்தையும், சாக்ஷாத்காரவாக்

Koviloor Digital Library

கியத்தையும், பிரத்தியக்ஷம் முதலிய எவ்விதப்பிரமாணங்களையும், பிரத்திய காத்தும பரமாத்தும ஐக்கியத்தையும், பிரவர்த்தியின் மகிமையும், ஜாபாலம் முதலான உபநிஷத்திற் சொல்லுங் குடீசகாதி நான்குவித சன்னியாசத்தை யும், ரிபு முதலான பரமஹம்சர்களின் வைபவங்களையும், லோகாயதன் முத ல் சாங்கியனீறு யிருக்கிற ஜீவப்பிராந்தர்களின் லக்ஷணத்தையும் துரும்பை பூஜிக்கிறவன் முதல் ஈசுவர பூஜகனீறுயிருக்கிற ஈசுவரப்பிராந்தர்களையும், கா மிகாதி ஆசிருதர்களையும், சம்சார சக்கரத்தின் மயக்கத்தையும், அதின் நிவர் த்தியைச் செய்யும் மேலான ஞானோபாயத்தையும், இவை முதலான அனேக கிரமங்களையும், தூங்கி விழித்தது முதல் மறுபடியும் தூங்கும் வரை அடிக்க டி நம் குருவானவர் தினந்தோறும் அன்பான சிடருக் கனுக்கிரகம்செய் துப தேசித்து வந்தனர். கந்தர்வ நகர் போலவும், கிளிஞ்சி வெள்ளி போலவும், கானல் நீர் போலவும், கனவூர் போலவும், வானமை போலவும், கயிற்றிற் பா ம்பு போலவும், மலடிசேய் போலவும், தரிபு மான் போலவும், முயலின் கோ டு போலவும், மனிதக் கொம்பு போலவும், இச்சகத்தானது சுத்தப் பொய்யெ ன்று இவை முதலிய திஷ்டாந்தங்களாலே அனுதினமும், அய்யனருளிச் செ ய்தனர், மாணாக்கர்களுக்கு பக்தி விர்த்தியின் நிமித்தம் தானும் தன் குரு வான அசுவத்தேசயதீந்திரரை பூஜை செய்து, தன் சுபானுபவ நிச்சயத்தால் லோகோபகாரமாய், துரீயாதீதா சிரமமடைந்து வேத முடிவின் ரகசியார்த்த ங்களை வஞ்சனையற்று சுவானுபூதியையும், சொப்பன திருஷ்டியும், அனவர தம் அன்புடனறைந்தனர், சரீரத்துடன் கூடினவராயிருந்தாலும், அசரீர ராயும், விகாரியாய்த் தோற்றினும், நிர்விகாரியாயும், சாக்ஷியாயிருக்கிற சி வத்தில் அமைதி பெற்றனர். கணக்கற்ற மாணாக்கர்களுடன் கூடியவர்களுக் கு குருபாவத்தையும், தானடைந்த பிர்மானந்தத்தில் மூழ்கி பேச்சற்ற நிலை யில், அவ்வன்பர்களையும் அமைந்திருக்கும்படி செய்து எவர்கள் பிர்மானந்த சிடர்களோ அவர்களை ஜீவன் முக்தர்களாகச் செய்து மிவ்வுலகில் மேலான கீர்த்தியை நம்மாசானடைந்தனர். அவ்வைபவத்தை, ஞானநோக்காலுணர் ந்த நாரதமுனிவர் பூலோகமடைந்து நமதய்யனை யீசனை வணங்கி துதிக்கி ன்றனர். தேவாதி தேவனே போற்றி, கருணாகரனே போற்றி, ஸச்சிதானந் த ரூபனே போற்றி, பூர்ணவானே போற்றி, பிர்மபாவனனே போற்றி, முனி கள் பூஜிதனே போற்றி, அன்பர்கள் மனவர்சனே போற்றி, குருநாதனேபோ ற்றி; ஞானபாரகனே போற்றி, போதகப்பிரியனே போற்றி, ஞானிகள்வரனே போற்றி, யென்றிவ்விதம் வேதஸ்தோத்திரங்களினால் முறையிட்டனர். பின் னர் அக்குருவினேகாந்தஞ் சென்று தபோதனரான நாரதமகாரிஷியானவர், ஏ, அய்யனே யாதுபற்றி யிவ்விடம் பெழுந்தருளினீரோ, அக்காரியம் முடி வு பெற்றது. துவாதசாந்த வாசிகளான என்னுடன் பிறந்தோர், தங்களனுக் கிரகத்தால் ஜீவன் முக்தர்களாகினார்களிதிற் சற்றேனுமய்யமில்லை அண்ணலே,

Koviloor Digital Library

இனி இம்மானிடதேகம் விடுத்து தங்கள் வாசஸ்தலமான கைலாசம் கிரிமே வி பூர்வ ரூபமான ஈசுவரவடிவத்தை யடையீராகவென யிவ்வாறேருங்கினர். இம்முறையைக் கேட்ட அவ்விசன்புன் சிரிப்புடன் கூடினவராகி, முன்னிந்த கலியுகத்தில் உன்வேண்டுகோளின்படி சங்கராசாரியரென்றும் நாமம்பூண்டு காணுபத்தியம்முதலான ஆறுமதவாதிகளையும்கண்டித்து,இக்கலியில், அத்துவைதமதஸ்தாபனம்செய்து, முன்னிந்த நீலகண்டபரமேசுவரனென்னு மாத்துமலிங்கத்தில்யான் முன்னெப்படி அந்தர்த்தானம் செய்தேனே, அவ்விதமினிச்செய்கின்றேனென்று, பிரமகுமாரனான நாரதரைநோக்கிக்கூறினர். இம்மொழியை யுணர்ந்த விதிமைந்தனும் தனதிருப்பிடமேகினர். நமதாசான் பிர்மானந்ததேசிகன் நாரதனுக்குரைத்தவாக்கிய முணர்ந்து சலனமற்றபவனன்போல் ஜீவன்முக்திவிரதத்தைவிட்டு, அத்தேவன் விதேகமுக்தி பாவமடைந்தனர். பக்தர்களின் பீடைகளைப்போக்கடிக்கத்தக்கவராயும், ஸச்சிதானந்தரூபனாயும் பிர்மரூபனாயும் லோகானுக்கிரகமூர்த்தியாயும், லக்ஷ்மிநாயகனுக்கு திகட்பியராயும், சுவயம் பிரகாசராயுமிருக்கிற அம்மகாதேவரான பிர்மானந்ததேசிகன் துன்முகிவருடம்சித்திரைமாதம் சுக்கிலபக்ஷத்துவாதசிசுக்கிரவாரம் உத்திர நக்ஷத்திரமும்கூடின சுபதினத்தில் பிர்ம முகூர்த்தத்தில் விதேககைவல்லியமேகினர். இந்திரன் தேவகோடிகள் நாரதர்முதலான ரிஷிக்கூட்டங்களால் ஸ்தோத்திரிக்கப்பட்ட பாதாரவிந்தங்களுடன்கூடின அக்கருணைக்கடலானவீசன் மூற்கூறிய ஜோதிர் லிங்கத்தில் சமுத்திரத்தில் அலை லீனமாவதுபோல் லீனமடைந்தனர், கர்பூரஜோதிபோல் நிர்விகற்பவஸ்துவில் ஐக்கியமாயினர். உலையிரும்புண்டநீர்போல் அச்சூக்ஷ்மதேகம் சிவசுவரூபத்தில் அடங்கிற்று. அம்மகாத்துமாவினுடைய ஆத்தும ஞானவிசேஷத்தையும், சிரேஷ்டமான அபரோக்ஷ ஞானசாமர்தியத்தையும் யுக்திசாரங்களுடன் நிறைந்தசுவானுபவவினோதத்தையும் தேவசிரேஷ்டனான ஆதிசேடனைத்தவிர யெவன்சொல்ல இவ்வுலகில் வல்லவனுவன் அவ்வாதிசேடனும் பிர்மானந்த மகாமௌனிவைபவத்தை முன்ஞானநோக்காலுணர்ந்ததினாலன்றோ இரண்டாயிரம்நாவையுடைய நம்மால்சொல்ல முடியாதென்று கருதியன்னிமித்தமே பாதாளலோகமப்பவேயடைந்தனன். அவ்வபாரகருணாமூர்த்தியின் வைபவத்தையிப்புவியில் யானுரைக்கத்தகமையுளனோ அப்படியாயினும் பிர்மானந்தாவிர்ப்பாவமுதலைக்கிய பீருயுள்ள திவ்வியயிச்சரித்திரத்தை யக்குருநாதன் கிருபாவசத்தால்அற்புதத்துடன்கூடியயான் ஒருவாறறையலுற்றேன். சர்வசங்கடங்களையும் போக்கடிக்கக் கூடியதாயுமிருக்கிற அத்திவ்விய சரித்திரம் ஸ்ரீராமலிங்கவிஜயமென்றும், நாமகரணம் பூண்டு இப்பாரில் குருநாதன் தயாநோக்கால் ஸர்வோத்கருஷமான கீர்த்தியை யடைபட்டும். அசுவத்தயதீந்திர தேசிககுருகிருபாவசத்தால் பிர்மஞானிகள் திருப்தியையடையும் பொருட்டும், சகலமான அதிகாரிகள் துதிக்கும் பொருட்டும்சம்சாரசாகரத்தில் மூழ்கினவரை

களையேற்றிவைக்கும் பொருட்டும், நம்குருப்பிரீதியின் பொருட்டும், இத்திவ்விய ராமலிங்கவிஜய சரித்திரமானது அவர்முக்கிய சிஷ்டனையென்னால் நன்றாயுரைக்கப்பட்டது. அச்சரிதைநக் கொப்புயர்வு இவ்வுலகிலில்லை அதிற் சந்தேகமுமையுமுறற்க. குருபக்தியுடன் கூடினவர்களாயும் வேதவேதாங்களின்கறை கண்டவர்களாயும், சிரவணதிதர்மங்கள் பூர்ணமாயடைந்தவர்களாயும், பிர்ம ஞான முணர்ந்தவர்களாயும், கோபமாகிற வியாதியற்றவர்களாயும், நமக்கு சமானமாயிருக்கக் கூடாதென்ற மாத்ஸரியகுணங்களற்றவர்களாயும், தன்பிர்ம பிரயோஜனமே மேலென்று கருதினவர்களாயுமிருக்கிறமகாங்களான வர்கள் இந்த திவ்விய விஜயத்தை பார்வையிட்டுச்சந்தோஷிக்கக்கடவர்கள். இச்சரிதையையன்புடன் படித்தவர்களும் கேட்டவர்களும் மோக்ஷமடைவதற் கையமில்லை குருமுதலியவனைவருக்கும் மங்களம் செய்து சாஸ்திரத்தை முடித்தனம்.

ஸ்ரீராமலிங்கவிஜயம் முற்றிற்று.

ஸ்ரீப்ரஹ்மாநந்தபஞ்சகம்॥

ஸ்ரீப்ரஹ்மாதிஸுரவராதிவந்த்யமாநபதம் ஸ்ரீப்ரஹ்மநிஷ்டாக்ரிமம் ஸ்ரீமத்ப்ரஹ்மஸபாஜதேசிகவரம் ஸ்ரீமத்ப்ரஹ்மாஸநஸ்தம் | ஸ்ரீவிஷ்ணுமுகாமரேந்த்ரலோகபாவநம் யத்க்ருபாகடாக்ஷம் ப்ரஹ்மாநந்தகுரும் ஶரண்யமநகம் ஸம்யோகவேத்யம் நமஸ்யாம்யஹம் ॥ க ॥ நித்யாநந்தமஹாவிஹாரநிரதம் ஸ்ரீநிர்விகல்பஸ்தி²தம் ஸ்ரீவிஜ்ஞாநமயாநந்தவிஹாரம் நாத்யாதமோநாஶகம் | ஸ்ரீமத்ஸத்குருநாயகம் ஸாக்ஷாத்ஸமத்ருஷ்டிஜ்ஞாநதக்ஷம் ஶிவம் ப்ரஹ்மாநந்தகுரும் ஶரண்யமநகம் ஸம்யோகவேத்யம் நமஸ்யாம்யஹம் ॥ உ ॥ ஸ்ரீமத்தத்த்வமஸீதி வாக்யநிகரம் வேதாந்தஸாரம் பரம் ப்ரஹ்மாநந்தநிதிம் ப்ரணவமயம் ப்ரஹ்மாத்மதத்த்வாத்மகம் | ஸர்வஜ்ஞம் ஸகலம் பராத்பரதரம் ஸாக்ஷாத்ப்ரஹ்மாநந்தகுரும் ஶரண்யமநகம் ஸம்யோகவேத்யம் நமஸ்யாம்யஹம் ॥ ௩ ॥ ஸம்ஸாரார்ணவதாரகம் பரமாநந்தக்ருதம் விஜ்ஞாநதம் ஸஜ்ஜநஹிதம் ஸ்தி²தம் ஶிஷ்யாநுக்ரஹதக்ஷிணம் தத்பரம் | பாபாபஹம் க்ருதிநாம் ஸதா ஸத்கவிதா ஸ்ரீபாதபங்கஜம் ப்ரஹ்மாநந்தகுரும் ஶரண்யமநகம் ஸம்யோகவேத்யம் நமஸ்யாம்யஹம் ॥ ௪ ॥ ஸ்ரீமஜ்ஜ்யோதிஸ்ஸ்வரூபம் ஸதாநந்தம் பரமபதவீம் த்ருஷ்டிஜ்ஞாநாமயம் நமாமி நமஸ்ஸர்வஜ்ஞம் பரமாத்மஸ்வரூபம் | ஸ்வஸ்வரூபவிஜ்ஞாநதம் ஸ்ரீமத்ஸ்வாமிநம் ப்ரஹ்மாநந்தகுரும் ஶரண்யமநகம் ஸம்யோகவேத்யம் நமஸ்யாம்யஹம்॥

பஞ்சகம் ஸமாப்தம்.

Koviloor Digital Library

(௩)—தத்துவவிவேகப்பிரகரணசாரார்த்தப்பிரகாசிகை.

இந்நூலாசிரியராகிய வித்தியாரண்ணியமுனீசுவரர்கள், வேதார்த்தங்களேயும், உபநிஷதர்த்தங்களேயும், வெளியிடவிரும்பி, தாபனீய உபநிஷத்தில் தெரிவித்திருக்கிற சச்சிதானந்தபதங்களின், தாற்பரியத்தை அனேவரும் எளிதில் அறிந்து, சம்சாரசமுத்திரத்திலிருந்து கரையேறி, நித்தியநிருப்தர்களாய் வாழக்கடவர்களென்று, அறிந்த அம்மகாத்துமா (சத்) என்ற சப்தார்த்தத்திற்கு, விவேகபஞ்சகத்தையும், (சித்து) என்ற பதத்தினர்த்தத்திற்கு, தீபிகாபஞ்சகத்தையும், (ஆனந்தம்) என்ற பதத்தினர்த்தத்திற்கு, ஆனந்த பஞ்சகத்தையும், ஒன்றுசேர்த்து (பஞ்சதசி) என்கிற (15) ந்து பிரகரணத்தில், (1) வது பிரகரணமான பிரத்தியக் தத்துவவிவேகத்தை உரைக்கின்றார்.

இந்தப் பிரகரணமானது, வேதாந்தப் பிரகரணமானபடியினால், முதல் முதல் அனுபந்தசதுஷ்டயமென்கிற, நான்குலட்சணம் தெரிவித்ததின்பிறகே சாஸ்திரம் ஆரம்பிக்கவேண்டியதென்று பெரியோர்களின் சம்மதப்பிரகாரம், அந்நான்கையும் இந்நூலாசிரியர் (1-2) சுலோகங்களினால் வெளியிட்டனர். எவ்விதம் வெளியிட்டனரெனில், முதல் சுலோகம் பூர்வார்த்த உத்தரார்த்தத்தால் குருவணக்கம் தெரிவித்ததின்மேல் முறையிட்ட அனுபந்தசதுஷ்டயத்தில், துக்கநிவர்த்தி, ஆனந்தாவாப்திரூபமான பிரயோசனமென்ற (1) வது லட்சணமும், கூடஸ்தபிரமைக்கியரூபமான விஷயமென்கிற (2) வது லட்சணமும், (2) வது சுலோகம் பூர்வார்த்தத்தில் குருவுக்கும், சிஷியனுக்கும், சாஸ்திரத்திற்கும், பிரமத்திற்கும், ஐக்கியரூபமான (3) வது லட்சணமும், நித்தியாநித்தியவிவேகம், இகாமுத்திரார்த்தபலபோகவிராகம், சமாதிஷட்கம், முமுட்சுத்துவமென்கிற, அதிகாரரூபமான (4) வது லட்சணமும் சொன்னதாய்க் கருதி, தன் குருவான சங்கரானந்தசுவாமிகளின் பாதகமலங்கள், ஜீவேசுவர ஜகத் காரியங்களோடே கூடிக்கொண்டிருக்கிற மகா மோகரூபமான மூலாஞானமாகிற முதலையை விழுங்குகிறதில் முக்கியமான வியாபாரத்தையுடையதாயும், சகலசம்பத்துக்கள்நிறைந்த ஸ்ரீ சங்கரானந்தகுரு பாதகமலங்களின் பொருட்டு வந்தனம்கூறி, அக்கமலங்களேப் பூஜித்து, நிர்மலமான மனதையுடையவர்களுக்கு; இப் பிரத்தியக் தத்துவவிவேகமென்கிற முதலாவது பிரகரணம் கூறுகின்றனர். (35) ந்து தத்துவத்தோடே கூடியிருக்கின்ற ஜாக்கிராவஸ்தையில் சப்தாதிவிஷயங்கள் நானாவாயும், அவைகளேயறிந்த அறிவு ஒன்றாயும், அவ்விதமே (24) தத்துவத்துடன் கலந்த சொப்பனாவஸ்தைகள் பலவாயும், அதை யறிந்த அறிவு ஒன்றாயும், ஜாக்கிர சொப்பனங்கள் ஸ்திரா ஸ்திர பேதங்களுடன் கலந்தனவன்றி, வேறு விசேஷமொன்றில்லையென்று விரித்துக் காட்டினர். அவ்வொழுங்காய் (4) தத்துவங்களுடன் கூடின சுஷுப்தியவஸ்தையில், அஞ்ஞானவிஷயத்தையும் அறிந்த அறிவு ஏகமாயும், அஞ்ஞானவிஷயத்தால், தானான அறிவு, அறியப்படாததாயும், சுஷுப்திகாலத்திலிருந்த அறிவினனுபவம், அச்சுஷுப்திவிட் டெழுந்தோ

Koviloor Digital Library

ளுக்கு, இதுகாலம்வரையில் ஒன்றும் தெரியாமற் சுகமாய்த் தூங்கினேனென்கிற அஞ்ஞானுனுபவமும், அறிவின் ஏகத்தன்மையும், தினம் ஒரேபடித்தாய் எல்லாஜீவர்களுக்கும் அபேதமாய் அறியப்படுகிறபடியால், மூன்றவஸ்தைகளிலும் காண்கின்ற அறிவு ஒன்றென்று தீர்மானம் செய்யப்பட்டது. அம்முறையே மறு தினத்திலும், மறு பக்ஷங்களிலும், மறு மாசங்களிலும், மறு வருஷங்களிலும், மறுயுகங்களிலும், மறுகற்பங்களிலும் அறிவு ஒன்றென்று யுக்தியினல் சத்வஸ்துவின் சொரூபம் சாதித்தனர். அவ்வாறு எந்த அறிவானது உதயமும், நாசமுமற்ற சுவப்பிரகாசவடிவமோ, அதுவே சித்வஸ்துவின் சுவரூபம். லோகத்தில் மனவிமுதலான சகலமானவஸ்துக்களில் வைக்கும் பிரியம் யாதோ, அதுவே ஆனந்தவஸ்துவின்சொரூபம். ஒருபிராணிக்காவது நாமெப்போதும் மறிக்கக்கூடாது, சிரஞ்சீவியாயிருக்கவேண்டுமென்கிற அதிகப் பிரியமானது தானுன அறிவினிடத்தில், எக்காலும் பார்க்கப்பட்டு தன் சுகத்திற் கனுகுணமாயிருக்கிற பதார்த்தத்தில் பிரியமும், அதற்கு விருத்தம் செய்கிற ஜீவர்களிடத்தில் கோபமு முண்டாய், சர்வானுபவசித்தமான அதிகப் பிரியமானது இந்த அறிவினிடத்தில் பார்க்கப்படுகின்றது. அவ்வித வேதுவால், தானே, ஆனந்தசொரூபனென்று அறைந்தனர். இவ்விதமுரைத்த ஆசானை வணங்கி, என் அண்ணலே, தாம், சச்சிதானந்தபதங்களுக்கு ஒன்றாயிருக்கும் தன்மையை தன்னுவினல் யுக்தியாலுரைத்ததன்றி, வேறு சுருதி பிரமாணம் யான் கண்டிலேன். அஃது யானறியும்வண்ணம் அன்புடனருள்வாயாகவென, ஆனந்தபாஷ்பமலரினலருச்சித்த அன்பனைநோக்கி யையனருளினின்றனர். எமதன்புடை மைந்தா கேளாய், நீகேட்டவினவுக்கு சகல உபநிடதமும், வேதங்களும் கூறினதையானிங்கருளிச்செய்கின்றனம், சாந்தோக்கிய உபநிஷத்திலும், கைவல்லியோபநிஷத்திலும், இன்னும் மற்றுமுள்ள சுருதிகளிலும் தத்துவம் பதார்த்தரான கூடஸ்தரோ லக்ஷியார்த்தரொன்றும், சச்சிதானந்தரூபரொன்றும், அவரோ நித்தியரொன்றும் கூறுகின்ற சுருதியினர்த்தத்தை மனதில் நிச்சயித்தும் மேல் அனேகவிடங்களில் சுருதியின் தாற்பரியத்தையே நன்ருய் வெளியிடப்போகிறபடியால், இங்கு சுருக்கிக் கூறினம். நீர்சொன்னபடியிருக்கட்டும், ஆத்துமா பரமானந்தரூபரொன்று கூறினதில் நான் ஆசேஷபணைசெய்கிறேன், அதாவது, தங்களால் சொல்லப்பட்ட ஆத்துமா விளங்குகிறுரா, அல்லது, விளங்கவில்லையாவென்று ஆக்ஷேபணைசெய்து விளங்கும்பட்சத்தில், அழிந்துபோகிறதாயும், அற்பமாயு மிருக்கிற விஷய சுகத்திலாசைவரமாட்டாதே, விளங்காததாயிருக்கும்பட்சத்தில் பரமானந்த சொரூபம் கெட்டுப்போய்விடுமே, இதற்கென்னசமாதானம்கூறுகின்றீரெனக் கேட்ட அன்பனுக் கனுக்கிரகம் செய்கின்றனர். ஏ அன்பா, இவ்வாத்தும சொரூபம் விளங்கியும் விளங்காமையுமா யிருக்கின்றது. அக்காரணத்தால் பரமானந்தரூபம் விளங்கவில்லை. அது எதுபோலவெனில், தன்பிள்ளையும்,

Koviloor Digital Library

அத்தியயனம் செய்கிற அனேகம் பிள்ளைகளுடைய கூட்டத்திலிருந்து வேதாத்தியயனம் செய்கிற குரல் விளங்கியும் விளங்காமையா யிருப்பதுபோல இவ்வறிவும் விளங்கியும், விளங்காமையாயு மிருக்கின்றது. அவ்வேதுபற்றி யாம் பரமானந்தசொரூபமெனக் கூறினம். அதை விரித்துரைக்கின்றனர், திருஷ்டாந்தத்தில் மைந்தன் குரலறியாமைக்கு அம்மாணாக்கர்கள் பிரதிபந்தமாயிருப்பதுபோ லிவ்விடத்தில் வஸ்துவில்லை, வஸ்துவிளங்கவில்லையென்கிற ரூபமாயிருக்கிற ஆவரணசக்தியே பிரதிபந்தகமாயிருந்து வஸ்துவில்லை வஸ்து விளங்கவில்லையென்ற அநுபவரூபமாய் மறைப்பதே மேலான பிரதிபந்தகமென்று இங்ஙனம் முறையிட்டனம். அவ்வாவரணசக்திக்குக் காரணமான மூலபிரகிருதியைத் தெரிவிக்கின்றனர். இவ்விடத்தில், அநாதியா யிருக்கிற மகாமாயையே மூலப் பிரகிருதியென்றும், அது பிரம பிரதிபலனத்துடன் கூடியிருக்கிறதென்றும், சத்துவ ரஜஸ்தமோகுணங்களுடன்சேர்ந்திருக்கின்றனவென்றும், சுத்தசத்துவகுணமான மாயையிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் அம்மாயையைச் சுவாதீனம்செய்து சர்வஞ்ஞனும், சர்வேசுவரனும், சர்வசக்திமானும், அதைத்தானே சமஷ்டிகாரணசரீரமாய் அபிமானித்து விளங்குகின்றனர். அவ்விரஜோகுணமான மலினசத்துவ அவித்தையில் பிரதிபலித்து, அவ்வவித்தை வெகுவிதமாயிருப்பதால் அதிற்பிரதிபலித்த ஜீவர்கள் அனேகர்களாகவிருந்து அவ்வவித்தியாசுவாதீனர்களாய் வியஷ்டியான அக்காரணசரீரத்திலேயே அபிமானியாய், பிராஞ்ஞன் என்ற நாமம்பூண்டு விளங்குகின்றனன். மீதியான அத்தமோகுணத்தை பிராஞ்ஞர்களின் போகானுபவத்திற்காக அவ்வீசன், ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, இப்பஞ்சபூதங்களைச் சிருஷ்டித்தனர். அக்காரணகுணம் ஐம்பூதங்களினும் கலந்திருத்தல்பற்றி, சத்துவகுணவியஷ்டியில் சுரோத்திராதி ஞானகருவிகளைந்தும், சத்துவகுணசமஷ்டியில் மனம் புத்தி யிரண்டும், ரஜோகுணவியஷ்டியில் வாக்காதி தொழிற்கருவிகளைந்தும், ரஜோகுணசமஷ்டியில் பிராணாதிபஞ்சவாயுக்களுமுண்டாய் இப்பதினேழும் சேர்ந்து சூக்ஷுமசரீரமென்றும், அவ்வியஷ்டி சூக்ஷுமசரீரத்தில் அப்பிராஞ்ஞனை ஜீவன் தைஜசனென்றும் பேசைவகித்தும், அவ்வீசன் அச்சமஷ்டி சூக்ஷுமசரீரத்தில் இரணியகருப்பனென்றும் நாமம்பூண்டு விளங்குகின்றனர். அச்சீவர்களின் போகபலானுபவத்திற்கேதுவாய் அவ்வீசன் அவ்வைம்பூதங்களையும் மீதியான தமோகுணத்தால் பஞ்சீகரணம் செய்தனர். பஞ்சீகரணமாவன, அவ்வாகாசாதி யைம்பூதங்களை ஒவ்வொன்றையும் இரண்டாகச்செய்து அவ்வொவ்வொன்றை நான்காக்கி, அந்நான்கை அவ்விதரபூதங்களுடன் சேர்த்து ஒருமித்து இத்தூலசரீரத்தை யிவ்விதம் பஞ்சீகரணம் செய்தனர், அதின்பின்னர் அச்சமஷ்டி ஸ்தூலவுடலில் அவ்விரணியகர்ப்பர், அபிமானிக்குங்காலையில் விராட்டென்ற நாமம்பூண்டனர். இவ்வியஷ்டி ஸ்தூலவுடலில் அத் தைஜசன் அபிமானிக்

Koviloor Digital Library

ரும் சமயத்தில் விசுவனென்றும் பேரையடைந்து விளங்குகின்றனன். அவை களிலிருந்து அண்டமும், ஈரேழுலோகங்களும் போக்கியவஸ்துக்களும் போகஸ்தானங்களும், ஜராயு ஜாதி நான்குவிதசரீரங்களும், அவைகளுணவும் ஈசன் உண்டுபண்ணினர். அச்சீவர்கள் புண்ணியமிசிரபாபகர்மத்தால் தேவ மனிதத் திரியக்காதி சரீரங்களையடைந்து வெளிதிருஷ்டியான விஷயநோக்க முள்ளவர்களாய், அந்தரங்கமான ஆத்துமதத்துவஞானத்தை ஒருக்காலு மறியாதவர்களாய், உண்டதே உறுதி, கண்டதே காக்ஷியென்றுநினைத்து சதா துக்கிகளாய் கர்மஞ்செய்து போகமருந்தி காமிகளாய் மூடர்கள் விளங்குகின் றனர். நதியிற் சுழியில்விழுந்து அவஸ்தையுறும் புழுப்போல சுகமற்றதா யிருக்குங்காலை முன்ஜனனத்திற்செய்த தவத்தால் தயாளுவான புருஷன் அந்நதிக்கரையை யடைந்து, அப்புழுவையெடுத்து அத்தீர மரத்தினடியில் வைத்து, அதுசுகிப்பதுபோல், இச்சீவர்களும் பிரவிக்கடலிலமிழ்ந்து, அனே கசரீரங்களாகிற சுழியில்வீழ்ந்து துக்கிகளாய் வருந்துங்காலை யிச்சீவர்கள் முற்பிறப்பிற்செய்த சற்கருமபுண்ணியவிசேஷத்தால் மகாதயாளுவாயும், வே தசாஸ்திரங் கற்றவராயும், தத்துவசொரூபத்தை நன்றாய்க் கரைகண்டவரா யும், பிர்மவித்தாயுமிருக்கிற ஆசாரியரால் இம்மாணுக்கர்கள் பஞ்சகோச வி வேகத்தால் மேலான மோக்ஷசுகத்தை அடையவேண்டியதுதான் ஜன்மமெ டுத்தபலனென்று கூறினர். இவ்விதமறைந்த அம்மொழியைக் கேட்டவன் பின், இருதாள்வணங்கி, என்தெய்வமே, பஞ்சகோசத்தின் ஸ்வரூபத்தையும், அதையடைந்து அதின்வழியாய் ஜீவாத்துமா பந்தப்பட்டிருப்பதையும் அநி வர்த்தியும் அனுக்கிரகிக்கவேண்டுமென்று சொன்ன மொழியைச் செவி யுற்ற ஆசானவர் மறுபடியும் கூறுகின்றனர். பஞ்சீகரணபூதத்திலுண்டான அன்னமயரூபமென்ன, வாக்காதீந்திரியமும், பிராணனும்சேர்ந்த பிராணமய ரூபமென்ன, ஞானேந்திரியத்தோடேகூடின மனோமயரூபமென்ன, அவ்விந் திரியங்களுடன்கூடின விஞ்ஞானமயரூபமென்ன, பிரிய, மோத, பிரமோதா திவிருத்தியுடன்கூடின ஆனந்தமயரூபமென்ன, இவ்வைங்கோசங்களில் ஆந் துமா, அத்தியாசத்தையடைந்து அந்தந்தகோசங்களின் தன்மையில் மூழ் கித் தன்னுடைய சச்சிதானந்த ஸ்வரூபத்தை மறந்தவராய், பெருத்தே னி ளைத்தேனென்று அன்னமயகோசாத்தியாசத்தையும், பசிதாகத்துடன் கூடி னபிராணமயகோசாத்தியாசத்தையும், சங்கற்ப விகற்பம் செய்தேனென்ற மனோமயகோசாத்தியாசத்தையும், கருத்தாவான விஞ்ஞானமயகோசாத்தி யாசத்தையும், நான் போக்தாவென்ற ஆனந்தமயாத்தியாசத்தையும் அடைந் து அந்தந்த கோசரூபனாய் சம்சாரத்தில்மூழ்கிக் கிடக்கின்றார். இவரை அன் வய வியதிரேகயுக்தியான பஞ்சகோசவிவேகத்தால் பிரித்தறிந்து சம்சார ச முத்திரத்திலிருந்து கரைபேற்றி மேலான பிரமஸ்வரூபத்தை அடையும்படி செய்யவேண்டியது. அன்வயவியதிரேகலட்சணங்கூறல், ஸ்தூலசரீரந்தோன்

Koviloor Digital Library

ருத சொப்பனவஸ்தையில் ஆத்துமாவாகிய தான்தோன்றுகிறதே அன்வ யம் இத்தூலவுடல் தோன்றாமையே வியதிரேகம். அவ்வாறு சூக்குமசரீரம் தோன்றாத சுஷுப்தியில் தான் தோன்றுகிறதே அன்வயம். இச்சூக்குமவு டல்தோன்றாமையே வியதிரேகம். இது வியதிரேகத்தால் பிராணாதி மூன்று கோசங்களும் நேதிசெய்ததாய் ஆய்விட்டது. அவ்விதமாய் சுழுப்திதோன் றாத நிர்விகற்பசமாதியில் தான் தோன்றுகிறதே அன்வயம். தான் தோன்றி னும் இக்காரணவுடல்தோன்றாமையே வியதிரேகம். ஆற்றங்கரையிலிருக்கிற நாணலின் மேல் இதழ்களைக் களைந்து, நடுக்கதிரைக் கொள்வதுபோல், இப் பஞ்சகோசங்களாகிற மேல் இதழ்களை மேற்சொன்ன அன்வய வியதிரேக யுக்தியால் அத்தியாசத்தைக் களைந்து, ஹிருதயமாயிருக்கிற நடுவில் விளங்கு கின்ற சச்சிதானந்தஸ்வரூபமான தத்துவம்பதலக்ஷியார்த்த பிரம ஸ்வரூபத் தை பிரித்தறிந்தவன் பிர்மமாயாவன். இம்மொழியினாலே கூடஸ்த பிரமங்க ளுக்கைக்கியமானது யுக்தியால் சம்பவித்திருக்கிறது. அவ்விதமே சாந்தோக் கிய உபநிஷத்து ஆறுவதத்தியாயத்தில் சுவேதகேதுவான தன்மைந்தனுக்கு, உத்தாலகமகரிஷியானவர் உபதேசவாக்கியமென்கிற (3) வதான (தத்துவமசி) மகாவாக்கியத்தால் அனுக்கிரகம்செய்து, விட்டுவிடாதலட்சணையினால் லக்ஷி யார்த்தத்தைக் காண்பித்திருக்கிற மகாவாக்கியார்த்தத்தின் தாற்பரியத்தை யிந்நூலாசான் இங்கு விரித்துரைக்கின்றனர். யாதொரு பிர்மமானது தமோ குணமான மாயையைக் கிரகித்து ஜகத்துக் குபாதானமாயும், சுத்தசத்துவ மான மாயையைக் கிரகித்து, ஜகத்திற்கு நிமித்தகாரணமாயுமிருக்கிற பிரமம் (தத்) என்கிறபதத்தினால் சொல்லப்படுகின்றது. அப்பிரமமே எப்போ, காம கர்மாதிகளுடன்கூடின ரஜோகுணமான மலினசத்துவத்தை கிரகித்தாரோ அப்போ (துவம்) என்ற பதத்தினால் சொல்லப்படுகின்றது. மூன்றுகளும் ஒன்றுக்கொன்று விரோதங்களாயிருப்பதால் அவைகளைத் தள்ளி, பூரணமா யும், சச்சிதானந்தமாயுமிருக்கிற பிரமத்தை (தத்துவமசி) மகாவாக்கியத்தி னால் லக்ஷியார்த்தமாக விளக்கிவைக்கின்றார். அவனே இந்த (தேவதத்தன்) என்கிற வாக்கியத்தில் அவனிவன் என்கிற வாக்கியத்தைத் தள்ளி, விட்டுவி டாத லக்ஷணையால் தேவதத்தன் ஒருவனென்று அறிவதுபோல, இங்கும், ஜீவேசுவரர்களுக் குபாதியான, அவித்தியா மாயைகளைத் தள்ளி, அகண்ட சச்சிதானந்த தத்பத லக்ஷியார்த்தமான பிரமத்திற்கும், சச்சிதானந்தத் து வம்பத கூடஸ்தருக்கும், பாகத்தியாகலக்ஷணையினால் (அசி) என்றபதம் ஐக் கியம் செய்கின்றது. நீர்சொன்ன லக்ஷியத்தன்மை, சகவிற்பவஸ்துவிற்கா, அல்லது, நிர்விகற்பவஸ்துவிற்காவென்று சீடன் ஆக்ஷேபணைசெய்து, இரண் டாவதாக்ஷேபரூபமான நிர்விகற்பவஸ்துவுக்கு லக்ஷியத்தன்மை யொருக்கா லும் பரிக்கமுடியாது, ஓரிடத்திலும் சம்பவிக்கவுமாட்டாதென் றிவ்வித மு றைத்த சிஷியனைநோக்கி, குரு அவனையே கேழ்க்கிறார். நீசெய்த இந்த

Koviloor Digital Library

ஆபேக்ஷபணையானது, நிர்விகற்பவஸ்துவிற்கா, அல்லது, சவிகற்பவஸ்துவிற்கா, சொல், முதல்பக்ஷத்திற்கு, உன்னாலே, கூடாதென்றுபேக்ஷபணை சொல்லிவிட்டாய், இரண்டாவதுபக்ஷத்திற்கென்றனாப்பையேயானால், விவஸ்தையில்லாத அனவஸ்தாதோஷமும், அனேகாந்துமாகாரணமென்ற ஆத்துமாசிரய தோஷமும், வண்டிச்சக்கிரம்போல், எப்போதும் சுற்றிக்கொண்டிருக்கிற சக்கிரகாப்திமுதலான இன்னுமனேகதோஷங்கள்வந்துசேரும். இவ் விசேஷங்கள் இதரசாஸ்திரங்களில் விரிவாய் காணப்படுகின்றன. அவ்வேதுவைப்பற்றியும், கிரந்தம் விரிவாகுமென்றகருத்தைப்பற்றியும், இந்நூலாசான் சுருக்கியுரைத்தனர். நீசெய்தவிகற்பங்களிலும், அவைகளினபாவங்களிலும் சம்பந்தப்படாத, ஆத்துமவஸ்துவில் விகற்பத்தன்மையும், லக்ஷியத்தன்மையும், இவைமுதலான சகலசம்பந்தங்களும் சுத்தகற்பிதம், இதிற் சற்றேனுமையமுறமல் ஆறுவிதலிங்கத்தோடும், குருமுகமாய் அதின் தாற்பரியத்தை விசாரிப்பது சிரவணமெனப்படும். தான் சிரவணம்பண்ணின அர்த்தத்தை மறவாமல் தனித்திருந்து அனுசந்தானம்செய்கிறது மனனமென்றுகூறப்படும். சிரவணத்தினாலும், மனனத்தினாலுமுண்டாயிருக்கிற திடவிருத்தியினாலே நான் அகண்டன், சின்மாத்திரன் என்றபாவனை இடைவிடாத அனுசந்தானமே நிதித்தியாசனமெனப்படும். தியானம்பண்ணின, சுத்தஜீவனும், சுத்தவிருத்தியும், தியேயமாத்திரமாயிருக்கிற பிரமவஸ்துமாத்திரமே மீதமாகி, காற்றற்றவிடத்திலிருக்கிற தீபம்போல் அச்சுத்தவிருத்தி அப்பிரமவஸ்துவில், இதரவைதசலனமின்றி சமமாயிருப்பதே சமாதியெனக் கூறினர். அந்நிர்விகற்பசமாதியில் ஆத்துமாவையே யனுசரித்த அச்சுத்தவிருத்தி யிருக்கிறதென்று அச்சமயம் தெரியாவிடினும், அந்நிர்விகற்பசமாதியிலிருந்து எழுந்தோனுக்கு நானிதுகாலபரியந்தம் சுகமாய்ப் பிரமானுபவம் செய்தேனென்ற ஸ்மரணம் வருவதால், அச்சமயத்தில் அச்சுத்தவிருத்தி இருந்ததென அறிந்துகொள்ளத்தக்கது. அச்சமாதியில் அச்சுத்தவிருத்தி இருப்பானேனெனில், இவன் நிர்விகற்பசமாதிக்குப் போகுமுன் செய்த பிரயத்தினத்தாலும், பார்க்கப்படாத புண்ணியவிசேஷத்தாலும் முன் அடிக்கடிசெய்த பிரமாப்பியாசவிசேஷபழக்கத்தாலும், அச்சத்துவவிருத்தி யிருந்ததென அங்கீகரிக்கத்தக்கது. காற்றற்றவிடத்திலிருக்கிற தீபம்போல் நிர்விகற்பசமாதியில் விருத்தியிருந்ததென, சர்வலோகசரணியரான கிருஷ்ணபகவான் கீதையில் அருச்சுனனுக்கு இவ்விதமே உரைத்திருக்கின்றனர். இச்சமாதியே தர்மமேகமென்றுமேலோர் வெளியிட்டனர். இவ்விதம் குருமுகமாய் தெரிந்துகொண்ட பரோக்ஷஞானக்கினியானது மனதறிந்த பாபத்தையும் தகிக்கிறது. சம்சாரகாரணமான அஞ்ஞானமாகிற இருட்டுக்கு மத்தியான்ன சூரியன்போ லெரிப்பது அபரோக்ஷஞானமென்று கூறி முடித்தனர்.

முற்றிற்று.

Koviloor Digital Library

ஶ்ரீரஸ்து.

ஶ்ரீகணேஶாய நம:.

ஶ்ரீமச்சிம்ஹப்ரஹ்மாநந்தகுரவே நம:.

ஶ்ரீவித்யாரண்யஸ்வாமிக்ருத பஞ்சதஶீபதயோஜநீ

டீகாவிஸ்தாரபயாத்பததீபிகா ப்ராரப்யதே.

ப்ரத்யக்தத்த்வவிவேக:

नत्वा श्री भारतीतीर्थ विद्यारण्य मुनीश्वरौ ।
प्रत्यक्तत्वविवेकस्य क्रियते पददीपिका ॥

நத்வா ஶ்ரீ பாரதீதீர்த்த வித்யாரண்ய முநீஶ்வரௌ ।
ப்ரத்யக்தத்த்வவிவேகஸ்ய க்ரியதே பததீபிகா ॥

ஸ்ரீபாரதீதீர்த்த வித்தியாரண்ணிய முனீசுவரர்களை வந்தனம்பண்ணி பிரத்தியக் தத்துவவிவேகத்திற்கு பததீபிகை செய்யப்படுகிறது.

அவதாரிகை. ஆரம்பிக்கப்படுகிற கிரந்தமானது விக்கினமன்றி முடியும் பொருட்டும், விருத்தியடையும்பொருட்டும், பெரியவாளுடைய ஆசரணையினால் அடையப்பட்டதாயிருக்கிற இஷ்டதேவதாரூபமான தன்குருவின் நமஸ்காரலக்ஷண மங்களாசரணமானது தன்னால் செய்யப்பட்டதை சிஷ்ய சிக்ஷார்த்தமாக சுலோகமாகவே செய்கிறார். :அதின் அர்த்தத்தினால் விஷயப் பிரயோஜனங்களையும் குறிப்பிக்கிறார்.

க்ரந்தாரம்பஶ்லோக:.

नमःश्रीशङ्करानन्दगुरुपादांबुजन्मने ।
सविलासमहामोहग्राहग्रासैककर्मणे ॥

நம:ஶ்ரீஶங்கராநந்தகுருபாதாம்புஜந்மநே ।
ஸவிலாஸமஹாமோஹக்ராஹக்ராஸைககர்மணே ॥ ௧ ॥

ஸவிலாஸமஹாமோஹக்ராஹக்ராஸைககர்மணே	காரியசமுகத்தோடே கூடியிருக்கிறமூலாஞானமான முதலையை விழுங்குகிறதே முக்கியவேலையாயிருக்கிற
ஶ்ரீஶங்கராநந்தகுருபாதாம்புஜந்மநே . . .	சர்வசம்பத்தினாலே சிஷ்யாளுக்கும் உலகத்திற்கும் ஆனந்தத்தை கொடுக்கிறசங்கரானந்த குருவின் பாதகமலத்தின்பொருட்டு
நம: (அஸ்து) .	நமஸ்காரம் செய்யக்கடவது.

பதார்த்தம். ஆனந்தத்தைச் செய்கிறவர் சங்கரர் சகல ஜகத்திற்கும் ஆனந்தத்தைச் செய்கிறவரான பரமாத்மா, இவரே ஆனந்தத்தை பண்ணுவிக்கிறாரென்கிற சுருதியாலறிக. ஆனந்தமென்கிற சொல்லுக்கு நிரதிசயமான பிரீதிக்கு இருப்பிடமென்று அர்த்தமானதால் பரமானந்தரூபரான பிரத்யகாத்மா சங்கரானந்தமென்பதற்கு பிரத்யகபின்னபரமாத்மா, அவரேகுரு, இதற்குதாரணம். யாதொருபுருடனுக்கு பரிபக்குவமாய் சித்தம் நிர்மலமாயிருக்கிறதோ அவனுக்கு பந்தரூபமான பாபத்தை நிவர்த்திக்கிறதற்கு ஹேதுவாயிருக்கிற குருநாதனுடையகடாக்ஷவீக்ஷண்யரூபமான தீக்ஷையால் சக்திபாதம்வந்து, மாயை நஷ்டமானவுடன் பரதத்வத்தில் இவர்களை யெவர் சேர்த்துவைக்கிறாரோ அவரே குருவென்று ஆகமத்தில் சொல்லியிருப்பதாலும், ஸ்ரீமானென்பதற்கு அணிமாதி அஷ்டைசுவரியத்வமும் குருவுக்கு இருக்கிறதாக குறிப்பிவிக்கப்பட்டது. இன்னும், ஸ்ரீயினாலே ஆனந்தத்தைச்செய்விக்கிறாரென்றும், அந்தரங்க இஷ்டராயிருக்கிற குருவே வள்ளலென்றும், மேலானமோக்ஷரூபியென்றும் சொல்லாநின்ற சுருதிவாக்கியத்தால் சிஷியர்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதில் குருவுக்கு வல்லமையிருக்கிறதென்பதும் குறிப்பிவிக்கப்பட்டது. அக்குருவின்பாதங்களே கமலம், அதின்பொருட்டு வணக்கம், அப்பாதம் எவ்விதமாயிருக்கிறதென்றால், நாமரூபாத்மகமான காரிய சமூகத்தோடே கூடிக்கொண்டிருக்கிற மஹாமோஹமென்கிற மூலாஞானமாகிற முதலையானது தன்கையிலகப்பட்டவர்களை மிகவும் பீடிப்பதால், இது மகாகெட்டதென்று நினைத்து அதை விழுங்குகிறதே முக்கியவேலையா யிருக்கிறது. (இதின்விசேஷம்) இதில் சங்கரானந்தமென்கிற இரண்டுபதங்களின் சமானாதிகரணத்தால் கூடஸ்தபிரமத்திற்கு ஏகத்துவமே விஷயம். கூடஸ்தருக்குப் பூரணபிரமரூபமான அபரிச்சின்னசுகோதயமே பிரயோஜனம். மாயையை விழுங்குகிறதென்பதால், அத்தியந்ததுக்கநிவர்த்திரூபமான பிரயோஜனம் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்குயுக்தி. இருளுக்குச் சூரியனும், கள்ளனுக்குக் காவலனும், வியாதிக்கிச் சித்தனும், தரித்திரத்திற்குச் சிந்தாமணியும், பேய்க்கு மந்திரவாதியும் போல குருவின்பாதம் அஞ்ஞானத்தைப் போக்குமென்றறி.

அ-கை. இப்போ அவாந்திர பிரயோஜனத்தோடே கிரந்தாரம்பம் செய்கிறார்.

तत्पादांबुरुहद्वन्द्वसेवानिर्मलचेतसाम् ।
सुखबोधायतत्वस्यविवेकोयं विधीयते ॥

தத்பாதாம்புருஹத்வந்த்வஸேவாநிர்மலசேதஸாம் ।
ஸுகபோதாயதத்வஸ்ய விவேகோயம் விதீயதே ॥ உ ॥

Koviloor Digital Library

தத்வாஞாம்பவாரஸஹஸ்ரஅவேவாநிதீ உபெவதவா — அந்தகுருவின்பாதங்களாகிற உபயகமலங்களுடைய நமஸ்காரஸ்துதி முதலான பணிவிடையினாலேயே இராகத்வேஷாதி மலரகிதமனதோடேகூடியிருக்கிறபேர்களுக்கு

ஸாவலொயாய=அனுயாசமாக தத்துவஞ்ஞான முண்டாகிறதின்பொருட்டு

தகூவஸ்ய=சொல்லப்போகிற அனுரோபிதமாயிருக்கிற, தத்துவத்தினுடைய

கூயம=இந்த, விவெகஃ=விவேகமானது, வியீயவெத=விதிக்கப்படுகிறது.

ப-ம். தத்துவவிவேகமென்பதற்கு அர்த்தம். ஆரோபமான பஞ்சகோசாதிஜெகத்தில்நின்றும், ஆத்மாவுக்கு பிரித்தல் சொல்லப்படுகிறது.

இ-தி. வெள்ளாவியில்வைக்கப்பட்ட வஸ்திரத்திற்கு குசும்பாச்சாயமேற்றுவதுபோலும், உரம்வைத்த நிலம் நன்றாய் விளைவதுபோலும், சுத்தகண்ணாடியில் முகம் நன்றாய் விளங்குவதுபோலும், வாழைமரத்திலிருக்கிற மேல்மட்டையைப் பிரித்துத் தண்டையெடுப்பதுபோலுமென்றறியத்தக்கது.

அ-கை. ஜீவப்பிரம்மைக்கியமாகிறவிஷயம் சம்பவிக்கிறதின்பொருட்டு ஜீவனுக்கு தன்னுடைய சச்சிதானந்தம் முதலான லக்ஷணத்தை காண்பிவிக்கிறதில் வாஞ்சையுடையவராயுமிருக்கிற இவர் ஆதியில் அவஸ்தாத்திரயத்திலும் அறிவினபேதச்சொல்லால், நித்தியத்துவத்தைச் சாதிக்கிறார். அதில் ஜாக்கிரத்தில் அறிவு ஒன்றாயிருப்பதைக்காண்பிவிக்கிறார்.

शब्दस्पर्शादयोवेद्या वैचित्र्याज्जागरेपृथक् ।
ततोविभक्तातत्संविदैकरूप्यान्नभिद्यते ॥

ஶப்தஸ்பர்ஶாதயொவெத்யா வைசித்ர்யாஜ்ஜாகரெப்ருதக் ।
ததொவிபக்தாதத்ஸம்விதைகரூப்யாந்நபித்யதெ ॥ ௩ ॥

ஜாகரெ (சகலேந்திரியங்களினாலேயும் சகலவிஷயஞானமுடைய) ஜாக்கிரத்தில்

வெத்யாஃ அறியயோக்கியங்களாயிருக்கிற

ஶப்தஸ்பர்ஶாதயஃ சப்தஸ்பரிசரூபரசகந்தங்கள்

வைசித்ர்யாத் = (பசு, குதிரைமுதலானவைபோல) விசித்திரமாயிருப்பதால்

ப்ருதக் வேறுவேறாயிருக்கின்றன ததஃ அவைகளினின்று

விபக்தா வேறாயும் தத்ஸம்வித்=அவைகளறியுமறிவானது

ஐகரூப்யாத்=ஒன்றாயிருப்பதால் நபித்யதெ பேதமடையவில்லை.

ப-ம். சப்தஸ்பரிசாதிகளென்றதால் அந்தகுணங்களுக்காதாரமான ஆகாசாதிபூதங்களும் வேறுவேறென்று சொன்னதாயிற்று. இதில் ஒரு அனுமானம் காண்பிவிக்கிறார். விவாதத்திலிருக்கிற அறிவானது ஸ்வபாவபேதசூன்

Koviloor Digital Library

வியமாய் இருக்கற்கு யோக்கியமாய் இருக்கத்தக்கது, அதுவே பிரதிக்ஞை. உபாதி அன்றியில் பேதம் சம்பவியாமையே ஹேது, ஆகாசம்போலென்பது திருஷ்டாந்தம். சப்தத்தை அறிகிற அறிவானது ஸ்பரிசத்தை அறிகிற அறிவைக்காட்டிலும் அறிவு அன்னியமற்றிருப்பதால் வேறன்று. ஸ்பரிசத்தை அறிகிற அறிவுபோலே ஒன்றாயிருக்கிற அறிவுக்கு ஆகாசத்தைப்போல உபாதிபேதத்தினாலேயே பேதவிகாரம் கூடுமாகையால் வாஸ்தவமாக பேதம் கற்பிக்கும்பக்ஷத்தில் பெரிதானவிரோதம் ஊஹிக்கத்தக்கதாய்வரும்.

இ-நி. இராஜன் ஒருவனும் படைகள் அநேகமாயும் யுத்தத்தில் காணப்படுவதுபோலும், பஞ்சவர்ணங்களோடேகூடின கண்ணாடிவீட்டுக்குள்ளிருக்கிற புருஷனொருவனும், பிரதிபலிக்கிறதோற்றங்களநேகமாயும்தோற்றுவது போலும், சுவர் ஒன்றாயும் சித்திரம் பலவாயும், கண் ஒன்றாயும் ரூபம் பலவாயும் தோற்றுவதுபோலுமென்றறி.

அ-கை. இப்போதுசொன்னநியாயத்தை ஸ்வப்பனத்திலுமறிவிக்கிறார்.

तथास्वप्नेत्रवेद्यन्तु नस्थिरं जागरेस्थिरम् ।
तद्भेदोतस्तयोस्संविदेकरूपानभिद्यते ॥

தயாஸ்வப்நேத்ர வேத்யந்து நஸ்திரம் ஜாகரேஸ்திரம் ।
தத்பேதோதஸ்தயோஸ்ஸம்விதேகரூபாநபித்யதே ॥ ச ॥

ஸ்வப்நே	ஸ்வப்னாவஸ்தையிலும்	ஸ்திரம்	(காலாந்திரத்திலும்) பார்க்க யோக்கியமாயிருக்கிறது
தயா	அப்படியே	தத்பேத:	அவைகளின்பேதமிவ்வளவே
அத்ர	இந்தஸ்வப்பனத்தில்	அத:	ஆகையினாலே
வேத்யம்	அறியப்படுகிறவிஷயமானது	தயோ:	அந்தஜாக்கிரஸ்வப்னங்களை
நஸ்திரம்	ஸ்திரமன்றியிலிருக்கிறது	ஸம்வித்	அறிகிற அறிவானது
ஜாகரே	ஜாக்கிரத்தில்	ஏகரூபா	(ஸதீ) ஏகரூபமானதால்
(வேத்யம்)	காண்கிறவிஷயமானது	நபித்யதே	பேதமன்றியிலிருக்கிறது.

ப-ம். ஜாக்கிரத்தில் விசித்திரஸ்வபாவமாயிருப்பதால் விஷயங்களுக்கு பேதமும் ஒன்றாயிருப்பதால் அறிவு பேதமில்லாமையும் எப்படியிருக்கின்றனவோ அப்பிரகாரமே கரணவியாபாரமற்ற ஸ்வப்பனத்தில், ஜாக்கிரத்தில் இடைவிடாது பழகினதினாலுண்டானவிஷயமானது ஸ்வப்பனமென்று சொல்லப்படும். இப்போதுசொன்ன ஸ்வப்பனாவஸ்தையிலும் விஷயங்கள் பேதமுள்ளவாயும், அறிவு ஒன்றாயுமிருக்கிறது.

சங்கை. ஜாக்கிரஸ்வப்பனங்கள் இரண்டிலும் அறிவு அபேதமாயும் விஷயங்கள் பேதமாயும் இருக்குமேயானால் அப்போது இது ஸ்வப்பனமென்றும், இது ஜாக்கிரமென்றும் பேதம் வரக்காரணமென்னவென்கிற சங்கைக்கு இந்

Koviloor Digital Library

த ஸ்வப்பனத்தில் காணப்பட்ட விஷயங்களானவை தோற்றமாத்திரமாயிருப்பதால் ஸ்திரமில்லாமலிருக்கின்றன, ஜாக்கிரத்திலேயோ என்றால் காணப்படுகிற விஷயங்களானவை காலாந்திரத்திலும் பார்க்க யோக்கியமாயிருப்பதால் ஸ்திரம். ஆகையால் இவைகளுக்கு ஸ்திராஸ்திரங்களாயிருக்கிறதே பேதமென்றுத்தரம்

இ-தி. வெண்ணெய்ப்பிள்ளையாரும், வெங்கலப்பிள்ளையாரும்போலும், மணலால் கட்டுகிறவீடும், சாமான் சேர்த்துக்கட்டுகிற வீடும்போலும், குழந்தைகள் கரியால் எழுதுவதும், பெரியவர்கள்சரக்கைச்சேர்த்து சித்திரம் எழுதுவதும், வேர்ச்சாயமும், பவுடர் சாயமும்போலவறி, ஸ்வப்பன ஜாக்கிரங்களுக்கு பேதம் சாதிக்கப்பட்டதால் அவைகளிலிருக்கிற அறிவுக்கும் பேதம் சொல்லப்படாதோவெனில், அவ்விரண்டிலும் இருக்கிற அறிவானது ஒன்றாகவேயிருப்பதால் பேதமில்லை. (இ-தி.) கோட்டைக்குவெளியில் படைகளோடு சேர்ந்து யுத்தம்பண்ணின அரசனே மந்திரி முதலானவர்கள் வீட்டுக்குப்போனபிற்பாடு அந்தஅரசனே கோட்டைக்குள் வந்து தான் ஒருவனாக கத்தியைவீசி காலம்போக்கிறவன் ஒருவனாயிருப்பதுபோலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் ஜாக்கிர ஸ்வப்பனங்களில் அறிவுக்கு அபேதத்தைச்சாதித்து சுஷுப்திகாலத்திலிருக்கிற அறிவுக்கும் அந்த அறிவோடே ஐக்கியத்தைச்சாதிக்கும்பொருட்டு அந்த அவஸ்தையிலும் அறிவு இருக்கிறதைச்சாதிக்கிறார்.

सुप्तोत्थितस्यसौषुप्ततमोबोधोभवेत्स्मृतिः ।
साचावबुद्धविषयाऽवबुद्धंतत्तदातमः ॥

ஸுப்தோத்திதஸ்ய ஸௌஷுப்ததமோபோதோ பவேத்ஸ்ம்ருதி:।
ஸாசாவபுத்தவிஷயாऽவபுத்தம் தத்ததா தம: ॥ ரு ॥

ஸுப்தோத்திதஸ்ய சுஷுப்தியிலிருந்து எழுந்திருந்த புருஷனுக்கு [து
ஸௌஷுப்ததமோபோத: சுஷுப்தியிலிருக்குமறியாமையை அறியுமறிவான

ஸ்ம்ருதி:	ஸ்மரணரூபமாக	பவேத்	பவிக்கிறது
ஸா ச	அந்த ஸ்மரணமும்	ததா	அந்தசுஷுப்திகாலத்தில்
அவபுத்தவிஷயா	அறியப்பட்டிருக்கிற அஞ்ஞானவிஷயமுடையது.	தத் தம:	அந்த அஞ்ஞானமானது
		அவபுத்தம்	= அறியப்பட்டதாக (பவேத்) பவிக்கிறது.

ப-ம். நித்திரையிலிருந்து எழுந்தவனுக்கு அந்த சுஷுப்தியிலே இருந்த அஞ்ஞானத்தை அறிந்த அறிவு இருந்ததற்கு ஒன்றும் அறியேனென்று வருகிறஸ்மரணம், அடையாளமே தவிர அனுபவமில்லை. அது எதினாலெனில், அனுபவஹேதுவாயிருக்கிற பார்க்கியாந்தரங்களான இந்திரிய சன்னிதான வியா

Koviloor Digital Library

ப்திலிங்காதிகளுடைய அபாவத்தாலென்றறிக. அதனால் அதிலென்னவாயிற்றென்றால் அந்த ஸ்மிருதியானது அந்த அஞ்ஞானவிஷயத்தை அறிந்ததாயிற்று. உலகத்தில் எதெது ஸ்மரிக்கப்படுகிறதோ, அதெல்லாம் அனுபவபூர்வமாகவே இருக்கிறது. அதினாலென்னவாயிற்றென்றால் அந்த ஹேதுவால் சுஷுப்தியிலிருக்கிற அஞ்ஞானம் அறியப்பட்டதாயிற்று. இதற்கு அனுமானம் காண்பிவிக்கிறார். விவாதத்திலிருக்கிற ஒன்றும் அறியேனென்கிற அறிவானது ஸ்மிருதிரூபமாயிருப்பதால் அனுபவபூர்வமாகஇருக்க யோக்கியமாக இருக்கிறது. (அவள் என் தாயென்று ஸ்மரணம் வருவதுபோல,) யுக்தி யாதொருவன் தீயால் தாபமடைந்தானோ அவனே ஜலத்தில் மூழ்கி எழுந்து குளிர்ச்சியாய் ஒன்றையுமின்னேரம் அறியாமலிருந்தேனென்பதுபோலவறி.

அ-கை. அந்த அனுபவத்தால் தனக்கு விஷயமான அஞ்ஞானத்திற்கு தான் வேறென்பதையும் அந்த அறிவுக்கு இந்த அறிவு அபேதமென்பதையும் சொல்லுகிறார்.

सबोधोविषयाद्भिन्नो नबोधात्स्वप्नबोधवत् ॥

ஸபோதோவிஷயாத்பிந்நோ நபோதாத்ஸ்வப்நபோதவத் ॥ ௫௨ ॥

ஸ:	அந்த	போதாத்	அறிவைக்காட்டிலும்
போத:	அறிவானது	ந பிந்ந:	வேறன்று
விஷயாத்	அறியாமையைக்காட்டிலும்	ஸ்வப்நபோதவத்	ஸ்வப்னத்தை அறிந்த அறிவைப் போல.
பிந்ந:	வேறு		

வி-ம். அனுமானம் அஞ்ஞானத்தை அறிந்த அறிவானது அறிவாயிருப்பதால் அஞ்ஞானத்திற்கு வேறாயிருக்கத்தக்கது. கெடத்தை அறிந்த அறிவு கெடத்திற்கு வேறாயிருப்பதுபோல அனுமானம் சுஷுப்தியை அறிந்த அறிவானது ஜாக்கிரத்தை அறிந்த அறிவைக்காட்டிலும் வேறாயிருப்பதால் அறிவு அபேதமாயிருக்கத்தக்கது. ஸ்வப்பனத்தை அறிந்த அறிவுபோல.

இ-தி. சூரியனையும் தீபத்தையும் இருட்டையும் அறிந்த கண் ஒன்றாயிருப்பதுபோலென்றறி

அ-கை. இப்போது சொல்லப்பட்ட நியாயபடிக்கி மற்றகாலங்களிலுமறிவு ஒன்றென்பதைக் காண்பிவிக்கிறார்.

एवंस्थानत्रयेप्येकासंवित्तद्वद्दिनान्तरे ।
मासाब्दयुगकल्पेषु गतागम्येष्वनेकधा ॥

ஏவம்ஸ்தாநத்ரயேப்யேகாஸம்வித்தத்வத்திநாந்தரே ।
மாஸாப்தயுககல்பேஷு கதாகம்யேஷ்வநேகதா ॥ ௬௨ ॥

Koviloor Digital Library

ஏவம்	இந்தப்பிரகாரம்	மாஸாப்தயுக கல்பேஷு	மாச, வருஷ, யுக, கற்பங்களிலும்,
ஸ்தாநத்ரயே அபி	அவஸ்தாத் திரயத்திலும்	கதாகம்யேஷு	பூத பௌஷ்யத் காலங்களிலும்
ஸம்வித் ஏகா ததா	அறிவு ஒன்றுயிருப்பதுபோல	அநேகதா	அனேகவிதமாக காலமேகமிருந்துவருகிறது
திநாந்தரே	மறுநாளிலும்		

வி-ம். ஒரு தினத்தில் வருகிற ஜாக்கிரஸ்வப்பன சுஷுப்தி மூன்றிலேயும் அறிவு ஒன்றுகவேயிருந்ததுபோல, மறு தினத்திலும் அறிவு அபேதமென்பதையும் அப்படியே மாசந்தோறும் யுகந்தொறும் கற்பந்தோறும் பூதபௌஷியத்காலங்களிலும் அறிவு ஒன்றுகவே இருக்கிறது. யுக்தி ஒருநாளில் தன்னூரிலும், வெளியே போகிறகாலத்திலும், மாமனூர் ஊரிலும், பார்த்துக்கொண்டிருக்கிற கண் என்றென்றைக்கும் ஒன்றுயிருப்பதுபோல எப்போதும் அறிவு ஒன்றென்றறி.

அ-கை. அறிவு ஒன்றென்று சாதித்ததற்கு பிரயோஜனத்தைச்சொல்லுகிறுர்.

नोदेतिनास्तमेत्येका संविदेषास्वयंप्रभा ॥

நோதேதி நாஸ்தமேத்யேகா ஸம்விதேஷா ஸ்வயம்ப்ரபா ॥ எ ॥

ஏகா	ஒன்றுயிருக்கிற	ஏஷா	இந்த
ஸம்வித்	அறிவானது	ந உதேதி	உதயமாகிறதுமில்லை
ஸ்வயம்ப்ரபா (ஸதீ)	சுயம்பிரகாசமாயிருப்பதினாலே	அஸ்தம்	அஸ்தமனம்
		ந ஏதி	ஆகிறதுமில்லை

வி-ம். யாதொரு காரணத்தால் அறிவு ஒன்றே. அந்த ஹேதுவால் அறிவுக்கு உற்பத்தியுமில்லை அவருடைய உற்பத்திநாசத்திற்கு அவரைத்தவிர வேறு சாக்ஷியில்லாத்தினுல், உற்பத்திநாசம் சித்திக்காது. தன்னுடைய உற்பத்திநாசம் தானுயிருக்கிற அறிவால் கிரஹிக்கமுடியாதாகையாலும், வேறே அறிவில்லாமையாலும், அறிவுக்கு எப்பொழுது முற்பத்திநாசமில்லை.

ச-கை. இந்த அறிவுக்கு வேறே அறிவில்லாவிட்டால் இதை கிரகிக்கிறவன் வேறே யில்லாமல் போகும்போது அந்த அறிவு விளங்காதே. அப்போது ஜகத்திற்கு தோற்றுமை வந்துவிடுமேயெனில், இதற்குச் சமாதானமாக ஒரு அனுமானம் காண்பிவிக்கிறுர், அறியப்படாத வபரோக்ஷமாகையால், அறிவு சுயம்பிரகாசமாயிருக்கிறது. ஜடமாயும் அப்பிரகாசமாயுமிருக்கிற கடம்போல் அறிவு விளங்கவில்லை. அபரோக்ஷமென்கிற இந்த ஹேதுவில் அறியப்படாதென்கிற விசேஷணம் சித்தியாதென்று சங்கிக்கக்கூடாது. ஏனென்றுல், இந்த அறிவு தன்னுலே அறியப்படுமென்றுல் கருத்ருத்துவமும் விஷயத்துவமும், ஒருவஸ்துவுக்கு கூடாதாகையாலும், வேறென்றினுல் அறியப்படுமெ

Koviloor Digital Library

ன்றால் அனவஸ்தை வருவதாலும் அறிவுக்கு மேற்சொன்ன விசேஷணம் சித்திந்திருக்கின்றன, ஸ்வப்பிரகாசமாய் விளங்கிக்கொண்டிருக்கிற இந்த அறிவுக்கு சர்வத்தையும் விளக்கிவைத்தல் கூடுமாகையால் ஜகத்து விளங்காமல் போகுமென்று நீ சொன்ன ஆக்ஷேபனை கூடாது.

இ-தி. எல்லாவற்றையும் காண்பிக்கிற கண் வேறே ஒரு கண்ணையபேக்ஷியாமல் பிரத்தியக்ஷமாய்த்தான் விளங்குவதுபோலும், ரத்னசூரியாதிகளைப் போலுமென்றறி.

அ-கை. அறிவுக்கு நித்தியத்துவமும் ஸ்வப்பிரகாசத்துவமுமிருக்கட்டும் அதினாலென்ன ஆயிற்றென்றால் சொல்லுகிறார்.

इयमात्मापरानन्दः परप्रेमास्पदंयतः ।

இயமாத்மாபராநந்த³: பரப்ரேமாஸ்பத³ம்யத: ॥ எ௨ ॥

இயம்	இந்த	பரப்ரேமா ஸ்பத³ம்	மேலானப்பிரீதிக் கிருப்பிடமோ
ஆத்மா	ஆத்துமாவானது	தத:	அந்தக்காரணத்தினாலே
யத:	யாதொருகாரணத்தினல்	பராநந்த³:	=பரமானந்தராயிருக்கிறார்

வி-ம். அனுமானம் நித்தியமாயிருக்கிற ஸ்வப்பிரகாசமானதால், இந்த அறிவான ஆத்துமா தானகவே இருக்கின்றது, எது தானகவிருக்கவில்லையோ, அது நித்தியமாயும் ஸ்வப்பிரகாசமாயுமாகாது. (கடம்போல)

இ-தி. இரத்தினத்தையும், அது வைத்திருக்கப்பட்டிருக்கிற பாத்திரத்தையும்போலவறி. ஆத்துமாவுக்கு நித்தியத்துவமும், சித்ரூபத்துவமும், சாதித்தாயிற்று. நித்தியத்துவத்திற்கு வேறாக, சத்தியத்துவமில்லாமையால் நித்தியத்துவம் சத்தியத்துவம் இரண்டும் ஆத்துமாவுக்கு இருக்கின்றனவென்று வாசஸ்பதிமிச்சிராள் சொல்லியிருப்பதால், ஆத்துமாவுக்கு சத்தும், சித்தும், சித்தித்தன, அதுபோல, ஆனந்தத்தையும் சாதிக்கிறார். இந்த விஷயத்தில் ஒரு அனுமானம், இந்த ஆத்துமா மேலான பிரீதிக்கு இருப்பிடமாகையால் பரமானந்த ரூபராயிருக்க யோக்கியர். யாதொன்றானது பரமானந்தமாயிருக்கவில்லையோ, அது மேலான பிரீதிக்கு இருப்பிடமாக ஆகாது. (கடம்போல) இ-தி. மாப்பிள்ளையையும் மாப்பிள்ளைத்தோழனையும்போல்

ச-கை. என்னைச்சுடவேண்டுமென்று தன்னிடத்தில் துவேஷம் காணப்படுகையால், பிரேமாஸ்பதமே சித்திக்காதபோது, பரபிரேமாஸ்பதம் எப்படி சித்திக்கும். இ-தி. பெண் ருதுவாகாதபோது பிள்ளைபெறுவாளா, பிராமணனென்பதே சந்தேகமாயிருக்கும்போது பவுண்டரீகராவானா, கட்டிக்கத்துணியில்லாதவனை குபேரனாவானாவென்று கேட்கவேண்டியதில்லாததுபோலிருக்கிறதெனில், நீ சொன்ன அந்த அனுபவமாவது சுகரூபனான தனக்கு துக்க சம்மந்தமேற்பட்டதினால் வெறுப்புக்காணப்படுகிறதேயொழிய உண்மையி

Koviloor Digital Library

யில்லை. பிரீதியானது எல்லவருக்கும் தன்னிடத்தில் அனுபவ சித்தமாயிருப்பதாலும், நீ சொன்னது கூடாதென்று திருஷ்டாந்தமூலமாய் பரிகரிக்கிறார் அதாவது, ஜலத்திற்கு வந்திருக்கிற உஷ்ணமானது அன்னியமான அக்கினியின் சம்பந்தத்தால் சித்திப்பதுபோலவும், குளிர்ச்சியானது வாஸ்தவமான அனுபவ சித்தமாயிருப்பதுபோலுமறி, இன்னம் படிக்கத்தில் வர்ணம் சேர்க்கையால் காணப்படுவதுபோலுமறி.

அ-கை. சமாதானம் சொல்லுகிறார்.

मानभूवंहिभूयासमितिप्रेमात्मनीक्ष्यते ॥

மாநபூவம்ஹிபூயாஸமிதிப்ரேமாத்மநீக்ஷ்யதே ॥ ௮ ॥

(அஹம்)	நான்	ஹி	யாதொருகாரணத்தினால்
மா பூவா ந	இல்லாமல் போகவேண்டாம்	ஆத்மநி	தன்னிடத்தில்
பூயாஸம்	(சதா) இருக்கவேண்டும்	ப்ரேம	பிரீதியானது
இதி	யென்று	ஈக்ஷ்யதே	காணப்படுகிறதோ

வி-ம். யாதொரு காரணத்தால் நானில்லாமல் இருக்கிறவனன்று எனக்கு ஒருக்காலுமில்லாமைவேண்டாம் எப்போதும் இருக்கவேண்டுமென்று இவ்விதமான பிரீதிசகலருக்கும் ஆத்துமாவில் அனுபவமாகவே காணப்பட்டிருக்கின்றன. ஆகையால் பிரேமையில்லையென்று சொல்லக்கூடாது.

ச-கை. ஹேதுவில் சொன்ன பிரேமை ஆத்துமாவிலிருக்கட்டும் மேலான பிரியரென்பதில் பிரமாணம் காணப்படாமையால் அந்த விசேஷணம் கூடாதெனில்.

तत्प्रेमात्मार्थमन्यत्रनैवमन्यार्थमात्मनि ।
अतस्तत्परमंतेनपरमानन्दतात्मनः ॥

தத்ப்ரேமாத்மார்த்தமன்யத்ர நைவமன்யார்த்தமாத்மநி ।
அதஸ்தத்பரமம்தேந பரமாநந்ததாத்மந: ॥ ௯ ॥

அன்யத்ர	(அன்னியமான) புத்திராதிகளிடத்தில் காண்கிற	ந ஏவ	இல்லவேயில்லை
		அத:	அந்தக்காரணத்தினாலே
தத்ப்ரேம	அந்தப்பிரீதியானது	தத்	அந்தப்பிரீதியானது
ஆத்மார்த்தம்	தன்னிமித்தம்	பரமம்	மேலானது
ஆத்மநி	தன்னிடத்தில் (காண்கிற)	தேந	ஆகையால்
ப்ரேம	பிரீதியானது	ஆத்மந:	தனக்கு [ருக்கிறது
அன்யார்த்தம்	அவைகளினிமித்தமாக	பரமாநந்ததா	பரமானந்தத்துவமி

வி-ம். தனக்குவேறாயிருக்கிற புத்திராதிகளிடத்தில் யாதொரு பிரீதி காணப்படுகிறதோ அது தன்னிமித்தமேதவிர அவைகளினிமித்தமல்ல.

Koviloor Digital Library

இ-தி. தேன் வைத்தபானையில் காணப்படுகிற தித்திப்பு தேனைச் சேர்ந்த துபோலும், ராஜனுடைய படைகளுக்கு விருந்துசெய்வது ராஜன் நிமித்தம் போலுமறி. தன்னிடத்தில் காணப்படுகிற பிரீதி அவைகளின் நிமித்தியமல்ல, தன்னிமித்தமே. இ-தி. தேனில்காணப்பட்ட தித்திப்பு பானையைச் சேர்ந்த தல்லாததுபோலும், ராஜனுக்குசெய்கிற உபசாரம் படைகள்நிமித்தமில்லாத துபோலுமறி. ஆகையால் தானே நிருபாதிக நிரதிசயமான பரப்பிரம்மரூபனு கையால் பரமானந்தனென்றறி.

அ-கை. ஆகையால்யிந்த ஏழு சுலோகத்தால் சொன்ன அர்த்தத்தை சு சுருக்கிக் காண்பிக்கிறார்.

इत्थंसच्चित्परानन्द आत्मायुक्त्यातथाविधम् ।
परब्रह्मतयोश्चैक्यं श्रुत्यन्तेपूपदिश्यते ॥

இத்த²ம்ஸச்சித்பராநந்த³ ஆத்மாயுக்த்யாதத²விதம் ।
பரப்³ரஹ்மதயோஸ்²சைக்யம் ஸ்²ருத்யந்தேஷூபதி³ஸ்²யதே ॥ கா ॥

இத்த²ம்	இப்பேர்கொத்த	பரப்³ரஹ்ம பரப்பிரமத்தையுங்கூறி
யுக்த்யா	யுக்தியினாலே	தயோ:சஅக் கூடஸ்தபிரமங்களுக்கு
ஆத்மா	ஆத்துமாவானவர்	ஐக்யம் ஐக்கியமானது
ஸச்சிதா³நந்த³:	சச்சிதானந்த ரூபனென்றுசொல்லப்பட்டார்	ஸ்²ருத்யந்தேஷு வேதாந்தங்களில்
ததா²விதம் அப்படி-சச்சிதானந்தனென		உபதி³ஸ்²யதே உபதேசிக்கப்படுகிறது.

வி-ம். (3) வது சுலோகமுதல் (6½) சுலோகம்வரையில் அறிவுக்கு நித்திய மான சத்தின்தன்மையும், (½) சுலோகத்தால் அறிவுக்கு உற்பத்திநாசமற்ற சுயம்பிரகாசமான சித்தின்தன்மையும், (8-9) வது சுலோகங்களால் ஆத்துமா வுக்கு பரமானந்தரூபமான ஆனந்தத்தன்மையும் சித்தித்தது. அவ்வேதுவால் துவம்பதலக்ஷியார்த்தரான ஆத்துமாவே சச்சிதானந்தரூபனென்று யுக்தியால் சாதித்தனர்.

ச-கை. இப்போ ஆத்துமாவுக்கு தங்களால் சொல்லப்பட்ட லக்ஷணமா னது யுக்தியினால் சித்திக்கப்பட்டிருக்கிறதே அன்றி, உபநிஷத்து பிரமாண மில்லையேயெனில், நம்மால் யுக்தியால் ஆத்துமாவுக்கு சச்சிதானந்தலக்ஷணம் சொன்னபடியே சாந்தோக்கிய ஆறுவது அத்தியாயத்திலும், தன்புத்திரனை சுவேதகேதுவுக்கு உத்தாலகரிஷி சச்சிதானந்தரூபமே தத்பதலக்ஷியார்த்த பிரமமென்றும், அதுவே துவம்பதலக்ஷியார்த்தமான கூடஸ்தனென்றும், வாச் சியங்களான ஜீவேசுவரர்கள்முதலான விசேஷணங்களை அசி என்றபதத்தால் நீக்கி, தத்பத லக்ஷியார்த்தமே துவம்பத லக்ஷியார்த்தமான அகண்டைகரச பிரமகூடஸ்தரான நீயே தத்துவமசி யென்று சொன்னதுபோல, அநேக வேதாந்தசுருதிகளில்கோஷிக்கப்பட்டிருக்கும்போதுபிரமாணமில்லையென்று

Koviloor Digital Library

சொல்லக்கூடாது. இ-தி. சக்கிரவர்த்தியே சிமையைக் கட்டி ஆளுகிறவ னென்று சட்டத்தில் சொன்ன இலக்கணம் இவனிடத்தி லிருப்பதும் இவன் அவன் என்றசொல் ஒருவனைக் காண்பிவிப்பதுபோலவறி.

அ-கை. ஆத்துமாவின்பரமானந்தரூபத்தை ஆட்சேபிக்கிறான்.

अभाने नपरं प्रेम भानेन विषये स्पृहा ।

அபாநே நபரம்ப்ரேம பாநே நவிஷயேஸ்ப்ருஹா || கஂ0 ||

அபாநே (ஸதி)	ஆத்துமா விளங்காதபக்ஷத்தில்	பாநே (ஸதி)	விளங்கும்பக்ஷத்தில்
பரம்	மேலான	விஷயே	விஷயத்தில்
ப்ரேம ந	பிரியமாகார்	ஸ்ப்ருஹா ந	ஆசையுண்டாகக்கூடாது

வி-ம். ஆத்துமாவின்பரமானந்தமானது, விளங்கவில்லையா, விளங்குகிறதா, விளங்காதபட்சத்தில் பரமமானபிரீதிக்கு விஷயமாகார், உலகத்திலே ஒருவிஷயத்தின் சௌந்தரியஞானம் உண்டாகியல்லவோ அதில் பிரீதிவுண்டாகும், ஆனதால் பரமானந்தரன்று,

இ-தி. தாசியின்ரூபலாவண்யங்களைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தல்லவோ பரமானந்தம்ஜனிக்கவேண்டுமென்பதுபோலவும்ஆத்துமாவிளங்கும்,பக்ஷத்தில்சுகசாதனமான மாலைமுதலாயுள்ள விஷயத்திலும் அதிலுண்டாகிய சுகத்திலும் யாருக்கும் இட்சைவரக்கூடாது, அதெப்படியென்றால் பலபிராப்தியானது யாருக்கும் லபித்திருக்கும்பட்சத்தில் அதற்குச்சாதனத்திலிச்சை யுண்டாகிறதென்கிற நியாயத்தால்நித்தியநிரதிசயபிர மானந்தலாபம் விளங்கும்போதுக்ஷணமிருப்பதாயும் சாதனங்களின் அபேக்ஷயால்பராதீனம் முதலான தோஷங்களினால் தூஷிக்கப்பட்டதாயு மிருக்கிறவிஷயத்திலிச்சை கூடாதாகையாலும் ஆத்துமாபரமானந்தரூபரன்று.

இ-தி. சித்தகுளிகையால் திருப்தியடைந்த சித்தன்பசியால் பிச்சைக்கிதிண்டாடுவானா என்பதுபோலும், அரசனானபின் அடிமைக்காசைப்படுவனா என்பதுபோலும், நீதியதிபதியானபின் அரைக்கீரைமணியத்திற்கு ஆசைப்படுவனாவென்பதுபோலுமாம்.

அ-கை. இந்தவிஷயத்தில் பிரகாராந்தரமாய் கூடுகையால் நீ சொன்னது கூடாதென்று பரிகரிக்கிறார்.

अतोभाने प्यभातासौ परमानन्दतात्मनः ॥

அதோபாநேப்யபாதாஸௌ பரமாநந்ததாத்மந꞉|| கக ||

அத꞉	ஆகையினாலே	அபாதா	விளங்கப்படாமலிருக்கிறார்
பாநே அபி	விளங்கிக் கொண்டிருந்தும்	ஆத்மந꞉	ஆத்துமாவிற்கு
அஸௌ	இவர்	பரமாநந்ததா	பரமானந்தத்துவ மிருக்கிறது

Koviloor Digital Library

வி-ம். யாதொருகாரணத்தால் விளங்குகிறது விளங்காமைஇரண்டுபக்ஷங்களிலும் தோஷமிருக்கிறதாக நீசொன்னையோ, அந்தஹேதுவினாலேயே ஆத்துமாபரமானந்தரூபர் விளங்கிக்கொண்டேயிருந்தும் விளங்காம லிருக்கிறாரல்லவா.

ச-கை. ஒன்றுக்குத்தானே ஒரேகாலத்தில்விளங்கி விளங்காமைகூடாதெனில், இதுவென்ன அயுக்தம்சொல் இப்படி அனுபவம் காணப்படவில்லையென்றுசொல்லுகிறாயா, அல்லது திருஷ்டாந்தரஹிதமென்று சொல்லுகிறாயா வென்றபேக்ஷித்து,முதல்சங்கைக்குச் சமாதானம்சொல்லுகிறார்.

अद्ध्येतृवर्गमद्ध्यस्थ पुत्राध्ययनशब्दवत् ।
भानेप्यभानं भानस्य प्रतिबन्धेनयुज्यते ॥

அத்₄யேத்ருவர்க₃மத்₄யஸ்த₂ புத்ராத்₄யயநஶப்₃த₃வத் ।
பா₄நேப்யபா₄நம் பா₄நஸ்ய ப்ரதிப₃ந்தே₄நயுஜ்யதே ॥௧௨॥

அத்₄யேத்ருவர்க₃மத்₄யஸ்த₂ புத்ராத்₄யயந ஶப்₃த₃வத்	அத்தியயனம்பண்ணுகிற பிள்ளைகளுடைய கூட்டத்தின்மத்தியில் தோன்றுகிற தன்பிள்ளையினுடைய வேதபாடத்தின் குரல் தகப்பனுக்குக் கேட்பதுபோல
பா₄நே ஸதி } விளங்கிக்கொண்டிருந்தாலும்	பா₄நஸ்ய விளக்கத்தின்தோற்றம்
அபா₄நம் விளங்கவில்லை	ப்ரதிப₃ந்தே₄ந பிரதிபந்தத்தோடே
	யுஜ்யதே கூடிக்கொண்டிருக்கிறது

வி-ம். அத்தியயனம்பண்ணுகிறபிள்ளைகளுடைய கூட்டத்தில்உண்டாயிருக்கிறதன்பிள்ளையின் சப்தமானது வெளியிலிருக்கிறபிதாவுக்கு சாமானியமாய் விளங்கினாலும் இதுதான், நமது பிள்ளையின்குரலென்று யெப்படித்தெரியவில்லையோ அப்படிதன்னானந்தம் விளங்கிக்கொண் டிருந்தும் பிரதிபந்தத்தோடேசேர்ந்திருப்பதால்விளங்காமலிருக்கிறது;ஆத்துமாபிள்ளை,அதின்விளக்கம் பிள்ளையின்குரல்,மனமுதலிய தத்துவங்கள்,கூடஅத்தியயனம்பண்ணுகிறபிள்ளைகள், அவைகளின்விகாரங்கள், அந்தப் பிள்ளைகளுடையகுரல்கள், அவைகளால் இந்த ஆத்துமாவினுடையதோற்றம்தோன்றியும்தோற்றவில்லை,இரண்டாவதுசங்கைக்குத்திரம் விளங்கினாலும் விளங்காமைக்குஇதில்சொல்லியபிரதிபந்தமே காரணமானதால் சாமான்னியமாய், விளங்கியும் விசேஷமாய்விளங்காமைகூடும், அதுயெவ்விதபிரதிபந்தமெனில் சொல்லுகிறார்.

प्रतिबन्धोस्तिभातीति व्यवहाराहंवस्तुनि ।
तन्निरस्यविरुद्धस्य तस्योत्पादनमुच्यते ॥

Koviloor Digital Library

ப்ரதிபந்தோஸ்தி பாதீதி வ்யவஹாரார்ஹவஸ்துநி ।
தந்நிரஸ்ய விருத்தஸ்ய தஸ்யோத்பாதநமுச்யதே ॥ கங ॥

அஸ்தி பாதீதி வ்யவஹாரார்ஹவஸ்துநி — இருக்கிறது விளங்குகிறது யென்று வியவஹரிக்க யோக்கியமான ஆத்துமவஸ்துவில்

தந்நிரஸ்ய — அதைத்தள்ளிவிட்டு
தஸ்ய — அதற்கு
விருத்தஸ்ய — விருத்தமான இல்லை விளங்கவில்லை யென்பதை
உத்பாதநம் — உற்பத்திசெய்கிறதுயாதோ
ப்ரதிபந்த: — அதுவேபிரதிபந்தமென
உச்யதே — சொல்லப்படுகிறது.

வி-ம், சகலசம்சாரத்திற்கு மூலகாரணம் ஆவரணசக்தியென்று சகலசுருதிகளிலும் சொல்லியிருப்பதால், அந்தஆவரணம் அசத்தாவரணம் அபானுவரணமென்று இரண்டுவிதங்களாயிருந்து, சகலரையும்ஆத்துமாயில்லை, விளங்கவில்லையென்று சொல்லும்படிசெய்கிறதை இங்கேயிவர் பிரதிபந்தமென்று சொன்னார்.

அ-கை. இப்போதுசொன்னபிரதிபந்தத்திற்குக் காரணத்தைதிருஷ்டாந்த தாஷ்டாந்தங்களிலும் கிரமமாகக் காண்பிவிக்கிறார்.

तस्यहेतुस्समानाभिहारः पुत्रध्वनिश्रुतौ ।
इहानादिरविद्यैव व्यामोहैकनिबन्धनम् ॥

தஸ்யஹேதுஸ்ஸமாநாபிஹார: புத்ரத்வநிஶ்ருதௌ ।
இஹாநாதிரவித்யைவ வ்யாமோஹைகநிபந்தநம் ॥ கச ॥

புத்ரத்வநிஶ்ருதௌ — புத்திரனுடைய குரல் கேட்பதில்
தஸ்ய — அதற்குத்தடையான
ஸமாநாபிஹார: — வெகுபேர்களுடன்கூடியிருக்கிறசப்தமே
ஹேது: — காரணமாயிருப்பதுபோல்
இஹ — தாஷ்டாந்தத்தில்
வ்யாமோஹைகநிபந்தநம் — மோகத்திற்கு முக்கிய காரணமாயும்
அநாதி: — அனாதியாயுமிருக்கிற
அவித்யா ஏவ — அவித்தைதான்

தா-ம். பிள்ளையின்குரல்விளங்காமைக்கு மற்றவர்களுடையசப்தம் காரணமாயிருந்ததுபோல், இவ்விடத்தில்விபரீதஞானங்களுக்கு முக்கியகாரணமானஅவித்தையே, தன்னுடைய ஸ்வரூபம் தனக்கு நன்றாய் விளங்காமைக்கு முக்கியகாரணமென்றறி.

இ-தி. பிராமணனுக்கு தன்னிலமைதெரியாமல் மயங்கி உளரிக்கொண்டு கிடப்பதற்கு ஒருபொட்டிசாராயமே காரணமாயிருப்பதுபோலவறி.

Koviloor Digital Library

அ-கை. இப்போதுபிரதிபந்தஹேதுவான அவித்தையைச்சொல்லுவதற்கு அதற்குமூலகாரணமான பிரகிருதியைச் சொல்லுகிறார்.

चिदानन्दमयब्रह्म प्रतिबिंबसमन्विता ।
तमोरजस्सत्वगुणा प्रकृतिर्द्विविधाचसा ॥

சிதாநந்தமயப்ரஹ்மப்ரதிபிம்பஸமந்விதா ।
தமோரஜஸ்ஸத்வகுணா ப்ரக்ருதிர்த்விவிதாசஸா ॥ கரு ॥

சிதாநந்தமயப்ரஹ்மப்ரதிபிம்பஸமந்விதா	சச்சிதானந்தப் பிரமத்தின் பிரதிபிம்பத்தோடே கூடியதாயும்
தமோரஜஸ்ஸத்வகுணா	சத்வரஜஸ்தமோகுணங்களையுடையதாயுமிருக்கிற
ப்ரக்ருதி: மூலப்பிரகிருதி யென்றறி	ஸா ச அதுவும்
	த்விவிதா இரண்டு விதங்களாகிறது

(ச) வென்கிறசொல்லால் சொல்லப்போகிறதாயிருக்கிற பிரகாராந்தரத்தைக் குறிப்பிக்கிறார்.

இ-தி. ஒருமழைஜலந்தானே இரண்டுவிதமாயாவதுபோலவறி.

அ-கை. காரணத்தோடும் அவ்விரண்டுவிதங்களையுங்காண்பிக்கிறார்.

सत्वशुद्ध्यविशुद्धिभ्यां मायाविद्येचतेमते ॥

ஸத்வஶுத்த்யவிஶுத்திப்யாம் மாயாவித்யேசதேமதே ॥ கரு ௨ ॥

ஸத்வஶுத்த்யவிஶுத்திப்யாம்	சத்வசுத்தியாயிருப்பதாலும் அசுதத்தோடே கலந்திருப்பதினாலும்
மாயாவித்யே ச { மாயையென்றும் அவித்தையென்றும்	தே அவைகள்
	மதே சொல்லப்படுகின்றன.

வி-ம். பிரகாசரூபமானசத்வகுணத்திற்கு, சுத்தியெதினாலென்றால் குணாந்திரங்களினால் கெடுக்கப்படாமலிருக்கிறதினாலென்றறி, ரஜோகுணத்திற்குஅசுத்தியெதினாலெனில், குணாந்திரங்களினால் கெடுக்கப்படுகிறதாலென்றறி, அந்தசுத்தாசுத்தங்களால் மாயை யென்றும் அவித்தை யென்றும் சொல்லப்பட்டன.

இ-தி. ராஜாவின்அரண்மனைக்குள் ளிருக்கிறகுளம் சுத்தமாயும், மந்தையிலிருக்கிறகுளம் அசுத்தமாயுமிருப்பதுபோலவறி.

அ-கை. யாதொருநிமித்தமாக சுத்தசத்வம் மாயையென்றும் மலினசத்வம் அவித்தையென்றும் பிரித்தல்சொல்லபபட்டதோ அதையிப்பொழுது காண்பிக்கிறார்.

Koviloor Digital Library

मायाबिंबोवशीकृत्य तांस्यात्सर्वज्ञईश्वरः ।
अविद्यावशगस्त्वन्य स्तद्वैचित्र्यादनेकधा ॥

𑌮𑌾𑌯𑌾𑌬𑌿𑌂𑌬𑍋𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌤𑌾𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌶𑌗𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯 𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑌨𑍇𑌕𑌧𑌾 ॥ ௧௬ ॥

𑌮𑌾𑌯𑌾𑌬𑌿𑌂𑌬𑌃 — மாயையிலே பிரதிபிம்பத்த சைதன்யமானது
𑌤𑌾𑌂 — அந்த மாயையை
𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 — ஸ்வாதீனம் பண்ணிக்கொண்டிருப்பதால்
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 — சர்வத்தையு மறிகிறவரு யிருக்கிற
𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 — ஈசனுக
𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 — இருக்கிறூர்
𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 — அவருக்கு அன்யனுப் அவித்தையில் பிரதிபலித்த சைதன்யமானஜீவனேவென்றல்
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌶𑌗𑌃(𑌸𑌨𑍍) — அந்த அவித்தைக்கு வசமாகி
𑌤𑌦𑍍𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 — அவைகளின் விசித்திரத்தால்
𑌅𑌨𑍇𑌕𑌧𑌾 — வெகுவிதமாக ஆனுன்.

இ-தி. தீரனுனவன்தன்ஸ்திரீயை தன்வசப்படுத்திக்கொண்டு ஸ்வதந்திரமாயிருப்பதுபோலும் தைரியமற்றவன் தன்மனைவிசெற்படி நடப்பதுபோலும் இன்னம் இராஜன் ஒருவாரயிருப்பதுபோலும் குடிகள்பலவாராயிருப்பதுபோலும் அமிருதமுண்டவன் தெளிவுள்ளவனுயும். மதுஉண்டவன் மயங்குவதுபோலுமறி.

அ-கை. பின்னுலேயே சரீரத்திரயத்தில்நின்றும் ஆத்துமாவைவேற்படுத்தும் பொருட்டு முந்திசரீரத்திரயத்தையும் ஜீவனுடையஸ்வ ரூபத்தையும் கிரமமாகநிரூபிக்கிறூர்.

साकारणशरीरंस्या त्प्राज्ञस्तत्राभिमानवान् ॥

𑌸𑌾𑌕𑌾𑌰𑌣𑌶𑌰𑍀𑌰𑌂𑌸𑍍𑌯𑌾 𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 ॥ ௧௭ ॥

𑌸𑌾 — அந்த வித்தையே
𑌕𑌾𑌰𑌣𑌶𑌰𑍀𑌰𑌂 — காரணதேகமாக
𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 — ஆகிறது
𑌤𑌤𑍍𑌰 — அந்த காரணதேகத்தில்
𑌅𑌭𑌿𑌮𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 — அபிமானிக்கிறவனுய்
𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 — பிராஞ்ஞனுக ஆகிறுன்

வி-ம். அந்தஅவித்தையை காரணசரீரமென்பது யெதினுலெனில் சர்வகாரணமானமூலப்பிரகிருதியின் அவஸ்தாவிசேஷ மானதால் காரணசரீரத்தில் தாதாத்மியாத்தியாசத்தால் நானென்று அபிமானியான ஜீவன்பிராஞ்ஞனும் எதினுலெனில் யாதொருத்தருடைய பிரஞ்ஞையானது நாசமன்றியிலிருக்கிறதோ அவன்பிரஞ்ஞன் அந்தப்பிரஞ்ஞனே பிராஞ்ஞன்.

அ-கை. கிரமப்பிராப்தமான சூக்குமசரீரத்தையும் அவ்வுபாதிக ஜீவனையும்சொல்லுகிறதற்காக அந்தசூக்குமசரீரத்திற்குக் காரணமான ஆகாசாதிகளின்சிருஷ்டிசொல்லுகிறூர்.

Koviloor Digital Library

तमःप्रधानप्रकृते स्तत्भोगायेश्वराज्ञया ।
वियत्पवनतेजोंऽबु भुवोभूतानिजज्ञिरे ॥

தம:ப்ரதாநப்ரக்ருதே ஸ்தத்போகாயேஶ்வராஜ்ஞயா ।
வியத்பவநதேஜோம்பு புவோபூதாநிஜஜ்ஞிரே ॥ ௧௮ ॥

தத்போகாய	அந்தப் பிராணிகளின் போகத்தின் பொருட்டு	ஈஶ்வராஜ்ஞயா	ஈசுரனுஞ்ஞையால்
தம:ப்ரதாந ப்ரக்ருதே:	ஜகத்திற்கு காரணமான தமோகுணமாயையினின்று	வியத்பவநதேஜோம்புபுவ:	வான் காற்று தீ நீர் பூமிகளான
		பூதாநி	ஐம்பூதங்கள்
		ஜஜ்ஞிரே	உண்டாயின

வி-ம். ஈசுவராஞ்ஞையாலென்பது நியமனாதிசக்திகளுடன் கூடியிருக்கிற ஈசுவரன்சிருஷ்டிக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடே கூடியபார்வையே நிமித்தகாரணமா யிருக்கிறது.

இ-தி. பிரபுவானவன் ஏழைகளுக்கு அன்னம்போடும்நிமித்தம் ஸ்திரீயைப்பார்த்தமாத்திரத்தில் பஞ்சபக்ஷணங்களுடன் அவள் அன்னம் அளிப்பது போலவாம்.

அ-கை. பூதசிருஷ்டியைச்சொல்லி பௌதிகசிருஷ்டியைச்சொல்லுகிறதற்காகமுதலில் ஞானேந்திரியசிருஷ்டியைச் சொல்லுகிறார்.

सत्वांशैःपञ्चभिस्तेषां क्रमाद्धीन्द्रियपञ्चकम् ।
श्रोत्रत्वगक्षिरसन घ्राणाख्यमुपजायते ॥

ஸத்வாம்ஶை:பஞ்சபிஸ்தேஷாம் க்ரமாத்தீந்த்ரியபஞ்சகம் ।
ஶ்ரோத்ரத்வகக்ஷிரஸநக்ராணாக்யமுபஜாயதே ॥ ௧௯ ॥

தேஷாம்	அப்பூதங்களினுடைய	க்ரமாத்	கிரமமாக
ஸத்வாம்ஶை:	சத்வகுணத்தின் பாகங்களான	ஶ்ரோத்ரத்வகக்ஷிரஸநக்ராணாக்யம்	செவி த்வக்கு கண் நாக்கு மூக்கென்ற நாமங்களடைந்து
பஞ்சபி:	ஐந்தினாலே	உபஜாயதே	உண்டாயின.
தீந்த்ரியபஞ்சகம்	ஞானேந்திரிய பஞ்சகமானது		

இ-தி. தேன்முதலான வஸ்துக்கள் தனித்தனியே வைத்ததுபோலும் ஒவ்வொருபாஷைமட்டும்தெரிந்த ஒவ்வொருதேசத்தி னுள்ளவன்போலுமறி.

அ-கை. ஆகாசாதிகளின் சத்துவகுணங்களினுடைய வியஷ்டிசிருஷ்டியைச்சொல்லிசமஷ்டி சிருஷ்டியைச்சொல்லுகிறார்.

तैरन्तःकरणंसर्वै र्वृत्तिभेदेनतद्द्विधा ।
मनोविमर्शरूपंस्यात् बुद्धिस्स्यान्निश्चयात्मिका ॥

Koviloor Digital Library

தைரஸ்ஸமஸ்தைரந்த:கரணம்ஸம்வ்ருத்திபேததஸ்ஸத்விதா ।
விமர்சரூபம்ஸம்ஸங்கல்பரூபம்நிச்சயாத்மிகா ॥ ௨0॥

ஸமஸ்தை: சமஸ்தங்களாகயிருக்கிற
தை: அந்த சத்துவாமிசங்களினாலே
அந்த:கரணம் அந்தக்கரணம்
உபஜாயதே பிறந்தது
வ்ருத்திபேதத: விருத்திபேதத்தினாலே
தத் அந்த அந்தக்கரணமானது
த்விதா. இரண்டுவிதமாயிற்று

விமர்சரூபம் (ஸத்) } ஆலோசனைரூபமா யிருப்பதுபற்றி
மந: மனமென்று பெயரை
ஸ்யாத் அடைந்தது
நிச்சயாத்மிகா (ஸதீ) } நிச்சயரூபமாயிருப்பதைப்பற்றி
புத்தி: புத்தியென்றுபேருடையதாய்
ஸ்யாத் ॥ ஆகிறது

இ-தி. பஞ்சாமிர்தம் சேர்த்தது போலும் ஐந்துபாஷையுங் கற்றவன்போலுமறி, அது இரண்டாயிருப்பதற்குயுக்தி, ஒருகரும்புரசம் காய்ச்சும்போது பாகென்றும், கட்டியாகும்போதுவெல்ல அச்சுயென்றும் சொல்லப்படுகிறது போலுமறி.

அ-கை. இப்படிமுறைமுறையேயான ரஜோகுணங்களுடைய வியஷ்டிகாரியத்தைச்சொல்லுகிறார்.

रजोंशैःपञ्चभिस्तेषां क्रमात्कर्मेन्द्रियाणितु ।
वाक्पाणिपादपायू पस्थाभिधानानिजज्ञिरे ॥

ரஜோம்சை:பஞ்சபிஸ்தேஷாம்க்ரமாத்கர்மேந்த்ரியாணிது।
வாக்பாணிபாதபாயூபஸ்தாபிதானானிஜஜ்ஞிரே ॥ ௨௧॥

தேஷாம் அப்பூதங்களினுடைய
பஞ்சபி: ஐந்தாயிருக்கிற
ரஜோம்சை: } ரஜோகுணபாகங்களினாலே
க்ரமாத் முறையாக

கர்மேந்த்ரியாணி து. } கர்மேந்திரியங்களானவை
வாக்பாணிபாதபாயூபஸ்தாபிதானானி } வாக்கு கை கால் பாயு குஹியமென்ற நாமங்களடைந்து
ஜஜ்ஞிரே உண்டாயின

இ-தி. ஒவ்வொருகரியைத்தனித்தனியே பாகம்பண்ணிவைத்தது போலும் தச்சன்முதலான தொழிலாளிகள் ஒவ்வொருதொழில்மட்டும் கற்றிருப்பது போலுமறி.

அ-கை. ரஜோகுணசமஷ்டி காரியததைச் சொல்லுகிறார்.

तैस्सर्वैस्सहितैः प्राणो वृत्तिभेदात्सपञ्चधा ।
प्राणोपानस्समानाश्चो दानव्यानौचतेपुनः ॥

தைஸ்ஸர்வைஸ்ஸஹிதை:ப்ராணோவ்ருத்திபேதாத்ஸபஞ்சதா ।
ப்ராணோபானஸ்ஸமானச்சோதானவ்யானௌசதேபுன: ॥ ௨௨ ॥

ஸர்வை: சமஸ்தங்களாயிருக்கிற
ஸஹிதை: ராஜஸாம்சங்கள்கூ
தை: அவைகளினாலே
ப்ராண: பிராணவாயுவு உண்டாயின
வ்ருத்திபேதாத் தொழிலின்பேதத்தால்
ஸ: அந்தப்பிராணவாயுவே
புந:. ச. மறுபடியும்
ப்ராண: பிராணனென்றும்
அபாந: அபானனென்றும்
ஸமாந: சமானனென்றும்
உதாநவ்யாநௌ { உதானனென்றும் வியானனென்றும்
தே அவைகள்
பஞ்சதா { ஐந்துவிதங்களாக ஆகின்றன

இ-தி. ஐந்துகரியை ஒன்றுசேர்ந்த. கூட்டுக்கரியைப்போலவும் ஐந்துதொழிலுக்குமாதாரமானமேஸ்திரியைப்போலுமறி, அதுஐந்துவிதமானதற்குயுக்திஒருவள் ஓரவசரத்தில் பாடுகிறவளாயும், வேலைசெய்கிறவளாயும் ஆடுகிறவளாயும் அசிங்கியமுள்ளவளாயும் போகத்திற் கிடங்கொடுப்பவளாயுமாவதுபோலும்வெளியிலடிக்கிறகாற்றே கீழ்காற்றென்றும் தென்றல்காற்றென்றும் மேல்காற்றென்றும் வாடைகாற்றென்றும் சுழல்காற்றென்றும் சொல்லப்படுவதுபோலுமறி.

அ-கை. யாதொருநிமித்தம் ஆகாசமுதல் பிராணன்வரை சிருஷ்டிசொல்லப்பட்டதோ அதைஇப்பொழுதுகாண்பிவிக்கிறார்.

बुद्धिकर्मेन्द्रियप्राण पञ्चकैर्मनसाधिया ।
शरीरंसप्तदशभि स्सूक्ष्मंतल्लिङ्गमुच्यते ॥

புத்திகர்மேந்த்ரியப்ராணபஞ்சகைர்மநஸாதியா ।
ஶரீரம்ஸப்ததஶபிஸ்ஸூக்ஷ்மந்தல்லிங்கமுச்யதே ॥ ௨௩ ॥

புத்திகர்மேந்த்ரியப்ராண பஞ்சகை: ஞானேந்திரியகர்மேந்திரிய பிராணாதிகளுடைய ஐந்தைந்துகளோடேயும்
மநஸா மனதோடேயும்
தியா புத்தியோடேயும்சேர்ந்ததான
ஸப்ததஶபி: { இப்பதினேழும் கூடியது யாதோ
தத் அது லிங்கசரீரமென்றும்
ஸூக்ஷ்மம் சூக்கும
ஶரீரம் சரீரமென்றும்
உச்யதே சொல்லப்படுகிறது

வி-ம். சப்தாதிகளையறிகிற சுரோத்தராதி ஞானேந்திரியங்களென்ன, வசனாதிகளைச் செய்கிறவாகாதிகருமேந்திரியங்களென்ன, உச்சுவாச நிச்சுவாதிகளைச்செய்கிற பிராணாதிவாயுகளென்ன, சஞ்சலமாயும் நிசச்லமாயுமிருக்கிறமனோபுத்திகளென்ன, இந்தப்பதினேழுகளும் ஒன்று சேர்ந்ததால் சூக்குமசரீரமென்றும், லிங்கசரீரமென்றும் சொல்லப்படும்.

இ-தி. கணக்குவழக்கைபறிகிற ஐவகைப் புத்திரர்களும் வேலைசெய்கிறஐவகைமைந்தர்களும் சமயல் முதலானதைசெய்கிற ஐவகைபரிசாரகர்களும்

Koviloor Digital Library

6155
R65(...)

அலைந்துகொண்டிருக்கிற அமங்கலிப்பெண்ணும் விட்டுக்குள்ளே யிருக்கிறவாழும்பெண்ணும் சேர்ந்து குடும்பமாயிருப்பது போலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் சூக்ஷுமசரீரத்தைச்சொல்லி பிராஞ்ஞேசுவரர்களுக்கு இந்தசூக்ஷுமசரீராபிமானத்தால் வருகிற நாமத்தைச் சொல்லுகிறார்.

प्राज्ञस्तत्राभिमानेनतैजसत्वंप्रपद्यते ।
हिरण्यगर्भतामीशस्तयोर्व्यष्टिसमष्टिता ॥

ப்ராஜ்ஞஸ்தத்ராபிமாநேநதைஜஸத்வம்ப்ரபத்யதே ।
ஹிரண்யகர்ப⁴தாமீஶஸ்தயோர்வ்யஷ்டிஸமஷ்டிதா ॥ உச ॥

- ப்ராஜ்ஞ: — சுஷுப்தியை யபிமானித்த பிராஞ்ஞனானவன்
- தத்ர — அந்த சூக்ஷுமசரீரத்தில் [ல்
- அபிமாநேந — தாதாத்மியாபிமானத்தா
- தைஜஸத்வம் — தைஜசனென்றபெயரை
- ப்ரபத்யதே — அடைகிறான்
- ஈஶ: — மாயையில் பிரதிபலித்த ஈசன்
- ஹிரண்யகர்ப⁴தாம் — இதில் அபிமானத்தால் இரணியகர்பனாகிறான்
- தயோ: — அவ்விருவர்களுக்கும் பேதமெதினுலெனில்
- வ்யஷ்டிஸமஷ்டிதா — வியஷ்டிசமஷ்டிகளே பேதங்கள்

இ-தி. குடிகளையுமிராஜனையும்போலும் பிர்மசாரியான வித்தியார்த்தியும் கிரஹஸ்தனும்போலுமறி.

அ-கை. ஈசுவரன்சமஷ்டியென்பதிலும் ஜீவன்வியஷ்டியென்பதிலும் அனுபவம்யென்னவென்றால் சொல்லுகிறார்.

समष्टिरीशस्सर्वेषांस्वात्मतादात्म्यवेदनात् ।
तदभावात्ततोन्येतुकथ्यन्तेव्यष्टिसंज्ञया ॥

ஸமஷ்டிரீஶஸ்ஸர்வேஷாம் ஸ்வாத்மதாதா³த்ம்யவேத³நாத் ।
தத³பா⁴வாத்ததோந்யேது கத்²யந்தேவ்யஷ்டிஸம்ஜ்ஞயா ॥ உரு ॥

- ஸர்வேஷாம் — ஸமஸ்தங்களையும் தானாய்ப் பார்க்கிற
- ஸ்வாத்மதாதா³த்ம்யவேத³நாத் — ஏகத்துவஞானத்தினாலே
- ஈஶ: — ஈசுவரனானவர்
- ஸமஷ்டி: — சமஷ்டி அபிமானியாகஆனார்
- தத: — அவனைக்காட்டிலும்
- அந்யே து — அன்னியமாயிருக்கிற ஜீவர்களோவென்றால்
- தத³பா⁴வாத் — அந்த சர்வாபிமானமில்லாமையால் [ராலே
- வ்யஷ்டிஸம்ஜ்ஞயா — வியஷ்டியென்றபெய
- கத்²யந்தே — சொல்லப்படுகிறார்கள்

இ-தி. சூரியனையும் கண்ணையும்போலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் லிங்கசரீரத்தையும் அதை அபிமானிக்கிறவர்களான தைஜசஇரணிய கர்ப்பர்களையும்சொல்லி, ஸ்தூலசரீரம்முதலானதின், உற்பத்திசித்திக்கும்பொருட்டு, பஞ்சிகரணத்தை நிரூபிக்கிறார்.

4

Koviloor Digital Library

तद्भोगाय पुनर्भोग्यभोगायतनजन्मने ।
पञ्चीकरोति भगवान्प्रत्येकं वियदादिकम् ॥

தத்போகாய புநர்போக்யபோகாயதநஜந்மநே |
பஞ்சீகரோதிபகவாந் ப்ரத்யேகம்வியதாதிகம்|| உசு||

புந: மறுபடியும்

தத்போகாய } அந்த ஜீவர்களின் போகத்தின்பொருட்டு

போக்யபோகாயதநஜந்மநே

போக்கியவஸ்துக்கள் ஜராயுஜாதி சரீரங்கள் உற்பத்தியின்பொருட்டு

பகவாந் } சமஸ்த செல்வமும், எல்லா வல்லமையும், சகலகீர்த்தியும், சர்வசக்தியும், வைராக்கியமும், அபரோக்ஷ ஞானமும்நிறைந்தவீசன்

வியதாதிகம் ஆகாசாதி பஞ்சபூதத்தை

ப்ரத்யேகம் ஒன்றொன்றையும்

பஞ்சீகரோதி பஞ்சீகரணம்செய்தார்

இ-தி. குழந்தைகள் விளையாடுவதற்காகவும் சாப்பிடுவதற்காகவும் தாயானவள் அரிசிநெய்முதலானவைகளை ஒன்றுசேர்த்து பக்ஷணம்பண்ணிக்கொடுப்பதுபோலும், இன்னும்பெண்களுக்கு பிதாவானவன் உபயோகிக்கவேண்டியவஸ்துகளையும் உண்டுபண்ணிக்கொடுப்பதுபோலவாம்.

அ-கை. எப்படி ஒன்றொன்றையும் ஐந்தைந்தாகசெய்தாரெனில்.

द्विधा विधाय चैकैकं चतुर्धा प्रथमं पुनः ।
स्वस्वेतरद्वितीयांशैर्योजनात्पञ्च पञ्च ते ॥

த்விதாவிதாயசைகைகம் சதுர்தா ப்ரதமம் புந: |
ஸ்வஸ்வேதரத்விதீயாம்சைர்யோஜநாத் பஞ்சபஞ்சதே||உஎ||

ஏகைகம்ச ஒவ்வொன்றையும்

த்விதாவிதாய } இரண்டிரண்டாகச்செய்து

புந: மறுபடி

ப்ரதமம் முதலாவதுபாகத்தை

சதுர்தா நாலுநாலாகச்செய்து

ஸ்வஸ்வேதரத்விதீயாம்சை: } தன்தன் பாகத்துக்கன்னியங்களான இரண்டு பாகங்களோடு

யோஜநாத் சேர்த்தபடியினால்

தே அந்த பஞ்சபூதங்கள்

பஞ்சபஞ்ச ஐந்தைந்தாக ஆயின

இ-தி. ஐந்துவிதமானசர்க்கரைப்பொங்கல் முதலானபிரசாதத்தை கொண்டுபோனவர்கள், தங்கள்தங்கள் அன்னத்தை இரண்டுபாகம்செய்து ஒருபாகத்தை தங்கள்தங்களுக்கு வைத்துக்கொண்டு மற்றொருபாகத்தை நாலாகப்பிரித்து ஒவ்வொருவரும்மாற்றிக்கொண்டதால் ஒவ்வொருவருக்கும் பஞ்சரசபோஜனம் ஆனதுபோல் ஸ்தூலபூதமாயிற்று.

Koviloor Digital Library

அ-கை. இப்படி பஞ்சீகரணம்சொல்லி அவைகளிலுண்டான காரியவர்க்கத்தை காண்பிவிக்கிறார்.

तैरण्डस्तत्र भुवनभोग्यभोगाश्रयोद्भवः ॥

𑌤𑍈𑌰𑌣𑍍𑌡𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌭𑍁𑌵𑌨𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍋𑌗𑌾𑌶𑍍𑌰𑌯𑍋𑌦𑍍𑌭𑌵𑌃॥ ௨௭॥

𑌤𑍈𑌃 — அந்த பஞ்சீகரணம் பண்ணின பூதங்களினாலே
𑌅𑌣𑍍𑌡𑌃 அண்டமானது உண்டாயிற்று
𑌤𑌤𑍍𑌰 அந்த பிரம்மாண்டத்தில்
𑌭𑍁𑌵𑌨𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍋𑌗𑌾𑌶𑍍𑌰𑌯𑍋𑌦𑍍𑌭𑌵𑌃 மேலேயிருக்கிற பூமிமுதலான ஏழு லோகங்களும் பூமிக்குக் கீழே யிருக்கிற அதலாதி ஏழு லோகங்களும் அவைகளில் பிராணிகளுக்கு புஜிக்கயோக்கியங்களாயிருக்கிற அன்னாதிகளும் அந்த லோகங்களுக்கு உசிதமான சரீரங்களும் ஈசுவராஞ்ஞையினால்உண்டாயின

இ-தி. பொம்மைசெய்கிறவன் மண்துணி தண்ணீர்முதலானவைகளைசேர்த்துவிசித்திரமான பொம்மைகள்முதலானதை செய்வதுபோலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் ஸ்தூலஜகத்துற்பத்தியைச் சொல்லி அவைகளில்முன்போல ஜீவேசுவரர்களுக்கு அபிமானத்தால்வருகிற நாமத்தையும் சொல்லுகிறார்.

हिरण्यगर्भस्स्थूलेस्मिन्देहेवैश्वानरोभवेत् ।
तैजसाविश्वतांयातादेवातिर्यङ्नरादयः ॥

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌸𑍍𑌸𑍍𑌥𑍂𑌲𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍇𑌹𑍇𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑍋𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌤𑍈𑌜𑌸𑌾𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌾𑌂𑌯𑌾𑌤𑌾 𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌾𑌦𑌯𑌃॥ ௨௮॥

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌃 ஹிரணியகர்ப்பர்
𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 இந்த
𑌸𑍍𑌥𑍂𑌲𑍇 𑌦𑍇𑌹𑍇 — ஸ்தூலதேகத்திலபிமானத்தால்
𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑌃 — வைசுவானரனென்கிற பேராக
𑌭𑌵𑍇𑌤𑍍 ஆகிறார்
𑌤𑍈𑌜𑌸𑌾𑌃 தைஜசர்கள்
𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌾𑌂 𑌯𑌾𑌤𑌾𑌃 விசுவனென்ற பேரை இந்த ஸ்தூல சரீராபிமானத்தாலடைகிறார்கள் அதற்குள்ளே அவாந்திரநாமகங்கள் யாதெனில் கர்மவிசித்திரத்தால் சரீர விசித்திரமடைந்து
𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌾𑌦𑌯𑌃 — தேவதிர்யக் நராதிகளென்றபெயரை அடைகிறார்கள்

இ-தி. நாடகவேஷம் போடும்போது ராஜா மந்திரி சேவகர்களென்று ஒரு மனிதனே சொல்லப்படுவதுபோலவறி.

அ-கை. இப்போது விசுவனென்றுசொல்லப்படுகிற ஜீவர்களுக்கு தத்துவஞானமில்லாமையால் சம்சாரம் வருகிறவிதத்தை இரண்டு சுலோகத்தினால்சொல்லுகிறார்.

तेपराग्दर्शिनःप्रत्यक्तत्त्वबोधविवर्जिताः ।
कुर्वतेकर्मभोगायकर्मकर्तुंचभुंजते ॥
नद्यांकीटाइवावर्तादावर्तान्तरमाशुते ॥
वृजन्तेजन्मनोजन्मलभन्तेनैवनिर्वृतिम् ॥

தேபராக்தர்சிந:ப்ரத்யக்தத்வபோதவிவர்ஜிதா: ।
குர்வதேகர்மபோகாயகர்மகர்தும்சபுஞ்ஜதே ॥
நத்யாங்கீடாஇவாவர்தாதாவர்தாந்தரமாசுதே ।
வ்ருஜந்தேஜந்மநோஜந்மலபந்தேநைவநிர்வ்ருதிம் ॥ ௩௦ ॥

பராக் தர்சிந: } பகிர்முகராக வெளிநாட்டத்தையுடையவராயிருக்கிற
தே அந்த தேவாதிகளான ஜீவர்கள்
ப்ரத்யக்தத்வபோதவிவர்ஜிதா: பஞ்சகோசசாக்ஷித்துவஞான மில்லாதவர்களாய்
போகாய போகத்தின்பொருட்டு
கர்ம உழவாதிதொழில்களை
குர்வதே செய்கிறார்கள்
கர்மகர்தும் அத்தொழில்செய்வதற்கே
புஞ்ஜதே புசிக்கிறார்கள்
நத்யாம் நதியில்
கீடா: புழுக்கள்
ஆவர்தாத் ஒருசுழியில் நின்றும்
ஆவர்தாந்தரம் மற்றொருசுழியை
ஆசு விவேகமாக
வ்ரஜந்தே இவ அடைகின்றனபோல்
தே அந்த ஜீவர்கள்
ஜந்மந: ஒருஜன்மத்தைவிட்டு
ஜந்ம மறுஜன்மத்தை யடைகிறார்கள்
நிர்வ்ருதிம் மோக்ஷசுகத்தை
லபந்தே ந ஏவ } அடைகிறார்களே யில்லை

வி-ம். சுருதியும் ஈசுவரன், மனம்முதலியகரணங்களை வெளிநாட்டமாக வேறுண்டுபண்ணினதால் இந்தஜீவர்களும் வெளிநாட்டமாகவே யிருக்கிறார்களே தவிர அந்தராத்துமாவை பார்க்கிறார்களில்லையென்று சொல்லுகிறது.

இ-தி. குழந்தைகள் வீட்டிலுள்ள அலுவலைப்பாராமல் வெளியில்விளையாடவோடிப்போவதுபோலவாம்.

ச-கை தார்க்கிகர்முதலானவர்கள் தேகத்திற்குவேறாக ஆத்துமாவை அறிந்திருக்கிறார்களேயென்றால் அவர்களப்படி யறிந்தபோதிலும் சுருதிசித்தமான அந்தரங்கஆத்துமாவை அறியவில்லையென்ற அபிப்பிராயத்தால், ஒருவரும் அந்தரங்க ஆத்துமஞானத்தை யடையவில்லையென்று சொல்லப்பட்டது, விஷயசுகாதிகளை யனுபவிக்கும்பொருட்டு மனுஷியாதிசரீரத்தை யெடுத்து அந்தசரீரத்திற்குசிதமான கர்மங்களைச்செய்கிறார்கள் மறுபடி தேவாதிபோகத்தைபுஜிப்பது யேனென்றால் மறுபடிகர்மத்தை செய்வதற்காக வென்றறி, பலானுபவமில்லாவிட்டால் உச்சகங்களிலிச்சை உண்டாகாது அசற்குராதனனுடானங்களு மில்லாமற்போம்.

Koviloor Digital Library

இ-தி. தினம்தோறும்சகலரும் வேலைசெய்வது சாப்பிடுவதற்கும் சாப்பிடுவது வேலைசெய்வதற்கும்போலவுமி.

அ-கை. இப்படிசம்சாரத்தின் வரவானகற்பனையைச்சொல்லி அதுநிவர்த்திக்குப்பாயத்தை காண்பிவிக்கும்பொருட்டு திருஷ்டாந்தம் சொல்லுகிறர்.

सत्कर्मपरिपाकात्तेकरुणानिधिनोद्धृताः ।
प्राप्यतीरतरुच्छायांविश्राम्यन्तियथासुखम् ॥

ஸத்கர்மபரிபாகாத்தே கருணாநிதிநோத்ருதா: ।
ப்ராப்யதீரதருச்சாயாம்விச்ராம்யந்தியதாஸுகம்॥ ௩க௰ ॥

தெ	அந்த புழுக்களானவை
ஸத்கர்மபரிபாகாத்	முற்பிறப்பிற்செய்த புண்ணியப்பேற்றுல்
கருணாநிதிநா	தயாளுவான புருஷனுலே
உத்ருதா: (ஸந்:)	அற்றன்னீரிலிருந்து உயரயெடுக்கப்பட்டு
தீரதருச்சாயாம்	கரையிலிருக்கிற மரத்தின் நிழலை
ப்ராப்ய	அடைந்து
யதா	எப்படி [அப்படி-
ஸுகம்	சுகமாயிருக்கவேண்டுமோ
விச்ராம்யந்தி	சிரமபரிகாரம் பண்ணிக்கொண்டிருக்கின்றன

அ-கை. பஞ்சகோசங்களின் நாமங்களென்ன, அவைகளால் வந்திருக்கிற கெடுதியென்னவென்று கேட்டாலதற்குத்தரம் சொல்லுகிறர்.

उपदेशमवाप्यैवमाचार्यात्तत्वदर्शिनः ।
पञ्चकोशविवेकेनलभन्तेनिर्वृतिंपराम् ॥

உபதேசமவாப்யைவமாசார்யாத்தத்வதர்சிந: ।
பஞ்சகோசவிவேகேநலபந்தேநிர்வ்ருதிம்பராம்॥ ௩உ௰ ॥

ஏவம்	இப்படி சற்கருமபரிபாகம் வந்தவுடனே
தத்வதர்சிந:	கூடஸ்த பிரமைக்கிய ஞானத்தை யுடையவரா யிருக்கிற
ஆசார்யாத்	சற்குருவினிடத்தினின்று
உபதேசம்	(தத்வமஸ்யாதி மகாவாக்கிய) உபதேசமாகிற சிரவணத்தை
அவாப்ய	அடைந்து
பஞ்சகோசவிவேகேந	அன்னமயாதி பஞ்சகோசங்களுடையவிவேகத்தினுலே
பராம் நிர்வ்ருதிம்	பரமோக்ஷத்தை
லபந்தே	அடைகிறுர்கள்

இ-தி. ஐந்துகோட்டைக்குள் வைத்திருக்கிறநிதியை இஷ்டன்கொடுத்த திறவுகோலால் அதைத்திறந்து அந்தநிதியையெடுத்து நித்தியசுகியாய் வாழ்வதுபோலவுமி.

அ-கை. பஞ்சகோசங்களின் நாமங்களென்ன, அவைகளால் வந்திருக்கிற கெடுதியென்னவென்று கேட்டால் அதற்குத்தரம் சொல்லுகிறுர்.

अन्नंप्राणोमनोबुद्धिरानन्दश्चेतिपञ्चते ।
कोशास्तैरावृतस्स्वात्माविस्मृत्यासंसृतिंव्रजेत् ॥

அந்நம்ப்ராணோ மநோபுத்திராநந்தஶ்சேதி பஞ்சதே । கோஶா
ஸ்தைராவ்ருதஸ்ஸ்வாத்மாவிஸ்ம்ருத்யாஸம்ஸ்ருதிம்வ்ரஜேத் ॥ ௩௩ ॥

தே அவைகள்
அந்நம் அன்னமயமென்றும்
ப்ராண: பிராணமயமென்றும்
மந: மனோமயமென்றும்
புத்தி: விஞ்ஞானமயமென்றும்
ஆநந்த: ச ஆனந்தமயமென்றும்
இதி பஞ்ச இப்படி ஐந்துகளான
கோஶா: { கோசங்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன
ஸ்வாத்மா (சாக்ஷியாகிய) ஆத்துமா
தை: அந்த பஞ்சகோசங்களினாலே
ஆவ்ருத: (ஸந்) மறைக்கப்பட்டவராகி
விஸ்ம்ருத்யா { (தன் சாக்ஷித்வஞானத்தின்) மறதியினாலே
ஸம்ஸ்ருதிம் ஜனனமரணாதிதுன்பத்தை
வ்ரஜேத் அடைகிறார்

வி-ம். ஆத்துமாதன்னாலுண்டாக்கப்பட்ட கோசங்களால் அத்வைதானந்தனைதான் மறைக்கப்படுவதால் அதற்குகோசமென்றுபெயர் ஏற்பட்டது.

இ-தி- உலகத்தில் கோசகாரமென்ற பட்டுப்பூச்சி தன்னாலுண்டுபண்ணப்பட்டநூலைக்கொண்டு தானேதுக்கப்படுவதுபோலும், ஜலமானது தன்னாலுண்டாக்கப்பட்ட பாசியால் மறைக்கப்பட்டதுபோலும், அக்கினியானதுதன்னிடத்திலுண்டான சாம்பலால் மறைக்கப்பட்டதுபோலும் ஆகாசமானதுதன்னிடத்திலுண்டான மேகத்தால் மறைக்கப்பட்டதுபோலுமறி.

ச-கை. அந்தகோசங்களின் சுருபத்தை காண்பிவிக்கிறார்.

स्यात्पञ्चीकृतभूतोत्थोदेहस्स्थूलोन्नसंज्ञिकः ।
लिंगेतुराजसैःप्राणैःप्राणःकर्मेन्द्रियैस्सह ॥
सात्विकैर्धीन्द्रियैस्साकंविमर्शात्मामनोमयः ।
तैरेवसाकंविज्ञानमयोधीर्निश्चयात्मिका ।
कारणेसत्वमानन्दमयोमोदादिवृत्तिभिः ॥

ஸ்யாத்பஞ்சீக்ருதபூதோத்தோதேஹஸ்ஸ்தூலோந்நஸம்ஜ்ஞிக: ।
லிங்கேதுராஜஸை:ப்ராணை:ப்ராண:கர்மேந்த்ரியைஸ்ஸஹ ॥
ஸாத்விகைர்தீந்த்ரியைஸ்ஸாகம் விமர்ஶாத்மாமநோமய: ।
தைரேவஸாகம்விஜ்ஞாநமயோதீர்நிஶ்சயாத்மிகா ।
காரணேஸத்வமாநந்தமயோமோதாதிவ்ருத்திபி: ॥ ௩௪ ॥

பஞ்சீக்ருதபூதோத்த: பஞ்சீகிருதபூதத்தில் நின்று உண்டானதாயும்

Koviloor Digital Library

ஸ்தூலம் ஸ்தூலமாயுமிருக்கிற
தேஹம் தேகமானது
அந்நஸம்ஜ்ஞகம் அன்னமயகோசமாக
ஸ்யாத் ஆகிறது
லிங்கே. சூக்குமசரீரத்திலும்
ராஜஸைஃ { ரஜோகுணசமஷ்டிவியஷ்டியிலுண்டான
ப்ராணைஃ பிராணங்களோடும்
கர்மேந்த்ரியைஃ ஸஹ { கர்மேந்திரியங்களோடுங்கூடி
ப்ராணஃ பிராணமயகோசமாகிறது
ஸாத்விகைஃ { சத்துவகுணத்தினுலுண்டாயிருக்கிற

தீந்த்ரியைஃ ஸஹ { ஞானேந்திரியங்களோடேகூடி [ப
விமர்சாத்மா. ஆலோசனையானவிருத்தி
மநோமயஃ மனோமயகோசமாகிறது
தைரேவ { அந்த ஞானேந்திரியங்களோடேகூடியே
நிஸ்சயாத்மிகா தீஃ { நிச்சியவடிவமாயிருக்கிற புத்தி விருத்தியானது
விஜ்ஞாநமயஃ விஞ்ஞானமயகோசம்
காரணே காரணசரீரத்திலிருக்கிற
ஸத்வம் மலினசத்துவமானது
ப்ரியாதிவ்ருத்திபிஃ { பிரியமோதபிரமோத விருத்திகளினுலே
ஆநந்தமயஃ ஸ்யாத் { ஆனந்தமயகோசமாக ஆகிறது.

அ-கை இப்படிஸ்தூலதேகாதிகளை அன்னமயாதி கோசமென்று ஜடமாய்சொன்னுல் சுருதியால் அன்னமயர் அதற்குள் பிராணமயர் அதற்குள்மனோமயர் அதற்க்குள்விக்ஞானமயர் அதற்குள் ஆனந்தமயரென்று ஆத்துமாவாகச்சொல்லி யிருக்கும்பொழுது நீங்கள் அவைகளை ஜடமாகஎப்படி சொல்லக்கூடுமெனில்.

तत्तत्कोशैस्तुतादात्म्यादात्मातत्तन्मयोभवेत् ॥

தத்தத்கோசைஸ்து தாதாத்ம்யாதாத்மா தத்தந்மயோபவேத் ॥

ஆத்மா. ஆத்துமாவும் (ல்
தத்கோசைஃ அந்தந்த கோசங்களி
தாதாத்ம்யாத் நானென்ற தன்மையால்
தத்தந்மயஃ அந்தந்த கோசமயராக
பவேத் பவிக்கிறுர்

வி-ம். (து) யென்றசய்தத்தால் ஆத்துமாவுக்கு கோச விலக்ஷணத்துவம்குறிப்பிக்கப்படுகிறது.

இ-தி. ராஜன் நீச்ஸ்திரீயை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டதால்சேவுகன் அம்மாவென்று அழைக்கும்படி நேரிடுவதுபோலவறி.

அ-கை. அப்போது இவ்விதமாயிருக்கிற ஆன்மாவுக்கு பிரமத்வமெப்படி சித்திக்குமெனில் கோசவிவேகத்தால் சித்திக்குமென்று சொல்லுகிறுர்.

अन्वयव्यतिरेकाभ्यांपञ्चकोशविवेकतः ।
स्वात्मानंततउद्धृत्यपरंब्रह्मप्रपद्यते ॥

Koviloor Digital Library

𑌅𑌨𑍍𑌵𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌪𑌞𑍍𑌚𑌕𑍋𑌶𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 |
𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌤𑌤𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 || ௩௭ ||

𑌅𑌨𑍍𑌵𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 { அன்வயவியதிரேக யுக்திகளால்
𑌪𑌞𑍍𑌚𑌕𑍋𑌶𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 { சொல்லப்போகிறபஞ்சகோசங்களுடைய விவேகத்தினலே
𑌤𑌤𑌃 அந்த கோசங்களிலேயிருந்து
𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 சாக்ஷியானதன்னை
𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 உயரவெடுத்துவிட்டு
𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 பரபிரம்மமாக
𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ஆகிறார்

இ-தி. வெகுகாலமாய் ஐந்துமடுவின் கயமானபள்ளத்தில் விழுந்திருந்த ஒருகிழவனைகரையேற்றியபின் அவன்வீடுபோய் சேர்வதுபோலவாம்.

அ-கை. பிரகிருதஅன்வய வியதிரேகங்களின் தன்மையைசவிஸ்தாரமாய் காண்பிவிக்கிறார்.

अभानेस्थूलदेहस्यस्वप्नेयद्भानमात्मनः ।
सोन्वयोव्यतिरेकस्तत्भानेन्यानवभासनम् ॥

𑌅𑌭𑌾𑌨𑍇𑌸𑍍𑌥𑍂𑌲𑌦𑍇𑌹𑌸𑍍𑌯𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌯𑌦𑍍𑌭𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 |
𑌸𑍋𑌨𑍍𑌵𑌯𑍋𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌸𑍍𑌤𑌦𑍍𑌭𑌾𑌨𑍇𑌨𑍍𑌯𑌾𑌨𑌵𑌭𑌾𑌸𑌨𑌂 || ௩௮ ||

𑌸𑍍𑌥𑍂𑌲𑌦𑍇𑌹𑌸𑍍𑌯 ஸ்தூலதேகம்
𑌅𑌭𑌾𑌨𑍇(𑌸𑌤𑌿) தோன்றாத
𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 சுவப்பனவஸ்தையில்
𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 ஆத்துமாவினுடைய
𑌯𑌤𑍍 யாதொருஸ்வப்னசாக்ஷியின்
𑌭𑌾𑌨𑌂 ஞானமுண்டோ
𑌸𑌃 அதுவே
𑌅𑌨𑍍𑌵𑌯𑌃 ஆத்துமாவுக்கு அனுவிருத்தி
𑌤𑌦𑍍𑌭𑌾𑌨𑍇 { அந்த ஆத்துமவிளக்கமிருக்கும்போது
𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑌵𑌭𑌾𑌸𑌨𑌂 { ஸ்தூலதேகத்தின்தோற்றாமையே
𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌃 வியாவிருத்தி யென்றறி

வி-ம். இந்தபிரகாணத்தில் அன்வயத்திற்கு அனுவிருத்தியும் வியதிரேகத்திற்கு வியாவிருத்தியும், சொல்லப்படுகிறது.

இ-தி. தோட்டமே சம்பந்தமில்லையென்றால் அதிலுள்ளபலாபலன்கள்எப்படிசம்பந்தப்படாதோ, அப்படிஇத்தேகம் நாமல்லாதபோது தேகசம்பந்தமான சகலமும் நமக்கில்லையென்றறியதக்கது. இன்னும் ஒருயுக்தி, வஸ்திரமில்லாதபோது இத்தேகமிருப்பதும் இத்தேகம் இருக்கும்போதெல்லாம்அதின்மைபோலும்அறி.

அ-கை. இப்படிஸ்தூலதேகத்தை ஆன்மாவன்றென்று போதிக்கிறஅன்வயவியதிரேகத்தை காண்பிவித்து லிங்கதேகத்தையும் அப்படி காண்பிக்கிறார்.

लिंगाभानेसुषुप्तौस्यादात्मनोभानमन्वयः ।
व्यतिरेकस्तुतद्भानेलिंगस्याभानमुच्यते ॥

Koviloor Digital Library

ஸுஷுப்த்யபாநெ பாநம் து ஸமாதாவாத்மநோந்வயஃ |
வ்யதிரேகஸ்த்வாத்மபாநெ லிங்கஸ்யாபாநமுச்யதெ || ௩௯ ||

ஸுஷுப்த்யபாநெ	லிங்கதேகம் தோற்றாத	ஆத்மபாநெ	ஆத்மாவிளக்கமற்போ திருக்கும்போது
ஸமாதௌ	ஸுஷுப்தியில்	லிங்கஸ்ய	லிங்கதேகத்திற்கு
பாநம்	அவ்வாவிற்று	அபாநம்	விளங்காமையே
ஸாக்ஷிப்ரகாசமான விளக்கமே		வ்யதிரேகஃ	வியாவிருத்தியென்று
அந்வயஃ	அநுவிருத்திருக்கிறது	உச்யதெ	சொல்லப்படுகிறது

இ-தி. கண்ணாட்டியில்லாதபோது முகமிருக்கிறதும் முகமிருக்கும்போதெல்லாம் அதின்மைபோலுமாம்.

அ-கை. பஞ்சகோசவிவேகத்தை ஆரம்பித்து லிங்கதேக விவேகஞ்செய்தது, பிரகிருதவிரோதமேயெனில், பிராணமய மனோமய விஞ்ஞானமயங்கள் மூன்றும் லிங்கதேகத்தில் அந்தர்ப்பாவமானதால், பிரகிருதவிரோதமில்லையென்று சொல்லுகிறார்.

இ-தி. பன்னிரண்டுமரக்கால் என்பதற்கும் ஒருகலமென்பதற்கும் பேதமில்லாததுபோலவும் ஸ்திரீபுருஷ நபும்ஸகனென்கிற மூன்றுசொல்லும் மனிதனென்கிறசொல்லுக்குள் அடங்கியிருப்பதுபோலுமென்று சொல்லுகிறார்.

तद्विवेकाद्विविक्तास्स्युःकोशाःप्राणमनोधियः ॥

தத்விவேகாத்விவிக்தாஸ்ஸ்யுஃகோஶாஃப்ராணமநோதியஃ|| ௪௦||

தத்விவேகாத்	அந்தலிங்கதேகவிவேகத்தினாலே	கோஶாஃ	கோசங்களானவை
ப்ராணமநோதியஃ	பிராணமயமனோமய விஞ்ஞானமயங்களென்ற	விவிக்தாஃ	பிரிக்கப்பட்டவைகளாக
		ஸ்யுஃ	ஆகின்றன

அ-கை. அது எதினாலெனில்..

तेहितत्रगुणावस्थाभेदमात्रात्पृथक्कृताः ॥

தேஹி தத்ர குணாவஸ்தாபேதமாத்ராத்ப்ருதக்க்ருதாஃ|| ௪௧||

தே. ஹி	அந்த மூன்று கோசங்களும்	ப்ருதக் க்ருதாஃ	தொழில்களின் பேதமாத்திரத்தால் வேறாகச்சொல்லப்படுகின்றன
தத்ர	அந்த லிங்கதேகத்தில்		
குணாவஸ்தாபேதமாத்ராத்	முக்குணங்களின் பேதத்தினால்		

இ-தி. ஒருஸ்தூலதேகத்தில் கண்டத்திற்குமேல் உத்தமமென்றும், இடுப்புவரைமத்திமமென்றும், அதற்குக்கீழே அதமமென்றும் சொல்லப்படுவதுபோலவாம்.

Koviloor Digital Library

அ-கை. இப்போது கோசாதீதவிவேக உபாயம் சொல்லுகிறார்.

सुषुप्त्यभानेभानन्तुसमाधावात्मनोन्वयः ।
व्यतिरेकस्त्वात्मभाने सुषुप्त्यनवभासनम् ॥

ஸுஷுப்த்யபானே பானந்து ஸமாதாவாத்மனோந்வய: ।
வ்யதிரேகஸ்த்வாத்மபானே ஸுஷுப்த்யனவபாஸனம்॥ ௬௧॥

ஸுஷுப்த்யபானே } சுஷுப்திவிளங்காத
ஸமாதௌ சமாதியில்
ஆத்மன: ஆன்மாவினுடைய
பானந்து விளக்கமே
அந்வய: அநுவிருத்தித்திருக்கிறது

ஆத்மபானே } ஆன்மாவினுடைய விளக்க மிருந்தும்
ஸுஷுப்த்யனவபாஸனம் } சுஷுப்தியென்ற ஒன்று மறியாமை யில்லாமையானதே
வ்யதிரேக: நிவர்த்தித்துப்போனது

வி-ம். இதிலொரு அநுமானம், பிரத்தியகாத்துமா கோசங்களுக்கு வேறாக யிருக்கத்தக்கவர், அவைகள் ஒன்றிலொன்றில்லாம லிருந்தும், தான் அப்படிப் போகாமல், எப்போதுமிருக்கிறபடியால் யாதொன்று போய்க்கொண்டிருந்தாலும் யாதொன்றுபோகவில்லையோ, அது அவைகளுக்குவேறு, எப்படி புஷ்பங்களுக்கு நார்வேறாகுமோ, பசுவின்வெளுப்பு நிறம்முதலானது ஒருநிறத்தில் ஒருநிறமில்லாமல் கண்டமாயிருந்தாலும் பசுவென்றஜாதி எல்லாநிறங்களிலும் அகண்டமாயெப்படி இருக்கிறதோ, அப்படியென்றறி.

அ-கை. அன்வயவியதிரேகங்களினாலே பஞ்சகோசத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஆத்துமாவிற்கு பிர்மத்துவம் சித்திக்குமென்று, சொன்னதற்குபிரமாணமாக அப்படிச்சொல்லுகிற கடவல்லியுபநிஷத்தின் வாக்கியத்தை நிரூபிக்கிறார்

यथामुञ्जादिषीकैवमात्मायुक्त्यासमुद्धृतः ।
शरीरत्रितयाद्धीरैःपरंब्रह्मैवजायते ॥

யதாமுஞ்ஜாதிஷீகைவமாத்மாயுக்த்யாஸமுத்த்ருத: ।
ஶரீரத்ரிதயாத்தீரை:பரம்ப்ரஹ்மைவஜாயதே॥ ௬௨॥

முஞ்ஜாத் இஷீகா யதா முஞ்சிப்புல்லிலிருந்து நடுவிலிருக்கிற ஆணியானது எப்படியெடுக்கப்படுகிறதோ
ஏவம் அப்படிப்போல இவ்விதமாக
ஶரீரத்ரிதயாத் } ஸ்தூலசூக்குமகாரணதேகத்திலிருந்து

தீரை: சாதனமுள்ள அதிகாரிகளால்
ஆத்மா யுக்த்யா } ஆன்மானவர் அன்வயவியதிரேகயுக்தியால்
ஸமுத்த்ருத: (ஸந்) } நன்றாக கரையேற்றப்பட்டவராய்
பரம்ப்ரஹ்மைவ பரப்பிரமமாகவே
ஜாயதே ஆகிறார்

Koviloor Digital Library

தா-ம். பிதானந்தரூபமான லக்ஷணைப்படி கூடஸ்தபிர்மங்களிரண்டுக்கும் சமானமென்பதே பிர்மஞானம்.

இ-தி. கிணறுதோண்டினபிறகு தோன்றுகிற ஆகாசமே எங்கும்பொருந்தி முழுதுமிருக்கிற மஹாகாசமாய் விளங்குவதுபோலவாகும்.

அ-கை. இதுவரையில்சொன்ன கிருந்தத்தால் சபலமானதத்துவஞானம் நிரூபிக்கப்பட்டதால் (மேல்கிரந்தம் ஆரம்பிக்கவேண்டுவதில்லையே) எனில் அந்தஆரம்பம் சித்திக்கும்பொருட்டுஇப்போதுசொல்லப்பட்ட அர்த்தத்தை யனுசரித்து மேல்கிரந்ததாற் பரியத்தைச்சொல்லுகிறார்.

परापरात्मनोरेवंयुक्त्यासंभावितैकता ।
तत्वमस्यादिवाक्यैस्साभागत्यागेनलक्ष्यते ॥

பராபராத்மநோரேவம்யுக்த்யாஸம்பாவிதைகதா ।
தத்த்வமஸ்யாதிவாக்யைஸ்ஸாபாகத்யாகேநலக்ஷ்யதே ॥ ௩௩

பராபராத்மநோ: கூடஸ்தபிர்மங்களுக்கு
ஏவம் இப்படி
யுக்த்யா யுக்தியினாலே
ஏகதா ஏகத்துவமானது
ஸம்பாவிதா சம்பவிக்கப்பட்டதோ
ஸா அந்த ஏகத்வமானது
தத்த்வமஸ்யாதிவாக்யை: தத்துவமஸ்யாதிவாக்கியங்களால்
பாகத்யாகேந விட்டுவிடாத லக்ஷணையினால்
லக்ஷ்யதே காண்பிவிக்கப்படுகிறது

இ-தி. யுக்தியினால்புகைவண்டி யேற்படுத்தப்பட்ட விதமே சித்தநூல்களிலும்,அப்படி-பஞ்சபூதங்களினுடைய சேர்க்கையினாலேயே (வேகமாதிகளுண்டாகுமென்று சொல்லும்.)

அ-கை. (தத்துவமசியென்ற)வாக்கியார்த்த ஞானத்திற்கு(தத்) என்கிறபதம் முந்தியிருப்பதால் (தத்) என்றபதத்தின் வாச்சியார்தம் சொல்லுகிறார்.

जगतोयद्दुपादानंमायामादायतामसीम् ।
निमित्तंशुद्धसत्वांतामुच्यतेब्रह्मतद्गिरा ॥

ஜகதோயதுபாதாநம்மாயாமாதாயதாமஸீம் ।
நிமித்தம்ஶுத்தஸத்வாந்தாமுச்யதேப்ரஹ்மதத்கிரா ॥ ௩௪

யத் ப்ரஹ்ம யாதொரு பிர்மமைதன்னியமானது
தாமஸீம் தமோகுணப்பிரதானமாயிருக்கிற
மாயாம் மாயாசக்தியை
ஆதாய கிரகித்து
ஜகத: ஜகத்திற்கு
உபாதாநம் உபாதானகாரணமாகவும்
ஶுத்தஸத்வாம் சுத்தசத்துவபிரதானமான
தாம் அந்த மாயாசக்தியை
(ஆதாய) கிரகித்து
(ஜகத:) ஜகத்திற்கு

கோவிலூர் ஆதீனம்

Koviloor Digital Library

ஸித்தா   திரிக்க காரணமாயிருக்கிற
ஸம்ஹத்ரூபா அந்தப்பிரமனைதன்வியமே
தத் பீதா தத் என்ற சொல்லினால்
உச்யதே சொல்லப்படுகிறது

இ-தி. படைகளையும் ஆஞ்ஞையுமுடையவன் அரசனென்று சொல்லப்படுவதுபோலும் தோல்(சக்கை) ரசங்களோடே கூடியதைக் கரும்பு என்பதுபோலுமறி.

அ-கை. அவாச்சியார்த்தத்தைச் சொல்லுகிறார்.

यदामलिनसत्वान्तांकामकर्मादिदूपिताम् ।
आदत्तेतत्परंब्रह्मत्वंपदेनतदोच्यते ॥

யதாமலிநஸத்வாந்தாம்காமகர்மாதிதூஷிதாம் ।
ஆதத்தேதத்பரம்ப்ரஹ்மத்வம்பதேநததோச்யதே ॥ ௫௯ ॥

பரம்ப்ரஹ்ம பரப்பிரமமானது
யதா எப்போது
காமகர்மாதிதூஷிதாம்
ஆசையென்ற தமோகுணத்தாலும் கர்மமென்ற ரஜோகுணத்தாலும் தூஷிக்கப்பட்டு கெட்டதாயும்

மலிநஸத்வாம் } அதினால் மலினப்பட்ட ஸத்வமாயிருக்கிற
தாம் அந்த அவித்தியாசக்தியை
ஆதத்தே கிரகிக்கிறதோ
தத் அந்தப்பிரமமானது
த்வம்பதேந த்வம்பதவாச்சியமாக
ததா அப்போது
உச்யதே சொல்லப்படுகிறது

இ-தி. மட்டைகொட்டாங்கச்சி ரசங்களோடே கூடியதேங்காய்போலும் சகதியில்கிடக்கிற வெல்லக்கட்டிபோலும் நிகிருஷ்டமானவேலைக்கு ஒப்புக்கொண்ட கூலிக்காரன்போலுமறி.

அ-கை. இப்படித்தப்தத்துவம் பதார்த்தங்களைச் சொல்லி வாக்கியார்த்தத்தைச்சொல்லுகிறார்.

त्रितयीमपितामुक्त्वापरस्परविरोधिनीम् ।
अखण्डंसच्चिदानन्दंमहावाक्येनलक्ष्यते ॥

த்ரிதயீமபிதாமுக்த்வாபரஸ்பரவிரோதிநீம் ।
அகண்டம்ஸச்சிதாநந்தம்மஹாவாக்யேநலக்ஷ்யதே ॥ ௬௦ ॥

பரஸ்பரவிரோதிநீம் } ஒன்றுக்கொன்று விரோதியாயும் [கிற
த்ரிதயீம் அபி முக்குணங்களுமாயிருக்
தாம் அந்த மூலப்பிரகிருதியை
முக்த்வா விட்டு [தாவாக்கியத்தினாலே
மஹாவாக்யேந தத்துவமஸியென்ற ம
அகண்டம் } தேசகால வஸ்துக்களால் கண்டிக்கப்படாததாயும்

Koviloor Digital Library

ஸச்சிதாநந்தம்	சச்சிதானந்தமாயுமிருக்கிற (பிர்மமானது)	லக்ஷ்யதே	லக்ஷணையினால் போதிக்கப்படுகிறது

இ-தி. கரும்பினும் தேங்காயினுமிருக்கிற அசாரங்களை தள்ளி ஸாரமான இரண்டினையும் ஒன்றாய்ச் சேர்ப்பதுபோலுமாம்.

அ-கை. இப்படிவிட்டுவிடாத லக்ஷணையினால் வாக்கியார்த்தஞான மெங்கே பார்க்கப்பட்டதெனில்.

सोयमित्यादिवाक्येपुविरोधात्तदिदन्तयोः ।
त्यागेनभागयोरेकआश्रयोलक्ष्यतेयथा ॥

ஸோயமித்யாதிவாக்யேஷு விரோதாத்ததிதந்தயோ: |
த்யாகேந பாகயோரேக ஆச்ரயோ லக்ஷ்யதே யதா || ௪௰௭ ||

ஸ: அயம் இத்யாதிவாக்யேஷு	சோயம் தேவதத்தனென்கிற இதுமுதலான வாக்கியங்களில்		
ததிதந்தயோ:	அந்த இந்த தேசகாலாதிகளுக்கு	ஏக:	விருத்த மன்னியிலிருக்கிற
விரோதாத்	விரோதமாயிருப்பதினாலே	ஆச்ரய:	இரண்டுக்குமாதாரமான தேவதத்தன் ஒருவனே
பாகயோ:	அந்த விருத்தாம்சங்களின்	யதா	எப்படி.
த்யாகேந	பரித்தியாகத்தினால்	லக்ஷ்யதே	காண்பிக்கப்படுகிறானோ

இ-தி. அந்தராஜனே இந்தபரிசாரகனென்ற சொல்லில் விருத்தமானபடைகளையும் ஆஞ்ஞையும் கரித்துணியையும் கரண்டியையும்விட்டு ஆளை ஒருவனாகக்காட்டுவதுபோலவாம்.

அ-கை. இப்படிதிருஷ்டாந்தம்சொல்லி தாஷ்டாந்தம்சொல்லுகிறார்.

मायाविद्येविहायैवमुपाधीपरजीवयोः ।
अखण्डंसच्चिदानन्दंपरंब्रह्मैवलक्ष्यते ॥

மாயாவித்யே விஹாயைவமுபாதீ பரஜீவயோ: |
அகண்டம் ஸச்சிதாநந்தம் பரம் ப்ரஹ்மைவ லக்ஷ்யதே || ௪௰௮ ||

பரஜீவயோ:	ஈசுவரத்துவத்திற்கும் ஜீவத்துவத்திற்கும்	அகண்டம்	அகண்டமாயும்
உபாதீ	உபாதிகளாயிருக்கிற	ஸச்சிதாநந்தம்	சச்சிதானந்தமாயும்
மாயாவித்யே	மாயாவித்தைகளை	பரம்	சிரேஷ்டமாயுமிருக்கிற
விஹாய ஏவ	தள்ளித்தானே	ப்ரஹ்ம ஏவ	பிர்மமே
		லக்ஷ்யதே	லக்ஷணையினாலேபோதிக்கப்படுகிறது

இ-தி. மலைபோலேயும் பூனைகுட்டிபோலேயும் எடுத்த வடிவத்தைவிட்ட அனுமார், ஒருவராகவேவிளங்கினதுபோலவாம்.

Koviloor Digital Library

அ-கை. மறைவாக்கியத்தினல் லக்ஷிப்பிக்கப்படுகிறவஸ்து, சவிகற்பமா நிர்விகற்பமாவென்று விகற்பித்து பிரதமபக்ஷத்தில் பூர்வபக்ஷி (தோஷம் சொல்லுகிறன்.)

सविकल्पस्यलक्ष्यत्वेलक्ष्यस्यस्यादवस्तुता ॥

ஸவிகல்பஸ்யலக்ஷ்யத்வேலக்ஷ்யஸ்யஸ்யாதவஸ்துதா॥ ௬௯॥

ஸவிகல்பஸ்ய	ஜாத்யாதிபேதங்களோடே கூடியதுசவிகற்பம் (அது)	லக்ஷ்யஸ்ய	அந்த லக்ஷியத்திற்கு
லக்ஷ்யத்வே (வா.கி)	மறைவாக்கியத்தினல் லக்ஷிப்பிக்கப்படுமானல்	அவஸ்துதா	மித்தியாத்துவமானது
		ஸ்யாத்	உண்டாய்விடும் (ஆகையால் முதலாவதுபக்ஷங்கூடாது

இ-தி. சொப்பனத்தில் கற்பிதமான வஸ்துக்களைப்போலபொய்யாய்விடும்

அ-கை. இரண்டாவதுபக்ஷத்திலும் அவன்தோஷம் சொல்லுகிறன்.

निर्विकल्पस्यलक्ष्यत्वंनदृष्टंनचसंभवी ॥

நிர்விகல்பஸ்யலக்ஷ்யத்வம்நத்ருஷ்டம்நசஸம்பவீ॥ ௬௯ற॥

நிர்விகல்பஸ்ய	நாமஜாத்தியாதிரகித நிர்விகற்பத்திற்கு	ந த்ருஷ்டம்	காணப்படவில்லை
லக்ஷ்யத்வம்	லக்ஷியமாயிருத்தல்	ந ச ஸம்பவீ	ஒருக்காலும் சம்பவிக்கமாட்டாது

இ-தி. சுஷுப்தியில் நிர்விகற்பமான ஸ்வபாவம் ஒருவராலும் காணப்படாததுபோலவாம்.

அ-கை. சித்தாந்திசொல்லுகிறர் நீகேட்டசங்கையிலேயே, அதற்குத்தரமிருப்பதாலிந்த ஆக்ஷேபம்செய்யக் கூடாதென்று, விகற்பபூர்வகமாக தோஷஞ்சொல்லுகிறர்.

विकल्पोनिर्विकल्पस्यसविकल्पस्यवाभवेत् ।
आद्येव्याहतिरन्यत्रानवस्थात्माश्रयादयः ॥

விகல்போநிர்விகல்பஸ்யஸவிகல்பஸ்யவாபவேத்।
ஆத்யேவ்யாஹதிரந்யத்ராநவஸ்தாத்மாஶ்ரயாதய:॥ ௫௦ற॥

நிர்விகல்பஸ்ய	நிர்விகற்பவஸ்துவைக் குறித்தா	ஆத்யே	நிர்விகற்பமென்கிறமுதலாவதுபக்ஷத்தில்
ஸவிகல்பஸ்ய வா	சவிகற்பத்தைக்குறித்தா	வ்யாஹதி:	உன்னலேயேஅதுஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது
விகல்பம்	நீ செய்த விகற்பமானது	அந்யத்ர	சவிகற்பமென்கிறஇரண்டாவதுபக்ஷத்திலேயோவென்றால்
பவேத்	பவிக்கக்கூடியது		

Koviloor Digital Library

அநவஸ்தாத்மாச்ரயாதய: — அனவஸ்தையென்ன, ஆத்மாச்ரயமென்ன, இவைமுதலான தோஷங்களெல்லாம் உண்டாகின்றன

வி-ம். அதுவெப்படியெனில், சவிகற்பத்தைக்குறித்து விகற்பிக்கும்பக்ஷத்தில், சவிகற்பமென்னும்போது விகற்பத்தோடே கூடியதல்லவா, இதிலிருக்கிறமூன்றும் வேற்றுமையோடேகூடியிருக்கிற விகற்பத்தினாலும், முதலாவதும்வேற்றுமையோடே கூடியிருக்கிற, விகற்பத்தினாலும், ஓரேவிகற்பம்சொல்லப்படுகிறதா, அல்லது இரண்டா, ஒன்றேயென்றால் விகற்பமாகியதான் ஒன்றுதானே, விகற்பாசிரயவிசேஷணமாக இருக்கையால், ஆசிரயமாயிருக்கிறது. அதை ஆசிரதமான விகற்பமென்றால், அப்போது ஆன்மாசிரயதோஷம்வரும் இரண்டென்றால் அப்போது மூன்றும்வேற்றுமையால் சொல்லப்படுகிறவிகற்பமும் சவிகற்பரூபமாகையால், அதிலாசிரயமான விகற்பமும் சவிகற்பமானதால்,அதற்குவிசேஷணபூதமான விகற்பமானதுமுதலாவது வேற்றுமையால் சொல்லப்படுகிறவிகற்பமா, அல்லது அந்தஇரண்டுகளுக்குமன்னியமா, முதலாவதான மூன்றும்வேற்றுமையால், சொல்லப்பட்ட விகற்பமென்னும்பக்ஷத்தில், அன்னியோன்னியாசிரயதோஷம் வருகிறது, இரண்டாவதில் தர்மவிசேஷணீபூதமானவிகற்பமானது முதலாவதுவேற்றுமையால், சொல்லப்படுகிறவிகற்பமா, அல்லது அதுவேறு,முதலில் சக்கிரகாபத்திதோஷம்வரும்,இரண்டாவதில் அதற்கும்வேறு, அதற்கும்வேறென்று அனவஸ்தாதோஷம்வரும்.

அ-கை. இப்படிச்சொன்னதூஷணம் இவிடத்தில்மாத்திரமன்று பின்னையோவென்றால், எல்லாவிடங்களிலும் இவ்விதவிகற்பபூர்வகதூஷணம்வருமென்று சொல்லுகிறார்.

इदंगुणक्रियाजातिद्रव्यसंबन्धवस्तुषु ।
समन्तेनस्वरूपस्यसर्वमेतदितीप्यताम् ॥

இதம்குணக்ரியாஜாதித்ரவ்யஸம்பந்தவஸ்துஷு |
ஸமந்தேநஸ்வரூபஸ்யஸர்வமேததிதீஷ்யதாம்|| ௫௧||

இதம் இந்ததூஷணமானது

குண க்ரியா ஜாதி த்ரவ்யஸம்பந்த வஸ்துஷு — குணமானது நிர்குணத்திலா அல்லது குணத்திலா கிரியையானது கிரியையற்றதிலா அல்லது கிரியையிலா, ஜாதியானதுமப்படியே, திரவியமானதுமப்படியே, சம்பந்தவஸ்துவுமப்படியே ஊகிக்கத்தக்கது

ஸமந்தேந சமானமாகையால் | ஸர்வம் ஏதத் இந்த சமஸ்தமும்

Koviloor Digital Library

ஸாமக்ர்யை ஸ்வரூபத:	அந்தந்த குணாதிகளின் சுவரூபத்திற்கென்று	இஷ்யதாம் அங்கீகரிக்கத்தக்கது

வி-ம். இதில் யென்னதோஷமென்றால், குணாதிகமென்ற முதலாவதில் குணமில்லாமையில்லையென்ற, தோஷமிருக்கிறது, இரண்டாவதில் ஆன்மாசிரயமுதலான தோஷமிருக்கிறது.

ச-கை. இது அசத்தான சமாதானமானால், சத்தானசமாதான மெப்படியென்று சங்கித்ததற்கு பதில்சொல்லுகிறார். ஆகையாலிப்படிச்செய்கிற விகற்பமானது அசங்கதமானதால் இந்த குணாதிகள் சமஸ்தமும் அந்தந்த வஸ்துவின் சுவரூபத்திலேயே இருக்கின்றனவென்றறி.

அ-கை. மற்றவிடங்களிலு மிப்போதுநீர்சொன்னபடி. இருக்கட்டும்பிரகிருதத்தில் என்ன ஆயிற்றெனில்.

विकल्पतद्भावाभ्यामसंस्पृष्टात्मवस्तुनि ।
विकल्पितत्वलक्ष्यत्वसंबन्धाद्यास्तुकल्पिताः ॥

விகல்பதத³பா⁴வாப்⁴யாமஸம்ஸ்ப்ருஷ்டாத்மவஸ்துநி ।
விகல்பிதத்வலக்ஷ்யத்வஸம்ப³ந்தா⁴த்³யாஸ்துகல்பிதா: ॥ ௬௨ ॥

விகல்பதத³பா⁴வாப்⁴யாம்	விகற்பமென்ன விகற்பமற்ற தன்மையென்ன இந்த இரண்டினும்
அஸம்ஸ்ப்ருஷ்டாத்மவஸ்துநி	சம்பந்தப்படாத பரமாத்துமவஸ்துவில்
விகல்பிதத்வலக்ஷ்யத்வஸம்ப³ந்தா⁴த்³யா:	விகற்பதன்மை என்ன, லட்சியத்தன்மையென்ன, சம்பந்தமுதலானவைகளென்ன

கல்பிதா:. = இவைகள் கற்பிதங்களே

வி-ம். அசங்கமான ஆன்மாவில், நீகேட்டதானசகலமும் கற்பிதமென்றறி, அது எப்படியென்றால், இந்தஆன்மா, சவிகற்பவிஷயமா, நிர்விகற்பவிஷயமா, லட்சியமா, அலட்சியமா, சம்யோகசம்பந்தமா, சமவாயசம்பந்தமா, ஆதிசப்தத்தால்திரவ்யாதிகளும் கிரகிக்கப்படுகின்றன அதில்திரவ்யமென்பதுகுணங்களுக்கு, ஆசிரமாயிருப்பது, இதைநார்கிகாள், சமவாயகாரணம் திரவ்யமென்பார்கள், கர்மமன்றியில் ஜாதிமாத்திரத்தை ஆசிரயித்திருக்கப்பட்டது குணமெனப்படும், நித்தியம் ஏகம் அநேகவிர்த்திசாமான்னியமென்று காண்பிவிக்கப்படுகிறது ஜாதியெனப்படும் சம்யோக வியோகங்களில் அசம்வாயகாரணம் கர்மமென்று கிரியையானது காண்பிவிக்கப்பட்டது இப்போது சொன்னசகலமும் சுரூபத்தில் கற்பிதங்களென்றறி.

இ-தி. சாட்சியான தன்னிடத்தில் நித்திரா சக்தியால் அனந்த விதமான சொப்பனம்கற்பிவிக்கப் படுவதுபோலும், ஆகாசத்தில் நீலாதிவர்ணம்கற்பிதம்போலவுமி, (து) என்றுசொல்கற்பிதமென்றதை யுறுதிப்படுத்துகிறது.

Koviloor Digital Library

அ-கை. இதுவரையில் சொல்லிவந்தசிரவணத்திற்கு, என்னமுடிவாயிற்ற தெனில், அதைச்சொல்லுகிருர்.

इत्थंवाक्यैस्तदर्थानुसन्धानंश्रवणंभवेत् ।

युक्त्यासंभावितत्वानुसन्धानंमननंतुतत् ॥

இத்தம்வாக்யைஸ்தததர்தாநுஸந்தாநம்ச்ரவணம்பவேத் ।

யுக்த்யாஸம்பாவிதத்வாநுஸந்தாநம்மநநந்துதத் ॥ ௫௩ ॥

இத்தம்	இப்படி	யுக்த்யா	யுக்தியினலே
வாக்யை:	மகாவாக்கியங்களினலே	ஸம்பாவித த்வாநுஸந்தாநம்	அந்த பிர்மத்துவம் சம்பவிக்கும்படியான அனுசந்தானம் யாதோ
தததர்தாநுஸந்தாநம்	அந்த பிர்மத்தினுடைய சச்சிதானந்தாதி அர்த்தத்தினுடைய அனுசந்தானமே	தத், மநநம்	அது மனனமென்று
ச்ரவணம்,பவேத்	சிரவணமாகஆகிறது	து	சொல்லப்படும்

வி-ம். இப்படிஜகத்துபாதான காரணமென்று ஆரம்பித்துசொன்னப்பிரகாரத்தால் மஹாவாக்கியங்களினலேயும் அந்தவாக்கியங்களின் அர்த்தமான ஜீவபிர்மைக்கரூபமான சுருதிசம்மந்தானு சந்தானமே சிரவணமெனப்படும், சப்தஸ்பரிசாதிகள் வேத்யங்களென்றும் அறிவே அவஸ்தாத்திரயத்தில் நித்தியமாயிருக்கிறதென்றும் அன்வயவியதிரேகங்களால் பஞ்சகோசவிவேகத்தால் முஞ்சிப்புல்லைத்தள்ளி நடுவிலிருக்கிற ஆணியை எடுக்கிறதுபோல கோசங்களைத்தள்ளி, தன்னைப்பரபிர்மமாக காணும்படியாய்ச் சொன்ன ஆலோசனை ரூபமானயுக்திசம்மந்த ஞானமேமனன மானதால் இந்தமனதும் ஆத்துமசுவரூபம் நானென்றுசந்தேகமன்றியில் விளங்குவதைசெய்யதக்கது

அ-கை. இப்போதுநிதித்தியாசனம் சொல்லுகிருர்

ताभ्यांनिर्विचिकित्सेऽर्थेचेतसस्थापितस्ययत् ।

एकतानत्वमेतद्धिनिदिध्यासनमुच्यते ॥

தாப்யாம்நிர்விசிகித்ஸேர்த்தேசேதஸஸ்தாபிதஸ்யயத் ।

ஏகதாநத்வமேதத்திநிதித்யாஸநமுச்யதே ॥ ௫௪ ॥

தாப்யாம்	அந்தசிரவணமனனங்களால்	யத்	யாதொரு
நிர்விசிகித்ஸே	நிச்சயமாயிருக்கிற	ஏகதாநத்வம்	ஏகாகாரவிருத்திப்பிரவாகமுண்டாவதான
அர்த்தே	சாக்ஷியாயிருக்கிறதன்னிடத்தில்	ஏதத்ஹி	இதுவே
ஸ்தாபிதஸ்ய	வைக்கப்பட்டிருக்கிற	நிதித்யாஸநம்	நிதித்தியாசனமென்று (யோகசாஸ்திரத்தில்)
சேதஸ:	மனதிற்கு	உச்யதே	சொல்லப்படுகிறது

Koviloor Digital Library

இ-தி. வெல்லத்தின்பாகானது மூடியில் வெல்லக்கட்டியாவதுபோலவாம்.

அ-கை. அந்தநிதித்தியாசனத்தின்பரிபாகமானசமாதியைச்சொல்லுகிருர்.

ध्यातृध्यानेपरित्यज्यक्रमाद्ध्येयैकगोचरम् ।
निवातदीपवच्चित्तंसमाधिरभिधीयते ॥

த்யாத்ருத்யாநேபரித்யஜ்யக்ரமாத்த்யேயைககோசரம் ।
நிவாததீபவச்சித்தம்ஸமாதிரபிதீயதே ॥ ௫௫ ॥

த்யாத்ரு த்யாநே	தியானம்பண்ணுகிறவன் தியானம் இரண்டையும்
பரித்யஜ்ய	தள்ளி
க்ரமாத்	கிரமமாக
நிவாத தீபவத்	காற்றில்லாதவிடத்தில் வைத்த தீபம்போல்
த்யேயைக கோசரம்	தியானிக்கபடுகிறவஸ்துமாத்திரமான
சித்தம்	சித்தமே
ஸமாதி:	திருபுடியற்றசமாதியென்று
அபிதீயதே	சொல்லப்படுகிறது

இ-தி. வேடர்களோடேசேர்ந்து வேடனென்றுநினைத்திருந்த ராஜகுமாரன்ஜோஸ்யர்மூலமாய் நீயிராஜகுமாரனென்று சொன்னலக்ஷணத்தைக்கேள்விப்பட்டு, நம்பினதேசிரவணம், அதையுக்தியுடன் மனனத்தினல் தான்ராஜாவென்று ஒத்துப்பார்த்துக்கொண்டதேமனனம், முன்பழக்கத்தால் நான் வேடனென்றுவருவதை நான்அரசனென்று ததாகாரவிர்த்தியா யிருப்பதே நிதித்தியாசனம், ராஜனென்ற நினைப்பும்லயித்து ராஜனுயிருப்பதேசமாதி.

அ-கை. சமாதியில்விருத்திகள் காணப்படாமையால் பிர்மகோசரமான சித்தமிருக்கிறதாக நிச்சயம்செய்யக்கூடாதே யெனில், விருத்தியிருப்பது அனுமானத்தால் அறியத்தக்கதா யிருப்பதால் நீஆக்ஷேபித்தது கூடாதென்றுசொல்லுகிருர்

वृत्तयस्तुतदानीमज्ञाताअप्यात्मगोचराः ।
स्मरणादनुमीयन्तेव्युत्थितस्यसमुद्धितात् ॥

வ்ருத்தயஸ்துததாநீமஜ்ஞாதாஅப்யாத்மகோசரா: ।
ஸ்மரணாதநுமீயந்தேவ்யுத்திதஸ்யஸமுத்திதாத் ॥ ௫௬ ॥

ததாநீம்	அந்தசமாதிகாலத்தில்
ஆத்மகோசரா:	ஆன்மாவை விஷயீகரித்துண்டாகிற
வ்ருத்தய: து	விருத்திகளானவை
அஜ்ஞாதா: அபி	அறியப்படாதவைகளாக இருந்தாலும்
வ்யுத்திதஸ்ய	சமாதியிலிருந்து எழுந்தவனுக்கு
ஸமுத்திதாத்	இதுவரையில் நிர்விகற்பமாய் சுகமாக சமாதியிலிருந்தேனென் றுண்டாகிற
